வாரப் பதிப்பு விலை சதம் 25

தலைமைத் தபால் நிலையத்திற் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 19 | திருவள்ளுவர் ஆண்டு 1996 கார்த். திங்கள் 6-ம் நாள் (21—11—1965) ஞாயிற்றுக்கிழமை றஜப் 26 | இதழ் 26

# அயல்நாட்டு தூதரகங்களில்— 'வகுப்புவாதம்' எழுகிறது

## சிறுபான்மை இன ஊழியரை நசுக்கிவிடத் திட்டம்

இலங்கையிலுள்ள அயல்நாட்டுத் தூதரகங்களில் 'வகுப்புவாத நடவடிக்கைகள்' ஆரம்பமாகியுள்ளதாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. முன்னர் அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் உயர்தர உத்தியோகம் பார்த்த ஒருவருடைய நேரடித் தொடர்பின் மூலமே இச்செயல் தொடங்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

அயல் நாட்டுப் பிரதிநிதிகளுக்கான காரியாலயங்களிலும் தூதரகம், தகவல் நிலையம், கலாச்சார நிலையம் போன்றவற்றிலும் வகுப்புவாதத் துவேஷத்தைத் தூண்டிவிட முயற்சிகள் நடைபெற்று வருவதாக அறியக் கிடக்கிறது. இவ்விடங்களில் பணி புரியும் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களை இணைத்து, சில அந்தரங்கத் திட்டங்களை உருவாக்குவதில் ஒரு பிரமுகர் ஈடுபட்டுள்ளாராம். இப்பிரமுகர் முன்னுளில் அரசாங்கத் திணைக்களம் ஒன்றில் பிரதான பதவி வகித்து, தற்போது ஓய்வு பெற்றுக்கொண்டுள்ளாராம்.

தூதரகங்களிலும் அயல் நாட்டு நிறுவனங்களிலும் ஏனைய சமூகத்தவரை எவ்வாறு நடாத்த வேண்டும், சர்வ சிங்களமய நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும். என்றெல்லாம் ஊழியர்களுக்கும், சிப்பந்திகளுக்கும் இப்பிரமுகர் அறிவுரை கூறி வருகிறாராம். இத்தகைய நிறுவனங்களில் கடமை பார்க்கும் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைக்கவும், மேற்கொண்டு எவரையும் நியமனம் செய்யாமலிருக்கவும் இப்பிரமுகருடன் வேறு சிலருஞ் சேர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனராம்.

## தமிழரசுப் பிரமுகரின் வீடு தீக்கிரை

### கல்முனையில் காடையர் அட்டகாசம்

கல்முனைத் தமிழரசுக் கட்சிக் கிளையின் உபதலைவரான திரு. சாமி ஐயாத்தேவரின் வீட்டுக்குக் காடையர்கள் கோஷ்டியொன்று தீ மூட்டிவிட்டதாகச் செய்தி கிடைத்துள்ளது. கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் கல்முனைப் பகுதியில் தலைதூக்கிய காடைத்தனம் இன்னும் ஓயவில்லை என்பதையே இச்சம்பவம் காட்டுகிறது.



திரு. சாமிஐயாத்தேவர் தமிழரசுக் கட்சிக்காக பெரிதும் பாடுபடுபவர். செயலார்வம் மிகுந்தவர்; இம்மாதம் 9ம் தேதி மாலையில் அவரைத் தாக்குவதற்காக அவரது வீட்டுக்கு வந்த சில காடையர்கள் அவர் அடித்து விரட்டிவிட்டாரென்றும் அதுபற்றி அவர் போலிஸில் புகார் செய்வதற்காகச் சென்றிருந்த சமயம் சில காடையர்கள் அவரது வீட்டுக்குத் தீமூட்டிவிட்டார்களென்றும் அவரது மனைவி, மக்களின் கூச்சல் கேட்டு அயலவர் ஓடி வந்து தீயை அணைத்துவிட்டார்களென்றும் கூறப்படுகிறது.

'நீதி, நேர்மை தவறாது, கடமையுணர்வோடு நகரப் பாதுகாவலர்கள் பணிபுரிவார்களானல் காடையர்களின் இத்தகைய அட்டகாசத்தை அடக்கிவிடலா'மென கல்முனைப் பெரியார்கள் அநேகர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

காடையர்களால் தீக்கிரையாக்கப்பட்ட தமிழரசுப் பிரமுகர் திரு. சாமிஐயாத்தேவரின் வீடு இதுதான். கூரை எரிந்து கிடப்பதை இப்படத்தில் காணலாம்.

வாசிகசாலையில்

## தமிழ்ச் சஞ்சிகைகள் மறைந்து வரும் மாயம்?

கொழும்பிலுள்ள பொதுசன வாசிகசாலையில் தமிழ்ப் புத்தகங்களும் சஞ்சிகைகளும் மாயமாக மறைந்துவிடுகின்றன என்று தெரிய வருகிறது. இந்நூல்களையும் சஞ்சிகைகளையும் வேண்டுமென்றே சில அதிகாரிகள் மறைத்து வருவதாகவும் நம்பப்படுகிறது.

'கொழும்பிலே இருக்கும் பொது வாசிகசாலை கொழும்பு மாநகர சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்குவதாகும். இங்குள்ள ஏனைய மொழி நூல்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழ் நூல்கள் மிகவும் சொற்பமே. இவற்றிலும் பல நூல்கள் வாசகர்களுக்குக் கிடைப்பதில்லையாம். குறிப்

(9-ம் பக்கம் பார்க்க)



## "மெய்கண்டான்"

| | |
|---|---|
| திருக்குறட் கலண்டர் No. 1 ஸ்பெஷல் | 2-40 |
| நன்மொழிக் கலண்டர் No. 2 | 1-35 |
| மாதக் கலண்டர் (பஞ்சாங்கக் கலண்டர்) | -85 |
| சிங்களக் கலண்டர் (No. 1 கலண்டர் அளவுள்ளது) | 2-15 |
| ரேபிள் கலண்டர் (பிளாஸ்ரிக் ஸ்ராண்டுடன்) | 5-50 |
| தகரப் படம் (அழகிய பல மாதிரிகள்) | 2-75 |
| No. 1 பிளாஸ்ரிக் தமிழ் டயறி (பிளாஸ்ரிக் கவருடன்) | 2-75 |
| No. 2 பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி ,, | 2-20 |
| No. 3 பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி ,, | 3-60 |
| No. 4 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 2-20 |
| No. 5 பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி ,, | 1-75 |
| No. 6 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | 3-85 |
| No. 7 பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | 3-30 |
| No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | 3-55 |
| பிளாஸ்ரிக் சிங்கள டயறி ,, | 2-20 |
| பேர்ஸ் சிங்கள டயறி ,, | 3-30 |
| பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி ,, | 5-50 |
| No. 1 பேர்ஸ் தமிழ் டயறி (பேர்ஸ் சகிதம் With Purse) | 3-70 |
| No. 2 பேர்ஸ் திருக்குறள் டயறி ,, | 3-15 |
| No. 4 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி ,, | 3-15 |
| No. 5 பேர்ஸ் இங்கிலிஷ் டயறி ,, | 2-75 |
| No. 6 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | 4-95 |
| No. 7 பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | 4-40 |
| No. 8 அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | 5-25 |
| வலற் டயறி (Wallet Diary-மிகச் சிறந்தது) | 6-50 |
| ஜெம் டயறி (Gem Diary) பிளாஸ்ரிக் | 1-85 |
| ஜெம் பேர்ஸ் டயறி (Gem Purse Diary) | 2-75 |

இன்னும் பல உண்டு.

காகிதப் பஞ்சம் காரணமாக சொற்ப தொகையே தயாரித்துள்ளோம். பிந்தினல் கிடைப்பதரிது— இரட்டிப்பு விலை கொடுத்தும் வாங்க வேண்டி நேரிடலாம்.

மற்றும் விபரங்களுக்கு:

**மெய்கண்டான் அச்சியந்திரசாலை,**
161, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
போன் : 79141
கிளை : யாழ்ப்பாணம் — போன் : 236.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் நோக்கம் பற்றி தனிநாயக அடிகள்

# புதிய கண்ணோட்டத்தில் தமிழாராய்ச்சி

# தென்-கிழக்கு ஆசியாவில் தமிழ் பண்பாடு ஏற்படுத்திய தாக்கம்

## தனியரசு இருந்தால்...?

தமிழ் மொழியைப் புறக்கணித்து வேற்று மொழியைக் கற்பிக்க முயலும் தமிழர்களை இங்கு காண முடிகிறது. நாமே நம் மொழியைப் புறக்கணித்தால் மற்றவர்கள் போற்றி வளர்க்க முற்படுவார்களா? நமக்கென்று ஒரு அரசு இல்லாமையால் நமது மொழி பண்டைய பெருமைமிக்க சிறப்புடைய மொழியாக இருந்த போதிலும் உலகளவில் பரப்பவோ அதன் சிறப்புக்களை ஆராயவோ முடியவில்லை. ஏனைய மொழிகளின் சிறப்பியல்புகளை எடுத்துக் காட்ட பல இயக்கங்கள் உள. அந்தக் குறையை ஓரளவு தீர்க்கும் நோக்கத்துடனேயே மலேயாவில் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைக் கூட்ட நடவடிக்கையெடுத்துள்ளோம் என்று வணக்கத்திற்குரிய அறிஞர் தனிநாயக அடிகளார் கடந்த வாரம் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கூறினார். உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைப் பற்றி அவர் கூறிய கருத்துக்களே இங்கு கட்டுரை உருப் பெற்றுள்ளது.

இந்த உலகத்தில் உள்ள மொழிகளுள் பல தனிச் சிறப்புகளைக் கொண்டது தமிழ் மொழி. செல்வாக்கும் செழிப்பும் பெற்றுச் செருக்கோடுவாழ்ந்து இன்று அழிந்துவிட்ட பல மொழிகள் வாழ்ந்த காலை வாழ்ந்த மொழி தமிழ்— இன்றும் வாழ்கிறது. இறந்த காலத்தோடு நிகழ் காலத்தை இணைத்து எதிர்காலத்திலும் பயன் தரும் பெற்றி பெற்றது தமிழ் மொழி.

வேறெந்த மொழியிலும் இல்லாத இலக்கியச் செழிப்பும் பண்பும் தமிழ் மொழிக்கு உண்டு. தமிழ்மொழியில் உள்ள அகத்திணை இலக்கியத்துக்கு ஒப்பாக வேற்று மொழி இலக்கியங்களில் இல்லை என்றே கூறலாம். ஐந்திணை வகுத்து பண்பும் தூய்மையும் இணைத்துப் பாடப்பட்ட பாடல்கள் அகத்திணைப்பாடல்கள். நீதி ஒழுக்கம் உலகியல் முதலிய துறைகளில் மிகத் திறமையான உயர்வான நூல் திருக்குறள். திருக்குறள் எந்த ஒரு வகுப்பினருக்கோ சமூகத்தினருக்கோ உரிய நூலன்ற. அது உலகத்து மனிதனுக்கு அறிவுரை பகரும் பொது நூலாகும்.

### பொதுமை

இன்றைய அரசியல் கோட்பாடுகள் எல்லாவற்றிற்கும் அடித்தளமாய்த் திகழும் பிளேட்டோவின் அரசியல் கோட்பாடுகள் கூட பாகுபாடு காண்பிப்பவை. ஒவ்வொரு வகுப்பினருக்கு ஒவ்வொரு நீதியும், பெண்களுக்கு இன்னொரு நீதியும் கற்பிப்பது பிளேட்டோவின் அரசியல் கோட்பாடுகள். ஆனால் வள்ளுவர் வகுத்த அரசியல் உலகத்துக்கோர் பொது அரசியலாகும். இன்று பொருளியலில் பொருளியலின் நோக்கம் பற்றிப் பேசுகிறார்கள். இதை அன்றே வள்ளுவர் தெளிவாகக் கூறிவிட்டார்.

'பொருளல் லவரைப்பொருளாகச் செய்யும் பொருளல்லது இல்லை பொருள்'

என்று மனிதனை மனிதனாக வாழச் செய்வதே பொருளின் நோக்கமாக இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். மேலும் மனிதனுடைய வாழ்வு செழிப்புற அவனுக்குச் சிரிப்பு அவசியம் என்று இன்றைய உளவியல் ஆராய்ச்சியாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் வள்ளுவர் அன்றே சிரித்து வாழத் தெரியாதவர் கட்குப் பகலிலும் உலகம் இருண்டதாகவே இருக்கும் என்றார்.

'நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம் பகலும்பாற் பட்டன்று இருள்'

என்று சிரிப்பின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார் வள்ளுவர். வள்ளுவர் மனித இயல்புகளை மிக நுணுக்கமாக ஆராய்ந்து அறிந்திருக்கிறார். மனிதருக்கும் கயவருக்குமிடையில் வேற்றுமை காண விழைந்தவர் ஒற்றுமையையே காண்கிறார்.

'மக்களே போலவர் கயவர் அவரன்ன ஒப்பாரி யாங்கண் டது இல்'

என்று கையாளும் உவமை மிகத் தனித்தன்மை வாய்ந்தது—பொருள் செறிந்தது.

### செல்வாக்கு

இப்படியே பார்த்தால் சங்க இலக்கியங்கள் முழுவதிலுமே நல்ல பொதுப் பண்புகளைக் காண முடியும். கி. பி. 2-ஆம் நூற்றாண்டு அளவில் உரோமப்பேரரசு செல்வாக்குடன் திகழ்ந்தது. அக்காலத்தில் அங்குள்ள சிந்தனையாளர்கள் தெரிவித்த உலகப் பொதுமைக் கருத்துக்களைத் தமிழகம் அதற்கு முன்னரே தந்து விட்டது. அனைத்துலகியல் கருத்துக்கள், நாட்டுப் பொதுமைக் கருத்துக்கள் தமிழ் இலக்கியத்திலும் பண்பாட்டிலும் மிளிர்கின்றன.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றும்

'யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன் சாந் துணையுங் கல்லாத வாறு' என்றும் அனைத்துலகியல் கருத்துக்களையும், நாட்டுப் பொதுவியற் கருத்துக்களையும் தமிழ் இலக்கியங்கள் பரக்கக் கூறுகின்றன. தமிழ்ப் பண்பாட்டிலே கைம்மாறு கருதாத தன்னலமற்ற தொண்டு ஊறியிருக்கின்றது. இந்தத் தமிழ் பண்பாடு பல நாடுகளில்—முக்கியமாகத் தென்கிழக்கு ஆசியாவில் தன் செல்வாக்கை விட்டுச் சென்றுள்ளது.

### தென்-கிழக்கு ஆசியாவில்...

யப்பான், சுமாத்திரா, யாவா, தாய்லாந்து, கடாரம், பிலிப்பைன்சு, இந்தோனேசியா போன்ற பல இடங்களில் தமிழ்ப் பாண்பாட்டின் செல்வாக்கை இன்றும் காணலாம். சுமாத்திராவில் உள்ள மிகப் பெரிய மலைக்கு குறிஞ்சி என்று பெயர். இந்த மலையடி வாரத்தில் வாழும் மக்கள் சேரர், சோழர், பல்லவர் என்ற பெயருள்ள வகுப்புகளாகத் தம்மைப் பிரித்துக் கொண்டு வாழ்கின்றனர். இவர்கள் கயிலாசப் பரம்பரையினர் என்று பிரெஞ்சு அறிஞர் பிலியோசா கருதுகிறார். யாவாவில் பெரிய கோயில் உண்டு. இதன் அமைப்பு தமிழ்க் கோயில்களின் அமைப்பை ஒத்துள்ளது. இங்கு சிவனை 'மலைஅரசன்' என்றுர் அழைக்கிறார்கள். அகத்திய தொடர்பும் இருந்திருக்கிறது என்பதற்கும்சான்றுகள் உண்டு. தாய்லாந்து அரசர்களின் முடிசூட்டு விழாவில் திருப்பாவை, திருவெம்பாவை பாடப்படுகின்றது. இங்கு தமிழ் என்ற சொல் 'தமின்' என்று வழங்குகின்றது. 'தமின்' என்றால் 'கொடிய கறுப்பு இந்தியன்' என்று பொருள். இது ஒரு வேளை 12ம், 13ம் நூற்றாண்டுகளில் நடைபெற்ற சோழப் படையெடுப்பினால் ஏற்பட்ட கருத்தாக இருக்கலாம். இராசராசன் கொண்ட கடாரத்தைப் பற்றிய செய்தியைப் பெருங்கதையில் காண முடிகிறது. பத்துப் பாட்டில் 'காழகத்தின் ஆக்கம்' என்ற செய்தி குறிக்கப்படுகிறது மணிமேகலையில் ஆபுத்திரன் வரலாற்றைப் பார்க்கும் போது சாவகத்தில் இருந்த தமிழ்ப் பண்பாட்டுத் தொடர்புகள் தெரிகின்றன. கம்பர்கூட 'கல்லும் சொல்லாதோ கவி' என்று ('பவளமலர்...' என்றபாடலில்) கூறுகிறார். ஒருவேளை அவர் மகாபலிபுரத்துக் கற்சிற்பங்களைக் கண்டிருக்கலாம். இராசராசன் கண்டிய தஞ்சைப் பெருங்கோயில்தான் உலகத்தில் முதன் முதல் கட்டப்பட்ட பெருங் கட்டிடம் என்பது வரலாற்று உண்மை. இந்தோனேசியாவிலும் திருவெம்பாவை 'திரையம்பா' என்ற பெயரோடு வழங்குகின்றது. இப்படி எல்லாம் செல்வாக்குக் கொண்டிருக்கும் தமிழ்ப் பண்பாட்டை ஆராய்ந்து கொள்ள வேண்டியது எமது கடமை.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் நாட்டுக்குச் சமயப்பணி புரியவந்த மேலை நாட்டு மிசனரிகள் தமிழைக் கற்றுத் தமிழராகவே மாறியதை நாம் மறந்துவிட முடியாது. அவர்கள் தமிழின் சிறப்பை உய்த்து உணர்ந்து, பிறருக்கும் அதை எடுத்துக் காட்டினர். இவர்களுள் போப், கோல்ட்வெல், பெஸ்கி, பேசிவல் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். அண்மையில் மறைந்துவிட்ட பேரறிஞர் அல்பட் சுவைட்சர் திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்பு ஒன்றைப் படித்துவிட்டு அதைப் போன்ற இலட்சிய மேம்பாடு உயர் நோக்குக் கொண்ட இலக்கியம் வேறு இல்லை என்று கூறினர். திருவாசகத்தைப் பாராட்டினார் போப் அவர்கள்.

### பாரதியின் வேட்கை

இவ்வளவு பாராட்டுப் பெற்ற நமது மொழியையும், மொழிச் செல்வங்களையும் இந்த இருபதாம் நூற்றாண்டுக்கு ஏற்ப வளையுலகிற்கு வழங்க வேண்டும். பிறமொழிச் செல்வங்களை நமதாக்கிக் கொள்ள வேண்டும் இந்த எண்ணத்தைத் தூண்டுவது பாரதியின் பாடல்களாகும்.

'சென்றிடுவீர்எட்டுத் திக்கும்— கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!' என்று ஆணையிட்டார பாரதி அத்துடன் நின்றுவிடவில்லை.

'சேமமுற வேண்டுமெனில்<br>
தெருவெல்லாம்<br>
தமிழ் முழக்கம் செழிக்கச்<br>
செய்வீர்!<br>
பிறநாட்டு நல்லறிஞர்<br>
சாத்திரங்கள்<br>
தமிழ்மொழியிற் பெயர்த்தல்<br>
வேண்டும்!<br>
இறவாத புகழுடைய புது<br>
நூல்கள்<br>
தமிழ்மொழியில் இயற்றல்<br>
வேண்டும்<br>
மறைவாக நமக்குள்ளே<br>
பழங்கதைகள்<br>
சொல்வதிலோர் மகிமை<br>
இல்லை<br>
திறமான புலமையெனில்<br>
வெளிநாட்டோர்<br>
அதைவணக்கஞ் செய்தல்<br>
வேண்டும்.'

என்றும் அறிவுரை கூறினார். இந்த இருபதாம் நூற்றாண்டின் தேவைகள் நம்மைப் பல துறைகளில் பணி செய்யப் பணிக்கின்றன. அதைத்தான் பாரதியும் சொன்னார். இந்த அறிவுரையின் பின்னணியில் தான் இந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கூட்டப்படுகிறது. மாநாட்டை ஒட்டிச் சில தமிழ் நூல்கள் மொழிபெயர்க்கப்படும். திருக்குறள் மொழி பெயர்ப்புகளை சீனத்திலும், மலாய் மொழியிலும் வெளியிட ஏற்

(14-ம் பக்கம் பார்க்க)

## மகனுல் நிலை மாறுமோ?

"மருத மைந்தன்"


தேக்கெடுத்து உடலமைத்துத்<br>
தேன் வார்த்து மொழி பெருக்கிப்<br>
பாக்குப்பூ பல்லிணைத்துப்<br>
பவளத்தா லிதழுக்கி<br>
ஆக்கியொரு எழிற்சிலையாய்<br>
அழகு மக வெனக்களிக்க<br>
நோக்கெடுத்து ஓடுகிறாய்<br>
நோவுனக்கு இன்பமோடி?

தட்டு நிறை பழமெடுத்துத்<br>
தத்தித் தத்தி வந்து யெனைக்<br>
கிட்டி முது கிணைந்து நின்று<br>
கிள்ளைமொழி யீந்து கனி<br>
வெட்டியெனக் கூட்டுந்நிலை<br>
விலகிடுமோ மகன்வரவால்?<br>
வட்டியொடு யான் பெறவே<br>
வளருகிறான் மகன் அறிவாய்

பஞ்சணையாய் நெஞ்சளித்துப்<br>
படுத்திரவிற் றுயிலணைக்க<br>
கொஞ்சல் மொழி யீந்துருசி<br>
குவலயத்தி னிதங்காட்டி<br>
நெஞ்சினிக்க நீயணைப்பாய்<br>
நின் மகனின் வரவதனல்<br>
கெஞ்சுந் நிலை எய்திடுமோ?<br>
கிறல்விழ இதம் பொய்யோ?

வட்டி வழி சோறேந்தி<br>
வளர் மதியுங் காட்டியூட்டத்<br>
தட்டி விட்டுத் தவழ்ந்தோடி<br>
தாவியெந்தன் கால்பிடித்துப்<br>
பட்டுக்கை கொண்டழுத்திப்<br>
பருக்கைதனை உடைதுடைக்குஞ்<br>
[illegible]தையதும்<br>
இ[illegible]யூட்டிடுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுந்தரராஜ்,
லக்ஸபான எஸ்டேட்

கே: வானத்தில் வந்து கொண்டிருந்தது ஒரு நிலவு, சில நாட்களாக வாள் மாதிரி இன்னொரு நிலவு தோன்றுகிறது. அது என்ன?

ப: அது அமெரிக்கரின் போட்டி நிலவாக இருக்கலாம். வாள் மட்டுமென்ன? அணுகுண்டு நிலவுகளும் விரைவில் வரலாம்.

ஃ

சி. பரராசசிங்கம்,
பருத்தித்துறை

கே: சுதந்திரன் பத்திரிகை மாத்திரம் வாசக நேயர்களுக்கு சோதிடம் கூறுவதில்லையே?

ப: கூறுவதுண்டு அரசியற் சோதிடம். அது நிச்சயம் பலிக்கும்.

ஃ

காப்பாளர், யாழ்ப்பாணம்

கே: யான் காதலிலே தோல்வியுற்றவன். இன்னொரு பெண்ணைக் காதலிக்கலாமா?

ப: செய்யலாம். அதுவும் தோல்வி அடையாது என்பதற்கு உத்தரவாதம் இருந்தால்.

கே: சில பெண்கள் விவாகம் செய்த பின்பு காதலிக்கிறார்களே. இதன் காரணமென்ன?

ப: காதல் கலியாணத்துக்கு முன்பாகவும் ஏற்படலாம், பின்பும் ஏற்படலாம்.

பி. துரைராஜா,
கொட்டகலை

கே: ஒரு சிலர் தங்களுக்குதான் எல்லாம் தெரியுமென்று நினைக்கிறார்களே! அவர்களைப் பற்றி நீர் என்ன நினைக்கிறீர்!

ப: அநேகமாக ஒன்றும் தெரியாதவர்களே அப்படி நினைப்பார்கள். அந்த நினைப்பு எதையும் தெரிந்துகொள்வதற்கும் தடையாக இருக்கிறது.

ஃ

சு. பாலகிருஷ்ணன்,
பம்பலப்பிட்டி

கே: ரொடீசியாவில் ஒரு தலைப்பட்ச சுதந்திரப் பிரகடனம் எதிர்காலத்தில் என்ன நிலைமையை உருவாக்கும்?

ப: சுதேசிகள் ஆட்சியைக் கைப்பற்றும் நிலையை உருவாக்கும். ரொடீசியா மற்றொரு தென்னாபிரிக்காவாக ஆபிரிக்க நாடுகள் அதற்கு இடமளிக்கப் போவதில்லை.

பொ. கணேசன்,
கல்முனை-3

கே: சிறந்த முறையில் ஆட்சி நடத்த தமிழரசுக் கட்சிதான் சிறந்த கட்சி என்கிறார் என் தோழர். உங்கள் கருத்து?

ப: இதிலுமென்ன சந்தேகம்! திறமையும், உறுதியான கொள்கையும் கட்டுப்பாடும் இருப்பதால் அக்கட்சிக்குச் சிறந்த முறையில் ஆட்சி செலுத்த முடியுமென்பதில் ஐயமில்லை.

ஃ

ப. சற்குணநாதன்,
கண்டி

கே: நாகரீகம் அடைந்திருக்கும் எனக் கூறப்படும் இந்த யுகத்திலே இரண்டொரு சுயநலமற்ற மனிதர்களைத் தங்களால் கூறமுடியுமா?

ப: சுயநலமற்றவர் யாருமே இல்லை. சுயநலமற்றவன் ஒரு விநாடி கூட இவ்வுலகில் உயிர் வாழ முடியாதே!

ஃ

மோ. பங்கிராஸ்,
உயிலங்குளம்

கே: அரசாங்க அதிபர்களின் இடமாற்றத்துக்கு தமிழரசார் தலையிடு துளிக் கூட இல்லை யென்று பிரதமர் ஒப்புக்கொண்டதிலிருந்து என்ன தெரிகிறது.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
த. பெ. இல. 1183
கொழும்பு-12.
இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

ப: எதிர்க்கட்சியினர், பிரசாரம் பொய் என்று தெரிகிறது.

ஃ

ரா. ராஜதுரை,
கொள்ளுபிட்டி

கே: தாங்கள் நகைச்சுவையாக, குறிப்பாக பெண்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பதேன்?

ப: பெண்களுக்கு 'நகை' என்றால் உயிர். அதைச் சுவைப்பதற்கு நகைச் சுவைப் பதில் அவர்களுக்குப் பயன்படுமல்லவா?

ஃ

எம். எம். அபூபக்கர்,
மன்னார்

கே: அன்பு பண்பு, பாசம் காதல் என்பனவற்றுள் அதிக சக்தி வாய்ந்தது எது?

ப: பாசம்.

ஃ

இ. சந்திரசேகரம்,
சங்கானை

கே: நான் எந்தப் பெண்ணையும் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. ஆனால் சில பெண்கள் என்மீது நோட்டம் விடுகின்றனர். இவர்களிடமிருந்து தப்புவது எப்படி?

ப: கண்ணெடுத்துப் பார்க்காமல் நோட்டம் பார்ப்பது எப்படி உங்களுக்குத் தெரிந்தது? அவர்களிடமிருந்து தப்புவதற்குள்ள ஒரே வழி அவர்களைக் கண்ணெடுத்துப் பார்க்காமலிருப்பதே.

ஃ

வி. குருவாம்பாள், கண்டி

கே: எனது கல்லூரித் தோழியின் உள்ளத்தில் காதல் தீ பற்றி எரிகிறதே! நெருப்பு அணைக்கும் படையை அழைக்கலாமா?

ப: அந்தப் படையால் பயனில்லை. உலகிலுள்ள தண்ணீரெல்லாம் ஒருமிக்கத் திரட்டிக்கொண்டு வந்தாலும் காதல் தீயை அணைக்க முடியாதே!

ஃ

எம். எம். ஹசன், கம்பளை

கே: நான் 'ஓசிப் பேப்பர்' வாசிக்கிறவன். பத்திரிகை இரவல் வாங்கிப் படிப்பது தவறா?

ப: தவறு! நாம் குடியிருக்கும் வீடு இரவல், நாம் பார்க்கும் சினிமா படத்தில் குரல் இரவல். இம் மாதிரி இன்னும் பல இரவல்கள் உண்டு. இன்று இரவலின்றி மனிதன் வாழ முடியாது. ஆகவே இரவல் பத்திரிகை வாசித்தல் தவறாகாது.

எம். எம். அபூபக்கர்,
மன்னார்

கே: கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா? பெண்கள் எல்லாரையும் நம்பலாமா?

ப: எல்லாரையும் எதற்கு நம்பவேண்டும்? ஒருத்தியை நம்பினால் போதாதா?

ஃ

தருமலிங்கம்,
சாவகச்சேரி

கே: என் நண்பன் ஒரு பெண்ணைக் காதலிக்கிறான். அப் பெண்ணோ அவனைக் காதலிக்கவில்லை, அவள் என்னைக் காதலிக்கிறாள் நானோ அவளைகாதலிக்கவில்லை. இதற்கு என்ன செய்வது?

ப: இங்கு காதல் தலைகீழாய் கிடக்கிறது. மூன்று பேரும் சேர்ந்து பேசி காதலைக் கைகழுவி விடுங்கள்; பிரச்சினை தீர்ந்துவிடும்.

ஃ

ச. மு. பாலசுப்பிரமணியம்,
கொழும்பு-3

கே: 'நடைப் பிணம்' என்கிறார்களே, அது எப்படி நடைபோடும்?

ப: நடைப் பிணம் என்பது பிணம் அல்ல- வேதனைகளைச் சுமந்து கொண்டு விரக்தியின் எல்லைக் கோட்டிலே நடமாடும் மனிதன்!

கே: ஓர் அழகிய பெண் எதை அதிகமாக விரும்புவாள்?

ப: சொந்த அழகை.

ஃ

டி. ஆர். பர்னந்து,
நீர்கொழும்பு

கே: எனது நண்பன் தன் இளமனைவியின் சொற்படி ஆடுகிறானே! இதனால் தீங்கு விளையுமா?

ப: உங்கள் நண்பரிடம் சொல்லுங்கள் பெண்களின் சொற்படி எந்த வாலிபன் நடக்கிறானோ, அவனால் வாழ்க்கையில் வெற்றிபெற முடியாது என்று.

ஃ

'காதல் பித்தன்',
காலி

கே: காதல் என்றால் என்ன?


ப: காதல் என்றால் மனமும், மனமும் சேருதல்.

கே: கல்லூரிக் காதல் பற்றி உங்கள் கருத்தென்ன?

ப: ஒரு கனவு.

கே: காதலி மனைவியாக மாறினால் என்ன நடக்கும்?

ப: இன்பம் துன்பமாக மாறிவிடும்.



## தேசியத் திண்டாட்டம்

இவ்வருட கிறிஸ்தோதயப் பெருநாளுக்கு சாராயத் தட்டுப்பாடு ஏற்படப் போகிறது!

—செய்தி

'தேசிய அரசாங்கம் ஏற்பட்ட பின்னர் நாட்டில் தட்டுப்பாடுகளும் முட்டுப்பாடுகளும் குறைந்து வருவதாகக் கூறப்படுவது பச்சைப் பொய். இதோ பாருங்கள் நமது நாட்டின் தேசிய பானமான சாராயத்துக்கே தட்டுப்பாடு வந்து விட்டதே' என்று எதிர்க் கட்சிக்காரர்கள் நகரசபைத் தேர்தலில் பிரசாரம் செய்யத் தலைப்பட்டு விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## பொறுத்துப் பார்த்தால்...!

பதினெட்டு அரசாங்கக் கூட்டுத் தாபனங்களில் ஆக ஆறு நிறுவனங்களே லாபத்தில் நடைபெறுகின்றன.

—செய்தி

அவசரப்படாமல் பொறுத்துப் பார்த்தால் வெகு விரைவில் இவை ஆறுமே நட்டக் கணக்கை காண்பிக்கும்.

## வீடேன்?

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் சகலரும் வீட்டுப் பிரச்சினைகளை அடிப்படையாக வைத்தே தத்தமது பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர்.

—செய்தி

வேறு பிரச்சினைகள் எதுவும் எழவில்லை என்பதுதான் பொருளல்ல! தேர்தலில் குதித்துள்ளவர்கள் அனைவரும் குடியிருக்க வீடு வசதியற்றவர்களாகத் தானிருக்க வேண்டும். 'வெற்றி பெற்று விட்டால் எப்படியாவது தாங்களும் ஒவ்வொரு வீட்டைக் கட்டிக்கொள்ள வசதி கிடைக்காமலா போய்விடும்' என்று அவர்களுக்கு நப்பாசை ஏற்பட்டிருக்கலாமல்லவா? இவ்வாறு விடாக்கண்டர் கேட்கிறார்.

## நல்ல வாய்ப்பு

சாவகச்சேரியில் நடைபெற்ற பெற்றார்—ஆசிரிய சங்கக் கூட்டத்தில் இருதிறத்தாருக்குமிடையில் பலத்த குழப்பம் ஏற்பட்டது.

—செய்தி

பெற்றாரும் ஆசிரியர்களும் தங்கள் தங்கள் பகைவர்களை நேரடியாகச் சந்தித்து வஞ்சம் தீர்த்துக் கொள்ள வாய்ப்பேற்படுத்தியவர்களுக்கு நன்றி கூறி தனித்தனியே பத்திரிகைகளுக்கு அறிக்கை அனுப்பியுள்ளனராம்.

## உண்மை

கள்ளத்தனமாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருபவர் தொகை, தேசிய அரசாங்கம் பொறுப்பேற்றபின்னர் வெகுவாகக் குறைந்துவிட்டது.

— செய்தி

முன்பும் இதே நிலையில்தான் இருந்தது. தமிழ் பேசும் மக்களைக் கொடுமைப் படுத்த வேண்டுமென்பதற்காக வேண்டுமென்றே முன்பெல்லாம் கண்ட நின்றவர்களை யெல்லாம் கைது செய்து அடைத்திருந்துவிட்டு பிறகு விடுதலை செய்து வந்தனர். இப்பொழுது அக் கொடுமை ஒழிந்து வருகிறது' இவ்வாறு உண்மை விளம்பி ஒருவர் விமர்சிக்கிறார்.


## திருப்தியான திருத்தம்

புகையிரத நிலையங்களைத் திருத்துவதற்கு இவ் வருடம் மொத்தம் பத்து லட்ச ரூபாய் செலவிடப்படும்.

—செய்தி

புகையிரதப் போக்குவரத்து மிக வேகமாகச் சீரடைந்துவிட்டமையினால் புகையிரத நிலையங்களை மட்டும் சீர்திருத்தம் செய்துவிட்டால் போதுமென்று கருதுகின்றனர் போலும்.





பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
... ஸ்டோர்ஸ்,
..., செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி: 3597-6522
தாமரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தொழிலாளர் கழகம்

# தோற்றமும் - வளர்ச்சியும்

## கழகத்தின் எதிர்காலம் ஒளிமயமானது

## வேதனை நீங்கியது சாதனை தொடர்கிறது

மலை நாடு

**க. சிவானந்தசுந்தரம்**

**1962ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22ம் நாள் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் கழகம் தனது இரண்டாவது மாநாட்டை அட்டன் நகரில் அமைதியான முறையில் கொண்டாடுகிறது. இக்குறுகிய காலகட்டத்திற்குள் அதிசயிக்கத்தக்க முறையில் கழகம் வளர்ந்துள்ளது. இந்த வளர்ச்சியைத் தடுத்து நிறுத்த பல சக்திகள் முனைந்தும் முடியவில்லை. காரணம், கழகம் மக்களுக்குத் தேவையான திட்டங்களை இயற்கையோடு ஒன்றிய முறையில் முன் வைத்து, உள்ளச்சுத்தியுடன் உழைத்து வருவதேயாகும். கழகத்தின் தோற்றத்திற்கான புறச்சூழ் நிலைகளையும், அதன் வளர்ச்சியையும், எதிர்காலத்தில் கழகம் ஆற்றவிருக்கும் பணியையும் பற்றியும் இக்கட்டுரையில் சுருங்க ஆராயப்படுகிறது. இக் கட்டுரையாசிரியர் கழகத்தின் பொருளாளர் என்பதனால் மட்டுமல்லாது, கழகத்தின் ஆரம்ப நாள் முதல் அதன் வளர்ச்சிக்காக உழைத்து வருபவர் என்பதனாலும் சிறப்புப் பெறுகிறார். கழகத்தின் அடுத்த ஆண்டுச் செயலாளரும் இவரே என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் ஆதரவின் கீழ் மலை நாட்டுத் தமிழ்த் தொழிலாளரை உறுப்பினராகக் கொண்ட தொழிற் சங்கமாம் இலங்கைத் தொழிலாளர் கழகம் தனது இரண்டாவது மாநாட்டை அட்டன் நகரில் கொண்டாடுகிறது அமைதியான முறையில்.

1962-ம் ஆண்டு ஆகஸ்ட்-செப்டம்பர் மாதங்களில் நடந்த கட்சியின் தேசிய மாநாட்டில் தமிழினத்தின் சரித்திரத்தில் இன்னுமோர் முக்கியம் பெற்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. அதுதான் மலை நாட்டிலும் கட்சியின் கிளைகளை நிறுவுவதென்ற முடிவு. மட்டுநகர் பாராளுமன்ற உறுப்பினர் சொல்வதைப்போல் கிழக்கிலும் வடக்கிலும் ஏனைய பகுதிகளிலும் நெல்லிக்கனிகள் சிதறுண்டு கிடப்பதைப்போன்று கிடந்தஇலங்கைத்தமிழர்சமுதாயத்தை ஒரு சாக்குக்குள் அடக்கிஒன்றுக்கிய பெருமை தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தது. இருந்தும் இன்னும் பல நெல்லிக்கனிகள் வெளியில் சிதறுண்டுதான் கிடந்தன. அவைதான் மலை நாட்டுத் தமிழ்ச் சமுதாயம். மலை நாட்டுத் தமிழ் இனத்தின் பிரசாவுரிமை மறுக்கப்பட்ட ஒரே ஒரு காரணத்தால் உருவாகிய தமிழ் அரசுக் கட்சி இவர்களையும் இயக்க ரீதியில் ஒன்றுக்கும் முயற்சியில் அன்று வரை வாழா விருந்து விட்டது. 1956, 1958, 1961-ம் ஆண்டுகளில் நடந்த சம்பவங்களில், மலை நாட்டுத் தமிழ் மக்கள் 'தான் ஆடா விட்டாலும் தனது தசை ஆடும்' என்ற பழமொழியை நிரூபித்ததிலிருந்து தமிழ் இனத்தின் தந்தையும் ஏனைய தலைவர்களும் செய்த முடிவு தான் மன்னர் மாநாட்டில் தீர்மானமாக மலர்ந்தது.

### தமிழரசுத் தந்தையின் நம்பிக்கை

மேற்படி தீர்மானத்தை நிறைவேற்றப் புகுந்த கட்சி ஒரு பேருண்மையைக் கண்டது. மலை நாட்டுத் தமிழ் மக்கள் முக்கியமாகத்தொழிலாளிகள். இவர்களின் நாளாந்தப் பிரச்சினைகள் யாவும் அரை வயிற்றுக் கஞ்சிக்கான தொழில் சம்பந்தப்பட்டவை. இப்பிரச்சினைகளுக்காகத் தொழிற் சங்கம் ஒன்றுஇவர்களுக்குத் தேவை. கட்சிக்குப் புறம்பான தொழிற் சங்கங்களில் இவர்கள் இருக்கையில் கட்சியின் கொள்கையை, இனத்தின் ஒற்றுமையை இவர்கள் மத்தியிலே வளர்க்க முடியாது என்ற நிலை தெளிவாகியது.

ஆகையால் செயற்குழுவில் விடயம் விவாதத்திற்கு வந்தது. ஏற்கனவே கட்சியுடன் ஓரளவு தொடர்பு கொண்ட இரு காங்கிரசுகளும் இன்னும் பல தொழிற் சங்கங்களும் இருக்குமிடத்தில் இன்னுமொரு தொழிற் சங்கம் அமைத்து எம் இனத்தவரை மேலும் கூறுபோடுவதா என்றுசிலரின் மனத்தில் ஐயம் ஏற்பட்டது. ஆனால் தந்தையவர்களின் கடைசிப் பேச்சு விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தது. "எமது கட்சி உருவாக்கப்படும் நேரத்தில் இருந்த உள்ளத் தெளிவிலும் பார்க்க இது விடயத்தில் கூடுதலான தெளிவு எனக்கு இருக்கிறது. ஆகையால் நாம் முன் செல்வோம்' என்று சொல்லி முடித்தார். மூன்று நாட்களுக்குப் பின் இப்பேச்சின் தீர்க்க தரிசனத்தையிட்டு வியக்காமலிருக்க முடியவில்லை.

### தோற்றம்

1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ந் திகதி அட்டன் பிறின்சஸ் படமாளிகையில் கழகம் தோன்றியது. தமது பிணத்தின் மேல்தான் தமிழரசுக்கட்சி மலை நாட்டில்வேரூன்ற முடியும் என்றுசொன்னவர்கள் ஒன்றும் பிணமாகி விடவில்லை. இன்றும் உயிருடன்தான் இருக்கிறார்கள். ஆனல் கட்சியும் கழகமும் மலை நாட்டில் வேரூன்றி விட்டன.

கழகத்தைத் தொழிற் சங்கமாகப் பதிவதில் எதிர்ப்புத் தோன்றியது. தமது பெயரோடு ஒத்திருப்பதால் இலங்கைத் தொழிலாளர் கழகம் என்ற பெயரில் பதியக் கூடாது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வாதாடியதாம். இருந்தும் இவ்வாட்சேபனை நிராகரிக்கப்பட்டுக் கழகம் பதியப்பட்டது.

மலை நாட்டுத் தமிழ் மக்கள் மத்தியில் கழகத்தை வளர்க்கப் புகுந்தபோது சில கொள்கைகளை முன் வைத்தே பிரசாரம் செய்தோம். உண்மையான சேவை, நேர்மை, சிக்கனம் இவற்றை அடித்தளமாகக் கொண்டே கழகத்தைக் கட்டி எழுப்ப முனைந்தோம், யாழ்ப்பாணத்தவன் காட்டிக் கொடுத்தவன்' என்றும் 'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானும் ஆண்டி' என்ற பிரசாரங்களுக் கூடாகத் தான் கழகம் முன்னேறவேண்டி இருந்தது. மறுபுறம் தேசியப் பத்திரிகைகளின் இருட்டடிப்பு சில நிர்வாகச் சிர்கேட்டால் 1963-ம் ஆண்டு மேதினம் வரை கழகம் வளர்ந்தது என்று சொல்ல முடியாதிருந்தது.

### எதிர்ப்பின் மத்தியில் வளர்ந்தோம்

1963-ம் ஆண்டு மேதினக் கூட்டம் எமக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தான் அளித்தது. அட்டனில் அன்று இன்னெரு தொழிற் சங்கம் ஒரு பிரமாண்டமான கூட்டத்தை நடத்த நமோ ஒரு சிறு கூட்டத்தோடு திருப்திப்பட வேண்டியாதாயிற்று.

அன்று நடந்தசெயற்குழுக் கூட்டத்தில் சில நிர்வாக மாற்றங்கள் செய்யப்பட்டன. அதன் பின் கழகத்தின் வளர்ச்சியில் முதற் படியைத் தாண்டத் தொடங்கினேம். இரண்டாவது படியை அடுத்த மேதினத்திற்குப் பின் தாண்டினேம்.

ஒரு புறம் தொழிற் சங்கங்களின் எதிர்ப்பு, மறு புறம் முதலாளிமார்களின் எதிர்ப்பு. இவற்றையெல்லாம் சமாளித்துக் கொண்டு முன்னேறினேம் என்றல், அதற்கு நாம் வைத்த கொள்கைகளும் கழகத்தின் பணியைக் கொண்டு செல்ல முன்னின்ற ஒரு சிறு இளைஞர் கூட்டத்தின் ஊக்கமும் தான் காரணம். நாம் கழகத்தை வளர்க்க முற்பட்டபோது நாம் கண்டது எல்லாப் பக்கத்திலும் சுரண்டல் தான். ஏழைத் தமிழ்த் தொழிலாளி முதலாளியாலும், தொழிற் சங்க ஊழியராலும், பொலிஸ் பகுதியினராலும் கடை முதலாளிகளாலும் சுரண்டப்படுவதைத் தான் கண்டோம். ஓரிடத்தில் ஒரு பொலிஸ் ஊழியர் 'அந்தத் தொழிற் சங்கப் பிரதிநிதியும், இந்தத் தொழிற் சங்கப் பிரதிநிதியும் எம்முடன்' 'ஒத்துழைக்கிறார்கள்' ஏன் நீங்கள் 'ஒத்துழைக்க' மறுக்கிறீர்கள்' என்று கூட நண்பர் நாகேந்திரத்தை (இ. தொ. க. நிர்வாகச் செயலாளர்) வாய்விட்டுக்கேட்டாராம். அதற்கு அவர் கொடுத்த பதிலோ' நீதிக்காக ஒத்துழைக்கிறேம்; ஆனல் அநீதிக்காக ஒத்துழைக்க தயாரில்லை என்பது தான்'. இன்று கழகம் வழர்ந்திருக்கும் இடங்களில் கழகத்தின் ஊழியரின் நேர்மையும் நிலைநாட்டப்பட்டிருக்கிறதைக் காணலாம். இற்றைவரை தொழிலாளரின் பணமும் ஊதாரித்தனமாகச் செலவழிக்கப்பட்ட இடத்தில் நாம் சிக்கனத்தைக் கடைப்பிடித்தோம். எத்தனையோ ஊழியர்களின் சேவை நீக்கப்பட்டிருக்கிறது நேர்மையில் சற்... கம் ஏற்பட்டிருந்ததா... ஆரம்பத்திலிருந்தே நா... எமது வருவாயிலிருந்து ஒரு பகுதியையேனும் மீதப்படுத்தி இஸ்ரவேல் தொழிற் சங்கங்களைப் போல தொழிலாளியின் முன்னேற்றத்திற்காகச் செலவழிக்க வேண்டுமென்று கனவுகண்டிருந்தோம்.

### கல்விப்பிரச்சினையும் காங்கிரசும்

முக்கியமாகக் கல்வித்துறையில் கவனம் செலுத்துவதால் தான் சகலவிதத்திலும் நன்மை பயக்கும் என்பதையும் கண்டோம். இச்சந்தர்ப்பத்தில் நண்பர் ஈழவேந்தன் சொன்ன விடயம் இங்கு குறிப்பிடத்தக்கதாகும், 'தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டிற்கு யாழ்ப்பாணம் சென்று கொண்டிருந்த காங்கிரஸ் தலைவர் ஒருவருடன் அளவளாவும்போது 'நீங்கள் ஏழைத் தொழிலாளிகளுக்காகப் பாடு படுகிறீர்கள்; ஆனல் அவர்களின் கல்வித்தரத்தை ஏன் உயர்த்த முனையாதிருக்கிறீர்கள்' என்று கேட்டதற்குச் சொல்லப்பட்ட பதிலோ 'இப்போதே எம்மை மதிக்காத தொழிலாளர்கள் நாளை நாலு படித்துவிட்டால்,எம்மைத்தூக்கி எறிந்தே விடுவார்கள்' என்பதாகும்.

இக் கொள்கைக்கு நேர் விரோதமான கொள்கையை நாம் முன்வைத்தோம். இன்னென்றும் இச்சந்தர்ப்பத்தில் சொல்லியாகவேண்டும். மலை நாட்டுப் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கென இந்தியத் தூதுவரை ...

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுகிய காலத்தில் அபார வளர்ச்சி

## இ. தொ. க. பொதுச் செயலாளரின் ஆண்டறிக்கை தரும் தகவல்

—அட்டன்: நவ. 19.

"மிகக் குறுகிய காலத்தில் கழகம் ஓர் சக்தி வாய்ந்த ஸ்தாபனமாக வளர்ந்துள்ளது. வளர்ச்சி பெற்ற தொழிற் சங்கங்களில் ஒன்றாக நாம் கணிக்கப்படுகின்றோம். தேயிலைத் தொழில் சம்பளச் சபையில் எமக்கு அங்கத்துவம் கிடைத்துள்ளதை இங்கு விசேடமாகக் குறிப்பிட வேண்டும். இவ்வளர்ச்சியை மேலும் மேலும் பெருக்க வேண்டியது அவசியமாகும்" இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் 2-வது மாநாட்டில் கழகப் பொதுச் செயலளர் திரு. செ. கனியப்பெருமாள் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர் தனது ஆண்டறிக்கையில் மேலும் கூறிப்பிட்டுள்ளதாவது:—

'கடந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பின் பயனாக நாட்டில் தேசிய அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறியிருக்கிறது. பெரும்பான்மை மக்களுக்கும் சிறுபான்மை மக்களுக்குமிடையிலே நல்லெண்ணமும், நட்புறவும் ஏற்பட வழி கோலப்பட்டிருக்கிறது. இலங்கையின் இதர குடிகளைப் போல சமத்துவ அடிப்படையில் அரசியல் சமுக உரிமைகளையும், சுதந்திரங்களையும் பெறுவதற்குத் தமிழ் பேசும் சமுகம் காத்துக்கொண்டிருக்கிறது. இத்தகைய அரசியல் சூழ்நிலையில்தான் எமது இரண்டாவது மகாநாடு நடந்துகொண்டிருக்கிறது.

'நாட்டில் பல்வேறு சமுகங்களுக்குமிடையே நல்லெண்ணமும் நட்புறவும் ஏற்படுவதற்கு தேசிய அரசாங்கம் வழிகோலியிருப்பதைப் போல் நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருந்து வரும் தோட்டத் தொழிலாளப் பெருமக்களின் அரசியல் ஜனநாயக சுதந்திரங்களையும் உரிமைகளையும் வழங்குவதற்கு தேசிய அரசாங்கம் தைரியத்துடன் முன்வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

'இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் பெரும் பகுதியினரான தோட்டத் தொழிலாளர்கள் மிகக்குறைந்த வசதிகளுடன் வாழ்ந்து வருவதுடன் மிகக் குறைந்த சம்பளத்தையே பெற்றும் வருகின்றனர். வேலையில்லாத் திண்டாட்டம் வேறு எம்மை வாட்டி வதைக்கிறது. வயது வந்த ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் வேலையின்றியிருக்கின்றனர். இந்நிலை மாற வேண்டும். பொருளாதார நிலை சீரடைய தேவையான நடவடிக்கைகளை தேசிய அரசாங்கம் மேற்கொள்ளுமென்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

'தலவாக்கொல்லை, மஸ்கெலியா, ராகலை பணிமனைகளின் நடவடிக்கைகள் சீராய் நடைபெற்றுள்ளன. அட்டன் பணிமனையின் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த முடியாத நிலையே இருந்து வந்தது. இக்குறையை போக்குவதற்காக தற்சமயம் திறமையான மாவட்டப் பிரதிநிதியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். நுவரெலியாவில் வசதியான இடம் கிடைக்காத காரணத்தாலேயே இங்கு இருந்து வந்த பணிமனையை இராகலைக்கு மாற்றினோம். நுவரெலியாவிலும் பணிமனையை

(9-ம் பக்கம் பார்க்க)

## இ. தொ. க. மாநாட்டுக்கு வரும் தீர்மானங்கள்

எமது முதலாவது வருடாந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை சனநாயக உரிமைகள், தொழில் தகராறுகள், கல்வி, சுகாதாரம், வேலை, வேலை நேரம், பென்சன், பிரசவ சகாயம், விடுமுறைத் தினங்கள், இலாபத்தில் பங்கு என்பவை சம்பந்தப்பட்ட 10 அம்சக்கோரிக்கைகளை உடனடியாக அமுல் செய்வதற்கு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு 1965-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ம் நாள் அட்டனிலே கூடியுள்ள இ. தொ. கழகத்தின் இரண்டாவது வருடாந்த மாநாடு இந்நாட்டு அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

தோட்டப்பகுதிகளில் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதையும் ஆயிரக்கணக்கானோர் வேலை வாய்ப்பின்றி இருப்பதையும் சுட்டிக்காட்டும் இம்மாநாடு அவர்களுக்கு உதவு முகமாக கைத்தொழில்கள் கூட்டுப்பண்ணைகள். கால் நடைப் பண்ணைகள் என்பவற்றை ஆரம்பித்து நடத்துமாறு கேட்டுக்கொள்கிறது.

# இலங்கைத் தொழிலாளர் கழகம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வராகக்கொண்ட நிதியொன்று இருக்கிறது. இந்நிதிக்கு இரண்டொரு கொம்பனித்தோட்டங்கள் தான் உதவி செய்கின்றன. அதில் ஒன்று கழகத்தின் காப்பாளரும் தமிழரசுத் தந்தையுமான திரு. செல்வநாயகம் அவர்கள் பங்குகொண்டுள்ள தோட்டமாகும். ஒரு நாள் இந்நிதி சம்பந்தமான கூட்டமொன்றிற்குத் தந்தையின் சார்பில் சென்றிருந்தேன். அருகிலிருந்த ஐ. தொ. கா. வின் தலைவர் ஒருவரைக்கேட்டேன் 'நீங்கள் ஏன் ஐயா இவ்வேளைத் தொழிலாளியின் பிள்ளைகளின் கல்வி முன்னேற்றத்திற்கு ஒன்றும் செய்யாது விட்டீர்கள்' என்று. அதற்கு அவரோ 'இரு காங்கிரசுகளும் ஒன்றாயிருந்த காலத்தில் எமது மாசவருமானம் ரூ. 80,000 இருந்தும் மிச்சமில்லை. இப்போது சொல்லவும் வேண்டுமா?' என்றார்.

மேற்படி இரு சம்பவங்களையும் இச்சந்தர்ப்பத்தில் நினைவு கூரும்போது நாம் பெருமைப்படாது இருக்க முடியவில்லை. அரசாங்கமும் முதலாளிமாரும் தொழிற் சங்க வாதிகளும் பத்துஇலட்சம் தொழிலாளிகளை சதா அஞ்ஞானத்தில் வைத்திருப்பதில் தமக்கு நன்மையைக் கண்டார்கள். நாமோ இவர்களின் அஞ்ஞான இருளை அகற்றுவதால் இனத்திற்கு விடிவைக்காண முயல்கிறோம். நாம் கண்டகனவு எவ்விதம் நனவாகிறதென்பதை கீழே தருகிறேன்.

### வன்னியசிங்கம் கல்விநிதி

தொழிலாளியும் மெல்ல மெல்லக் கழகத்தின் தலைமைப்பீடத்திலும், கழகத்தின் ஊழியரின் நேர்மையிலும் சேவை மனப்பான்மையிலும் நம்பி வைக்க வைக்க கழகத்தின் நிதி நிலைமையும் சீராகத் தொடங்கியது. கடந்த ஆறுமாதங்களாக கட்சியிடமிருந்து உதவி பெறாது கழகம் இயங்கி வருகிறது என்பதில் திருப்தியடைகிறோம். நிதி நிலைமை சீரடையத் தொடங்க கழகமும் தனது ஊழியருக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய முனைந்தது. மாதக்கணக்கில் கழக வளர்ச்சிக்காக சம்பளம் இல்லாததும், சொற்ப சம்பளத்திலும் பணியாற்றியவர்கட்கு ஓரளவு படி உயர்ச்சியைக் கொடுத்திருக்கின்றோம்.

அடுத்தபடியாக மலை நாட்டில் கல்வி வளர்ச்சிக்கு நாம் செய்யவேண்டிய பணியில் கவனம் செலுத்தத் தொடங்கினோம். இந்த மாதம் முதற்திகதியிலிருந்து கழக நிர்வாகக் குழுவின் சிபார்சின்படி 'வன்னியசிங்கம் கல்வி நிதி' என்று ஒரு நிதியை உருவாக்கி மாசாமாசம் கழக நிதியிலிருந்து ரூ. 100 இந்நிதிக்கு ஒதுக்குவதென்றும் முதற்கண், இவ்வருடம் பல்கலைக் கழகத்தில்சேர்ந்திருக்கும் மூன்று மலை நாட்டு இளைஞர்கட்கும் உதவி செய்வதென்றும் முடிவு செய்திருக்கின்றோம்.

இந்நிதி உருவாகியதும் ஒரு கதைதான். அண்மையில் மஸ்கெலியாவில் பிரசாரக் கூட்டத்திற்கு நண்பர் நகேந்திரமும் நானும் சென்றிருந்தோம். எமது அலுவலகத்தில் ஒரு ஆசிரியரைச் சந்தித்தோம். அவர் இம் மலைநாட்டு இளைஞர்களின் நிலையைப்பற்றிச் சொல்லி காங்கிரஸ் தலைவர் ஒருவரின் உதவியை நாடியதையும் அவர் அசிரத்தையுடன் சொன்னார். நாம் எமது கழகத்தின் நன்னோக்கத்தைச் சொல்லி கழகம் உதவி செய்ய முயற்சிக்குமென்று சொல்லித் திரும்பினோம். இவ்வளவு விரைவில் எமது கனவு நனவாகுமென்று அன்று நாம் எண்ணவில்லை.

### நமது வளர்ச்சி

இன்று கழகம் மலை நாட்டில் வேரூன்றி விட்டது. 150 தோட்டங்களில் எமது உறுப்பினர்கள் இருக்கின்றனர். 100க்கு மேற்பட்ட தோட்டங்களில் பெரும்பான்மை இருப்பதால் [illegible] லாம் தமிழரசுக் கட்சியின் உழவாணக்கொடி கம்பீரமாகப் பறந்து கொண்டிருக்கிறது. அட்டனை விட மஸ்கெலியா, தலவாக்கொல்லை, பசுமலை, இறுகலை, பன்வில ஆகிய இடங்களில் கழகத்தின் அலுவலகங்கள் மூலம் பணியாற்றி வருகிறோம். உணர்ச்சி, உறுதி, இனப்பற்று, சேவை மனப்பான்மை, நேர்மை ஆகிய குணதியங்களைக் கொண்ட மலை நாட்டு வாலிபர்கள் மூலம் புதிய தலைமை பீடம் உருவாகி வருவதில் பெருமை அடைகிறோம். தேயிலைத்தொழில் சம்பள நிர்ணய சபையில் நாமும் அங்கம் வகிக்கிறோம்.

தமிழினத்தின் ஒற்றுமை ஒரு புறமிருக்கு 10 இலட்சம் மனிதர்கள் மலை நாட்டில் இந்த 20-ம் நூற்றாண்டில் வாழும் வாழ்க்கையை நினைத்து இவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகவேனும் எமது கழகம் வளர்ந்துதான் ஆகவேண்டும். 10x12 அடி விசாலமுள்ள ஒரு அறைக்குள் வயசு வந்த பிள்ளைகளுடன் சேர்ந்து 7, 8 பேர்கூட வசிக்கும் அவல நிலையையும், சீப்புக்காணுத தலையுடனும் பொட்டுக்காணுத நெற்றியுடனும் திரியும் சிறு குழந்தைகளையும், சாணத்தால் மெழுகிய மட்தரைகளையும் வெளிச்சமில்லாத கட்டிடங்களையும் கொண்ட 'பாடசாலைகளையும்', பெண்ணாய்ப் பிறந்தும் குடும்பப் பொறுப்புடன் அரை வயிற்றுக் கஞ்சிக்கா சதா உழைத்து உருக்குலைந்திருக்கும் பெண்களையும்; இவையெல்லாவற்றையும் நினைத்தால் கண்ணீர் விடாது இருக்க முடியாது. அத்துடன் இவர்களுக்காகப் 'போராடி' வந்த தலைவர்களையும் அவர் தம் காங்கிரஸ்களையும் சபிக்காமலிருக்கவும் முடியாது. இவ் அவல நிலையிலிருந்தும் இனத்தவரை மீட்க அவர்களின் கல்வித் தரம் உயரவேண்டும். வட்டிக்கடை 'பாயின்' பிடியிலிருந்தும், கொள்ளை இலாபமடிக்கும் வியாபாரிகளினது பிடியிலிருந்தும் இவர்களை [illegible] வேண்டும். இப்பணியில் சேவை செய்ய தியாக மனப்பான்மை [illegible] படித்தவாலிபர்கள் தேவை. இவர்களை முன் வரும்படி கழகத்தின் சார்பில் வேண்டுகிறோம்.

### எதிர்காலம்

எத்தனையோ எதிர்ப்புக்குள் கழகம் வளர்ந்ததென்றால், தமிழரசுத் தந்தையின் சளையாத குணமும், கழகத்தில் வைத்த நம்பிக்கையையும் தான் முதற் காரணம். அடுத்து எவ்வளவோ இடைஞ்சல்களுக்குள்ளும் எதிர்ப்புகளுக்குள்ளும் நிர்வாகத்தை நடத்திய நண்பர் நாகேந்திரத்தை குறிப்பிட்டேயாகவேண்டும். இவருக்கு உறுதுணையாக தொழிற் சங்க அனுபவம் வாய்ந்த பொதுச் செயலாளர் திரு. செ. கலியப்பெருமாள், இளந்தோழர்கள் எல்லாளன், செல்வத்துரை, மற்றும் ஏனைய இளைஞர்களின் மற்றும் சேவை அளப்பரியது. பிரசாரக் கூட்டங்களில் பங்குபற்றஇடையிடையே பேச்சாளரைத் தந்து உதவிய அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்திற்கும் குறிப்பாக நன்றி செலுத்த வேண்டியது எமது கடன். ஒளிமயமான எதிர்காலத்தைத்தான் மலை நாட்டில் காண முயல்கிறோம். இம் முயற்சி வெற்றி பெற்றேயாகவேண்டும்- இந்நாட்டில் தமிழினம் தன்மானத்துடன் வாழவேண்டுமாயின்!


## ரிஷி லேகியம்

(கருணைக் கிழங்கு)



மூல முளைகள், இரத்தம், சீழ் பௌந்தம், வாய்வுகள், உள் மூலம், வெளி மூலம், தீராத மலச்சிக்கல், மூலச் சூட்டினுல் உண்டாகும் எல்லா உபாதைகளுக்கும் கைகண்டது.

ரிஷி மார்க்கைக் கவனித்து வாங்கவும்

**டின் 1க்கு ரூ. 3-50**

தபால் செலவு 1-10 சதம்

எவ்வித தீராத வியாதிக்கும் எம்மைக் கலந்து ஆலோசியுங்கள்.

அனேக மருந்துகள் அடங்கிய கேட்லாக் இனும்.

**ஞானசுந்தர வைத்தியசாலை,**

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.



## காலம் சரியில்லை என்ற கவலையா?

அல்லது!

- வாழ்க்கையில் நினைத்த காரியங்கள் நிறைவேறவில்லை என்ற நினைப்பா
- எதுவானுல் என்ன! எல்லாக் காரியங்களையும் தெய்வ பலத்தினுலும்
- மந்திர சக்தியினுலும் நிவாரணஞ் செய்து கொடுக்கப்படும்.

இரகசியங்கள் வெளியிடப்படமாட்டாது.

**பி. எம். திசாநாயக்க,**

பதிவு செய்யப்பட்ட மாந்திரீக கலாநிதி

அருத எண்ணெய் தலைமைக் காரியாலயம், கம்பளை.

தொலைபேசி : 454.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# மங்கையர் சங்கம்

## கருத்துமேடை

# எதிர்கால சமூகம் எங்நிலையடையப் போகிறது?

'ஆபாச சினிமா ஆபத்தானது' என்னும் தொடரில் இடம் பெற்று வந்த கட்டுரைகளைப் படித்த போதும், 'ஆபாச சினிமாவை எதிர்த்தே கட்டுரைகள் வந்துகுவிகின்றன' என்னும் செல்வ அக்காவின் குறிப்பைப் படித்த போதும் பெண்கள்—அதிலும் இளம் பெண்களே ஆபாச சினிமாவையும் சுவரொட்டி விளம்பரங்களையும் எத்தனை தூரம் வன்மையாக எதிர்க்கின்றார்கள், கண்டிக்கின்றார்கள் என்பதை உணர்ந்து மகிழ்ந்தேன்.

'இன்றைய உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது எதிர்கால சமூகம் எத்தனை சீரழிந்ததாக விளங்கப் போகின்றது' என்னும் பெரியவர்களின் கூற்றை இப்பெண்கள் தகர்த்தெறிந்து சீரான வாழ்க்கை தொடர வழி வகுப்பார்கள் என்று இறுமாந்தேன். ஆனால் ஏனோ சோதரி வசந்தா மட்டும் ஆபாச சினிமாவையும் விளம்பரங்களையும் வரவேற்கின்றார்.

இன்று சிறுவர்கள் இளைஞர்கள், இளம் பெண்கள் எல்லோரும் கெட்டுப் போவதற்கு, மூலகாரணமாக விளங்குவதே இப்படிப்பட்ட

### திரையிலும் சுவரிலும் ஆபாசம் [6]

சினிமாக்கள் தானே! குறிப்பிட்ட படம் ஒன்று வெளிவரப் போகின்றது என்று படத்தின் பெயரையும் நடிகர்களையும விளம்பரப்படுத்தினால் சிரத்தை காட்டாதவர்கள், அப்படத்தின் இரண்டொரு காட்சிகளை விளம்பரப்படுத்தி விட்டால் போதும்; கொட்டகை நிறைந்துவிடும். அதிலும் 'வயது வந்தவர்களுக்கு மட்டும்' என்று விளம்பரப்படுத்தி விட்டால், மாணவமணிகள் எல்லாம் திரள்வதை நாம் மறுக்க முடியுமா என்ன?

அந்த ஆபாச விளம்பரங்களையும் சுவரொட்டிகளையும் பார்த்து விட்டுத்தானே இவர்கள் கொட்டகையை முற்றுகையிடுகின்றனர்? இதை உணர்ந்துதான் படமாளிகையின் முதலாளிகள் கூட தமது வருமானத்திற்காக இப்படிப்பட்ட விளம்பரங்கட்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர்.

மறைத்து வைக்கும் பொருளை காணத்துடிக்கும் சிறுவர்களின் மனநிலையை ஆபாச சினிமாவின் விளம்பரத்துக்கு சகோதரி ஒப்பிட்டது அத்தனை பொருத்தமானதுதானா என்பதை சகோதரியே சற்று சிந்திக்க வேண்டும்.

இன்றைய மக்கட்கு இருக்கும் சினிமா மோகத்தினால், திரையில் காண்பதெல்லாம் நிஜம் என எண்ணச் செய்கின்றது. அதையே வாழ்க்கையின் நடைமுறையிலும் கைக்கொள்ள முயல்கின்றனர். கற்பனைகளை உண்மையாக்க முற்பட்டால் எத்தனை பயங்கரத் தீமைகளை உண்டாக்கின்றன என்பதை நாம் இன்று கண் கூடாகக் காண்கின்றோம்.

ஆபாச சினிமாவும் அத்தகையதே. அதை வரவேற்று, விளம்பரங்களையும் பாராட்டி விட்டோமானால் நாளைய உலகத்தையும் சமூகத்தினையும் நினைப்பதை நாம் இன்றே மறந்துவிட வேண்டும். 'அப்பப்பா! எத்துனை சீரழிந்ததாய், பயங்கரமாய் விளங்கும் அது?

**செல்வி சரோஜினி ஏரம்பு**
**திருகோணமலை**

# நிறைவு

வாணன் 'ஒவசிய'ராக எடுக்கும் முதற் சம்பளம் இதுதான். காரியாலயத்திற்குச் சென்று கையெழுத்திட்டு சம்பளத்தை எடுத்து வரும்போது, வாணனுக்கு எழுந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. ஏனென்றால், 'தீபாவளி' தலைநீட்டி விட்டதல்லவா? விமரிசையாக-திருப்தியாகக் கொண்டாடலாமே, அதுவும் தனது சொந்த உழைப்பில்! என்ற நினைவால்தான். சம்பளத்தை எடுத்ததும் முதல் வேலையாக தனது அக்காவின்பிள்ளைகளுக்கு-தனது அன்பு மருமக்களுக்கு வேண்டிய 'தீபாவளிப் பரிசு'கள் வாங்கிக்கொண்டு தனது அக்காவின் வீட்டிற்கே போனான்.

## நிமிடக் கதை

வாணனின் குதூகலமான வரவைக் கண்டதும் மருமக்கள் துள்ளிக் குதித்தனர் மகிழ்ச்சியால். 'மாமா...மாமா' வென்று ஓடி வந்து வாணனிடமிருந்து பொருட்களையெல்லாம் பிய்த்துப் பிடுங்கி எடுத்தனர். இந்த ஆனந்த மயமான காட்சியைக் கண்டு வாணனும்— அவன் தமக்கையும் பூரிப்படையாமல் இருப்பார்களா என்ன! இருந்தாலும்......

மூத்தவனான கனேஷ் மாத்திரம் முகத்தை 'தும்'மென்று வைத்திருந்தான். அவன் முகத்தில் எள்ளளவும் மகிழ்ச்சியில்லை. உற்சாகமும் இருக்கவில்லை. வாணனுக்கு விஷயம் விளங்கவில்லை. 'கணேசுக்குத் தேவையான கால்ச்சட்டை-சேட்-கூட ஒரு 'டீ' சேட்டும் வாங்கிக் கொடுத்திருக்க, இன்னும் என்ன அவன் தேவை?' என்று வாணன் தனக்குள்ளேயே கேட்டுப்பார்த்தான். கணேஷிடம் நேரே சென்று அவன் முதுகைத்தட்டிக் கொடுத்து,-'இன்னும் என்ன கணேஷ் வேணுமா?...... சப்பாத்து வேணுமா?' என்று கேட்டான் வாணன். 'தேவையில்லை' எனுந்தோரணையில் தலையை மட்டுமசைத்தான் கணேஷ். 'வேறு...பிஸ்கோத்து...' என்று வாணன் கேட்கவும், அதற்கும் 'வேண்டாம்' என்றே தலையசைத்தான.

வாணனுக்கு அவனுடைய உள்ளத்தாசையைப் புரிந்து கொள்ளும் திறமை—இல்லையில்லை 'அனுபவம்'—இருக்கவில்லை. அதனால் அக்காவிடம் சென்று, 'அக்கா... கணேஷுக்கு என்ன வேணுமென்று கேட்டுச் சொல்லக்கா...! அவன் விருப்பத்தைத் தீர்க்கா விட்டால் நான் இத்தனையும் வாங்கி வந்த—என்ன பயன்?' என்றான் வாணன்.

—அவள் கணேஷிடம் போய்... விஷயத்தைத உடனே அறிந்துகொண்டு சிரிப்புடன் திரும்பி வந்தாள், வாணன் 'என்னக்கா... என்ன விஷயம்?' என்று கேட்டான்.

'வாணனுக்கு இது கூடம் புரியாமற்போய்விட்டதே...! அதோ...... கேட்குதல்லவா சத்தம்? அந்தச் சத்தம்தான் தனக்கும் தேவையாம்...!'

'ஓகோ! அடடே! வெடியா? பட்டாஸ் கேட்டுத்தான் அப்படியிருந்தானா கணேஷ்?'

அன்று மாலையே அவ்வீட்டில் தீபாவளி பட்டாஸ் வெடிகள் முழங்க ஆரம்பித்து விட்டன.

—'அழ-நோணிஷ்'

# வழக்காடி வெல்ல நினைத்தால் வஞ்சம் தான் வளரும்

## செல்வி அக்காவிடம் சில கேள்விகள்

கேள்வி 1.

நானும் கணவரும் இரண்டு வருடத்துக்குமேல் வாழ்க்கையில் நின்றும் பிரிந்து வழக்காடுகின்றோம். ஆனால் அதில் கணவர் வெற்றிபெற்றுவிட்டார். நான் தோல்வியடைந்து விட்டேன். அந்த ஆத்திரத்தின் நிமித்தம் இப்போது எனது பொருள்களை விற்று அந்த வழக்குத் தீர்ப்பை ஆட்சேபித்து சுப்ரிங் கோட்டுக்கு அப்பீல் எடுத்துள்ளேன்.

'மங்கை'
கொக்குவில்.

ப: கணவன் மனைவிக்கிடையில் எத்தகைய பிணக்குகள் ஏற்பட்டாலும் அவை ஓரளவு அந்தரங்கமாக இருக்க வேண்டுமேயன்றி, கோடு போன்ற அம்பலத்துக்குச் செல்வது அழகல்ல. வழக்காடச் சென்றால வஞ்சம் தீர்க்கும் உணர்ச்சி இரு பகுதியிலுமிருக்கும் வளருமேயல்லாமல் சமாதானம் ஏற்பட முடியாது.

உங்கள் முடிவு உங்கள் பொருட்களையும் பணத்தையும்-ஏன் மானத்தையும் கூட இழந்துவிட வேண்டிய நிலையையே உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. கோட்டுக்குச் செல்லாமல் வேறுயாராவது பெரியோர்களின் துணையுடன் சமாதானமாகத் தீர்க்கப்பட முடியுமா என்பதனை ஆராய்ந்து பாருங்கள்.

கேள்வி 2.

### பெற்றோரிடம் கூறுங்கள்

'திரேசா'

......................................?

ப: உங்கள் கதை பரிதாபகரமான கதையாக விரிகிறது. இதற்கு நான் கூறக்கூடிய ஒரே ஒரு முடிவைத் தவிர வேறு நல்லவழி கிடையாது.

எப்படியாவது உங்கள்பெற் [illegible] துத்தான் வேண்டும். கேள் [illegible] றுக்கடுமையாக நடக்கத்தான் செய்வார்கள். அதற்குப் பயந்தால், பின்னர் ஏற்படும் அதிபயங்கர சம்பவங்களை எவ்வாறு தாங்கிக் கொள்ள முடியும்? ஆகவே தைரியமாக அம்மாவிடம் கூறிவிடுங்கள்.

நீங்களாகவே பெற்றோரிடம் கூறுவது கடினமாகவிருக்கும் என்றால், உங்கள் குடும்பத்தாரிடம் மிகநெருக்கமாகப் பழகும் ஒருவரிடம் விடயத்தைக் கூறி நிலைமையைப் பெற்றோருக்கு உணர்த்தும்படி தெரிவியுங்கள். ஆரம்பத்தில் பெற்றோரோ உற்றோரோ ஏசினாலும் பேசினாலும், ஏன் அடித்தாலும் கூட, இறுதியில் உங்கள்மேல்அனைவருமம் அனுதாபப் படுவர். வேறு முடிவுகளைத் தேட முயற்சிக்காமல் பெற்றோரிடம் சொல்லி, அதனால் ஏற்படும் நன் முடிவையே நாடுங்கள்.

கேள்வி 3.

### கன்னிவாழ்வு

'தமிழ் மங்கை'
பசறை.

ஆண் னி வாழ்க்கையை விரும்புகிறேன். இதற்கு ஏதாவது வழி உண்டா?

ப: கிறிஸ்துவ மதநிறுவனங்களிலே தான் கன்னியராகத் தொடர்ந்து வாழக்கூடிய வாய்ப்புகளுண்டு. பௌத்த சன்யாசினிகளும் உளர். ஆனால் வேறு மதஸ்தாபனங்கள் பெண்கள் கன்னியாகவே தொடர்ந்து வாழக் கூடிய மடங்களை இங்கு ஏற்படுத்தவில்லை. ஆகவே கிறிஸ்துவ மடங்கள் அல்லது பௌத்த சன்யாசினி மடங்களைத் தவிர வேறு இடமில்லை யாதலினால் உங்களுடைய விருப்பு நிறைவேறுவது மிகவும் கடினமான காரி

(24-ம் பக்கம் பார்க்க)

குடித்தனக் குறிப்பு

## சாயமிழந்த 'லேஸ்'களுக்கு சாயமூட்டும் முறை

—செல்வி நளினி நாதன்—

பெல்லிய மஞ்சள் நிற லேஸ் துணியானால் தேயிலை அல்லது கோப்பிச் சாற்றைப் போதிய அளவு நீருடன் கலந்து பாவிக்கலாம். மற்ற வர்ணங்களுக்கு ஏற்ற சாயம் (Dye) உபயோகிக்கவும். சாயத்தை பின் வரும் விதத்தில் தயாரிக்கலாம்:—

கோந்து (Gum Arabci Water) உடன் சாயக்கலவையையும் கலந்து தேவையான வர்ணம் தயாரித்த பின் ஆடையை, நனைத்து, சீரான தளத்தில் விரித்து, சுருங்கிய பகுதிகளைச் சீர்ப்படுத்தி ஊசிகளால் குத்தி உலர விடவும்.


# ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலசலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, இரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்குக் குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-75 சிறியது ரூபா 3-00

வி. பி. பி. செலவு வேறு.

தலைமையகம்!

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நாம் இந்த நாட்டில் சகோதரர்களாக ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்றல், இந்த நாட்டில் சிங்கள மக்களுக்கும் சிங்கள மொழிக்கும் சிங்கள கலாசாரத்திற்கும் அரசாங்கம் எந்த மாதிரியான உதவி கொடுக்கப் போகின்றதோ அதே போன்ற உதவியை தமிழ் மொழிக்கும் தமிழ் கலாசாரத்திற்கும் கொடுப்பது அரசாங்கத்தின் கடமை. இந்த உண்மையிலிருந்து நாம் விலகக் கூடாது. சகல கட்சி நண்பர்களும் இதை உணர்ந்து கொள்வதுடன் உருவாகிவரும் நல்ல சூழ்நிலையையும் கெடுக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.'

# 'ஒற்றுமையைக் குலைக்காதீர்'

# மூதவையில் திரு. நடராசாவின் முதற் குரல்

## 'கன்னியுரையே கனமானது' என நீதி அமைச்சர் பாராட்டு

இவ்வாறு அண்மையில் மூதவையுறுப்பினராக நியமனம் பெற்ற தமிழரசுக் கட்சிப் பிரமுகர் திரு. சு. நடராசா தனது கன்னிப் பேச்சை மூதவையில் நிகழ்த்துகையில் கூறினர். திரு. நடராசாவின் கன்னிப்பேச்சைப் பாராட்டி நீதியமைச்சர் திரு. ஏ. எப். விஜேமான்ன பேசுகையில் தொடர்ந்தும் இது போன்ற பெறுமதியான கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று வேண்டினர்.

சாஹித்திய மண்டல திருத்த மசோதா மீது தனது கன்னிப் பேச்சை நிகழ்த்திய திரு. நடராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:

'சாகித்திய மண்டலத் திருத்த மசோதா பற்றிய விவாதம் இவ்வளவு நேரம் நடைபெறுமென்று நான் கருதியிருக்கவில்லை. இந்த விவாதத்தில் பங்கு பற்றும் எண்ணத்துடன் நான் இருக்கவில்லை. ஆயினும் கடைசியாகப் பேசிய செனேற்றர் (செனேற்றர் ஆர். எல். ஏ. ஐ. சரன்னகொடை) அவர்கள் பேசிய சில வார்த்தைகள் உண்மையாக ஒரு தமிழ்ப் பிரதிநிதி என்ற முறையில் என் உள்ளத்தைப் புண்படுத்தியகாரணத்திஞல் சில வார்த்தைகள் பேச வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கின்றது.

'இத்திருத்த மசோதாவை ஒருமனதாக ஏற்று வாக்களிப்பதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். ஆனல் கடைசியாகப் பேசிய கௌரவ சேனேற்றர் அவர்கள், இத் திருத்த மசோதாவுக்கு ஒருதிருப்பம் கொடுத்துவிட்டார். இந்தத் திருப்பம் அவர் பேச்சை ஆரம்பித்த நேரத்தில் வெகு கடுமையாக இருந்தது. இறுதியில் அவர் பேச்சை முடிக்கும்பொழுது வேறொரு தொனியாக மாறியது. அவரது பேச்சு, அவரது உண்மையான உள்ளக்கிடக்கை என்னவென்பதை எங்களுக்குத் தெளிவாகக் காட்டிவிட்டது.



### தேசிய அரசின் நோக்கம்

'இன்று பிரதமர் கௌரவ டட்லி சேனநாயக்கா அவர்கள் தேசிய அரசாங்கமொன்றை அமைத்துள்ளார். அவர் இலங்கைக்கு உகந்தது என்ன என்பதை உணர்ந்து தான் இத் தேசிய அரசாங்கத்தை அமைத்திருக்கிறார். இந்த நாட்டில் வாழும் சகல மக்களும், அவர்கள் சிங்களவர்களாக இருந்தாலும் சரி, தமிழர்களாக இருந்தாலும் சரி, இஸ்லாமியர்களாக இருந்தாலும் சரி, அனைவரும் சகோதரர்களாக, உரிமையுடனும் மானத்துடனும் வாழ வேண்டுமென்ற கருத்துடன் தான் இந்தத் தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டது என்பதை எவராலும் மறுக்க முடியாது. இந்த நாட்டிலே தமிழ் மொழிக்கு இடம் கொடுக்கக் கூடாது, தமிழ்க் கலைக்கு; கலாசாரத்துக்கு இடம் கொடுக்கக் கூடாது, அவற்றை வேறு விதமாக நடாத்த வேண்டும் என்று சொல்லுவது பொருத்தமற்றது; நியாயமற்றது; முறையற்றது.

'ஒவ்வொரு இனத்தவர்களுக்கும் அவர்களுடைய கலை கலாசாரம் முதலியன இருக்கின்றன. அந்நிய ஆட்சிக் காலத்தில் சிங்கள மக்களுடைய கலை, கலாசாரம் முதலியன எந்த விதத்தில் அழித்தொழிக்கப்பட்டதோ அதே விதத்தில் தமிழ் மக்களுடைய கலை, கலாசாரம் முதலியனவும் அழித்தொழிக்கப்பட்டன என்பதை எவராலும் மறுக்க முடியாது.

### வேறுபட்ட கலாசாரங்கள்

'அந்நிய ஆட்சிக் காலத்தில் சிங்கள மக்களுடைய கலை, கலாசாரம் முதலியன அழித்தொழிக்கப்பட்டது என்ற உண்மையை முன் பேசிய பேச்சாளர்கள் நன்ருக எடுத்துரைத்தார்கள். சிங்கள மக்களது கலை, கலாச்சாரம் முதலியனவும், தமிழ் மக்களது கலை, கலாசாரம் முதலியனவும் அந்நிய ஆட்சிக் காலத்தில் வளராமல் இருந்தன என்பது அனைவரும் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மையாகும். அந்த உண்மையிலிருந்து ஒன்றைத் தெளிவாக எடுத்துரைத்ததற்கு என்னுடைய சக அங்கத்தவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கி

(14-ம் பக்கம் பார்க்க)

# ஆவின் பாலுடன் ஆகாத நோய் தாவி விட்டதாம்?

உங்கள் நோய்

பதிலளிப்பவர்:
**வைத்திய கலாநிதி**
**நா. கந்தையா**

மு. இரத்தினம்,
தம்பலகாமம்

கே: எனது பசுக் கன்றுக்கு ஏற்பட்ட புண்ணுக்கு ஒரு வைத்தியர் கொடுத்த எண்ணை போடப்பட்டது. அந்த எண்ணெயின் நஞ்சுத் தன்மை தாய் பசுவுக்கு ஏற்பட்டு, அதன் பாலைக்குடிக்கும் எனக்கும் இரத்தத்துடன் கலந்து தொந்தரவு கொடுக்கின்றது. இது ஏற்பட்டு ஏறக்குறைய 10 மாதம். தயவுசெய்து மருந்து கூறுங்கள்?

ப: இது உங்கள் மனத்தைப் பற்றிய வியாதி. முதலில் பாலை நீங்கள் மாத்திரமா, அன்றேல் இன்னும் யாராவது சாப்பிடுகிறீர்களா? அப்படியானல் மற்றவர்களுக்கும் ஏதாவது தொந்தரவு உண்டா? இவற்றையும் அவசியம் தெரிய வேண்டாமா?

எம். சின்னப்பன்,
பசறை

கே: ஐம்பத்தைந்து வயதுடைய நான் சுமார் ஏழு வருடகாலமாக வயிற்று வலியால் மிக அவதியுறுகின்றேன். பலரிடம் வைத்தியம் செய்தும் யாது பயனுமில. தக்க பரிகாரமுறை கூறுங்கள்.

ப: இது குன்மரோகத்தைப் பற்றியது. தக்க வைத்தியரிடம் 'வில்வாதிலேகியம்' வாங்கிச் சாப்பிட்டுவரக் குணம் கிடைக்கும்.

ஏ. பி. பிலிப்பு,
நாம்மலகூரிய

கே: அறுபத்தொரு வயதுள்ள எனக்கு அடிக்கடி சலம் போகின்றது. சிறுநீரில் சர்க்கரை இருப்பதாக டாக்டர்கள் கூறி, ஊசியும் போடுகின்றார்கள். கிட்டத்தட்ட 2 வருடகாலமாக இருக்கின்றது. வரவர மெலிந்துவிட்டேன். என்ன செய்ய டாக்டர்?

ப: இது மதுமேக ரோகம். சொறிதலையோ, புண் முதலியனவோ ஏற்படாதுபாதுகாக்கவும். உணவு வகை முக்கியம், வரகுசாதம், குரக்கன்பிட்டு, களி, கூள் முதலியனவும், பழவகைகளும் நன்று. இரவில் அதிகமாக உண்ணுதல் நன்றல்ல.

நறுத்தாளி இலைகளை வெய்யிலில் காயவைத்து இடித்துத் தூளாக்கவும். இந்தத்தூளில் இரு தேக்கரண்டி அளவு தேனில் காலைமாலை உண்டு வரவும்.

அத்துடன் கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய் சிந்திர மூலம், தேவதாரு, கோரைக் கிழங்கு வகைக்கு இரு களஞ்சு குடி நீரிட்டு காலை மாலை குடிக்கவும். அத்துடன் சிறுநீரையும் பரிசோதிக்கவும். ஆச்சரியமான குணம் கிடைக்கும்.

டி. ஐ. ஜசக்,
டொலஸ்பாக

கே: எனது மூன்று குமாரருக்கும் ஓர் குமாரத்திக்கும் பிறந்த காலம் தொட்டு கொன்னை தட்டுகின்றது. இதற்கு எந்தவித வைத்திய முறை செய்வது என்பதை அறிய விரும்புகின்றேன்.

18 வயதுடைய எனது மகன் எஸ். எஸ். சி. சித்தியடைந்துள்ளார். ... பேசுவதற்கு முடியாது. கொன்னை தட்டலுண்டு.

ப: உங்கள் மக்களுக்கு பிறப்பிலேயே இவை ஏற்பட்டிருக்கலாம். மூளையில் பேசும் சக்திக்குரிய பகுதியில் நரம்புப் பிழைகள் இருக்கலாம்.

மூளைநோய் நிபுணரிடம், நேரடியாகச் சென்று காட்டி ஆலோசனை பெறுவது உத்தமம்.

த. மயில்வாகனம்,
கைதடி

சே: ..................?

ப: வயதில் இளைஞராகவுள்ள உமக்கு நான் என்ன சொல்ல முடியும்? இருந்தும் தக்க வைத்திய நிபுணரை நேரடியாகக் கலந்து ஆலோசித்தல் நன்று.

வ. சாமிநாதன்,
கரவெட்டி

கே: எனது மனைவிக்கு தற்போது வயது ஐம்பத்தாறு. கடந்த 35 வருடங்களாக மலங்கழிவது மிகக் கஷ்டம். மூன்று நாளைக்கு ஒரு முறை தான் போகின்றது. தக்க ஆலோசனை சொல்வீர்களா?

ப: உங்கள் மனைவிக்கு மூல நோய் இருப்பதாக எண்ண இடமுண்டு. ... செமிக்கக் கூடிய உணவு வகைகள், வாழைப்பழம், பப்பாப்பழம், வில்வம்பழம் முதலியன கொடுக்கவும். எண்ணை சேர்ந்த பொருட் பண்டங்கள் நன்றல்ல கிழமைக் கொருதரம் சுத்தமான ஆமணக்கெண்ணை கொடுத்து வரவும். தினசரி மலங்கழிக்க பழக்கிக் கொள்ளவும். வயது கூடிவிட்டதால் சத்திர சிகிச்சை நன்றல்ல.

செல்வி. செ. மா.
இக்கிரியாகலை

கே. எனது தாயாருக்கு கடந்த நான்கு வருடங்களாக வெள்ளை படுகின்றது. மூன்று பிள்ளைகளும் இக்காலத்துக்குள் பிறந்து விட்டன. மொத்தம் பத்து பிள்ளைகள் இப்போது வயது 39. தக்க ஆலோசனை கூறுங்கள்.

ப: இன்று நாட்டிலுள்ள நங்கையரில் 80 வீதமானோரை வாட்டிவரும் நோய் இது. தகுந்த சுகாதார முறையைக் கைக்கொள்ளாமலும், போதிய உணவு உட்கொள்ளாமையாலும், அதிகம் பேறு காரணமாகவும் இது அனேக மாதருக்கு ஏற்படுகின்றது.

பொதுவாக உங்கள் அன்னைக்கு அதிகப்பேறு காரணமாகவும், பெலவீனம் காரணமாகவும் ஏற்பட்டிருக்கின்றதெனலாம்.

நன்கு சுத்தமாக இருப்பதோடு, நல்ல சுத்தமான உள் ஆடையும் அணிதல் வேண்டும். சத்துள்ள உணவு உட்கொள்ளவும். பழவகைகள் மிகமிக நன்று

'ராகுலன்'
கொழும்பு

கே: ......................?

ப: உமது வயதும் நல்ல மட்டமான வயது. அத்துடன் கொழும்பிலும் இருக்கின்றீர். உமது பெற்றோரின் உதவியுடன் கொழும்பு பெரிய வைத்திய சாலைக்கு சென்று அதற்குரிய வைத்தியரோடு கலந்து சத்திர சிகிச்சை செய்வது நன்று. ஒரு கிழமையில் நல்ல நிலையை அடையலாம்.

சி. வேலாயுதம்
நல்லூர்.

கே: வலது கையும் வலது காலும் பாவிக்க முடியாத நிலைமை. சூம்பி விட்டது வயது 67. தக்க ஆலோசனை தரவும்.

ப: உங்களுக்கு ஏற்பட்டிருப்பது. பாரிசவாதம் மூளையில் உள்ள பகுதியில் இரத்த அடைப்புக் காரணமாகவோ அல்லது வேறு ஏதாவது காரணமாகவோ ஏற்பட்டிருக்கின்றது. சரியானபடி இரத்த ஓட்ட மில்லாமையாலும், நரம்புகள் பலவீன மடைந்ததாலும் அவயவம் சூம்பி விட்டதெனலாம்.

எனவே தகுந்த வைத்தியரிடம் நேரடியாகச் சென்று வைத்தியம் செய்வது மிகச் சிறந்தது.

உங்கள் நோய்?
'சுதந்திரன்'
த. பெ. 1183,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 நவம்பர் மாதம் 21-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் - 3411 த. பெ. 1183

# ஆபிரிக்க மக்களுக்கு ஆதரவு

'நான் நினைத்தேன் நீங்கள் தங்கம் தோண்டி எடுக்கத் தான் வந்திர்களென்று. ஆனால் நீங்கள் வந்திருப்பது எனது மக்களையும் எனது நாட்டையும் கொள்ளையடிப்பதற்கே என்பது இப்பொழுது தான் தெரிகிறது'

இவ்வாறு ரொடிசியாவில் 75 அண்டுகளுக்கு முன்பு ஆட்சி புரிந்த ஆபிரிக்க மன்னரான லொபென்குலா தங்கம் தேடவந்து நாட்டையே கைப்பற்றிய வெள்ளையர்களைப் பார்த்து வேதனையுடன் கூறினாராம்.

ரொடிசியாவில் குடியேறிய 217,000 வெள்ளையர்கள் அந்நாட்டுச் சுதேசிகளான 4,000,000 ஆபிரிக்கர்களை அடக்கி ஆளுகின்றனர். ஆயுதபலத்தைக்கொண்டு கறுப்பர்களை அடக்கி, வெள்ளையர் ஆட்சியை அங்கு நிரந்தரமாக்குவதற்காகவே ரொடிசியப் பிரதமர் ஸ்மித் ஒரு தலைப்பட்சமாகச் சுதந்திரப் பிரகடனம் செய்துள்ளார். இப்பிரகடனம் தூங்கிக்கொண்டிருந்த ஆபிரிக்கச் சிங்கத்தைத் தட்டி யெழுப்பியுள்ளது.

இது ஒரு விந்தையான சுதந்திரம்— ஸ்மித்தின் பிரகடனம் 2 இலட்சம் வெள்ளையருக்கு சுதந்திரம் வழங்கியுள்ளது. 40 இலட்சம் ஆபிரிக்கர்களை அடிமைளாக்கியுள்ளது. இந்த எதேச்சாதிகார நடவடிக்கையால் ஆபிரிக்க நாடுகளிலேயே கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடுகள் ரொடிசிய ஆபிரிக்க மக்களுக்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுப்பதென உறுதி பூண்டுள்ளன என்றும் இதுபற்றி இறுதி முடிவு செய்ய ஆபிரிக்க ஐக்கிய சபை கூடுகிறதென்றும் செய்திகள் கூறுகின்றன. அவசியமானல் ரொடிசிய விடுதலைக்காகப் பலாத்காரம் பிரயோகிக்கவும் தயங்கமாட்டோமென அந்நாடுகள் அறிவித்துள்ளன. எழுச்சிபெற்ற ஆபிரிக்காவை வெள்ளையர்களால் இனி அடக்கி ஒடுக்கி ஆளமுடியாது.

இன்று முழு உலகமும் ஸ்மித்தின் ஆட்சியை எதிர்த்து நிற்கிறது. ஆயினும் ஸ்மித் தனது எதேச்சாதிகாரத்தை தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் எதிர்ப்பை அவர் துச்சமாக மதித்துள்ளார். எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும், பிரிட்டன் வெள்ளையர்களைக் கைவிடமாட்டாதென்ற நம்பிக்கை அவருக்குஇருக்கிறது போலும். காரணம் ஸ்மித்தின் அரசாங்கம் சட்டவிரோதமான அரசாங்கம் எனப்பிரகடனம் செய்த பிரிட்டன் சட்ட விரோதமான அரசாங்கத்தை அகற்றுவதற்காக எந்த நடவடிக்கையும் எடுக்காமலிருப்பதுதான்.

பிரிட்டன் நினைத்தால் 24 மணி நேரத்தில் அங்கே சட்டபூர்வமான அரசாங்கத்தை நிறுவி சுதேச மக்களுக்கு ஆதிபத்திய உரிமையை வழங்கமுடியும். ஆனால் அவ்வாறு செய்ய பிரிட்டன் படைபலத்தைப் பிரயோகிக்கத் தயாராயில்லை. இது ஒருகையில் ஸ்மித்தைத் தட்டிக் கொடுப்பதாகும். சட்ட விரோதமான அரசாங்கமெனப் பிரகடனம் செய்து விட்டு; அதே அரசாங்கம் நிலைத்து நிற்பதைப் பார்த்து சகித்துக் கொண்டிருப்பது விந்தையிலும் விந்தையாகும்.

பிரிட்டன் ஏதோ ரொடிசியாமீது பொருளாதார நிர்ப்பந்தங்களைப் பிரயோகிக்கிறதாம். இம்மாதிரி நிர்பந்தங்கள் தென்னாபிரிக்கா விஷயத்தில் செல்லாக் காசானதை உலகமே கண்டது. ஆதலின், இது ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்று குற்றஞ்சாட்டுகின்றன ஆபிரிக்க நாடுகள்.

ரொடிசியாவில் வெள்ளையர் கை ஓங்கி நிற்பதற்கும், ஆபிரிக்க மக்கள் அடிமைகளாக்கப் பட்டிருப்பதற்கும் பிரிட்டனே பொறுப் பேற்கவேண்டும்.

ரொடிசியாவில் சுதேசிகளைக் காட்டுப் பகுதிகளுக்கும், வரண்ட பிரதேசங்களுக்கும் விரட்டி அடித்துவிட்டு, வெள்ளையர்கள் விளைச்சல் மிகுந்த நிலங்களைக் கைப்பற்றிக் கொண்டதற்கு பிரிட்டனேகாரணமாகும். 4,000,000 சுதேசிகளில் 10,000 பேர்களுக்கு மட்டும் வாக்குரிமை அளித்திருப்பதற்கும் பிரிட்டனே பொறுப் பேற்கவேண்டும். ரொடிசியப் பாராளுமன்றத்தில் 65 ஸ்தானங்களில் 50 ஸ்தானங்களை வெள்ளையர்களுக்குத் தானமாக வழங்கிவிட்டு 15 ஸ்தானங்கள் மட்டும கறுப்பர்களுக்கு ஒதுக்கியிருப்பதற்கும், அந்தப் 15 தொகுதிகளிலும் வாக்குரிமை பெற்றவர்களில் வெள்ளையர்களே பெரும்பான்மையாக இருப்பதால் வெள்ளையர்களின் கையாட்களே தெரிவுசெய்யப் படுவதற்கும் பிரிட்டனே பொறுப்பு.

இக்காரணங்களை முன்னிட்டு ரொடிசியாவின் ஆபிரிக்க மக்களுக்கு பிரிட்டன்மீது நம்பிக்கை கிடையாது. பிரிட்டிஷ் அரசாங்கம் வெள்ளையர்களுக் கெதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்காதென்பது அவர்களின் முடிவு. ஆகவே அவர்கள் இன்று நேரடிப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். அங்கு ஏற்பட்டுள்ள கொந்தளிப்பைப் பார்க்கும் போது வெள்ளையர்களை வெறுக்கும் 'மாவ் மாவ்' போன்ற இயக்கங்கள் தோன்றி ரொடிசியா வெள்ளையர்களின் புதை குழியாக மாறினாலும் வியப்பன்று,

ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் தேசிய ஜனநாயகக்கட்சி போன்ற சுதேசிகளின் அரசியல் ஸ்தாபனங்கள் ரொடிசியாவில் தடை செய்யப்பட்டுள்ளன. எத்தகைய அரசியல் நடவடிக்கைகளிலும் ஈடுபட ஆபிரிக்கர்கள் அனுமதிக்கப்படுவதில்லை. ஸ்மித்தின் சிறைமுகாம்களில் சுமார் 10,000 பேர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். நாட்டிலே அவசரகால நிலைமை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய அடக்கு முறைகளால் ஆபிரிக்கர்களை அடக்கியாள முடியவில்லை என்பதை அவர்களின் இன்றைய எழுச்சி எடுத்துக் காட்டுகிறது. அவர்களுக்கு ஆயுதங்கள் உட்பட எல்லா உதவிகளையும் கொடுத்துதவ ஆபிரிகக நாடுகள் முன் வந்துள்ளன.

இந்த எழுச்சியை ஒடுக்க பல உபாயங்களை ஸ்மித் கைக்கொள்ளுகிறார் அவருக்குப் பக்கபலமாக போர்த்துக்கலும் தென்னபிரிக்காவும் நிற்கின்றன தென்னபிரிக்காவின் வர்வூட், போர்த்துக்கலின் சலாசர், ரொடிசியாவின் ஸ்மித் ஆகியோரைக் கொண்ட ஒரு மூக்கூட்டு 'அச்சு' உருவாகியிருப்பதாகக் கூறப்படுகிறது. வர்வூட் விமானங்களையும் ஆயுதங்களையும் ஸ்மித்துக்குக் கொடுத்துதவுகிறாராம்.

அத்துடன், ஸ்மித் ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெள்ளையர்களைப் பெருவாரியாகக் கொண்டுவந்து ரொடிசியாவில் குடியேற்றுகிறாராம். வெள்ளையர்களின் எண்ணிக்கையைப் பெருக்கி உள்நாட்டில் அவர்களின் வலிமையை வளர்க்கவே இந்த முயற்சி.

ஆயினும் கிளர்ந்தெழுந்துள்ள ரொடிசிய, சுதேசிகளும் விழிப்படைந்துள்ள ஆபிரிக்க நாடுகளும் வெள்ளையர்களின் மூக்கூட்டு 'அச்சை' முறியடிப்பது திண்ணம். அத்துடன் 'இருண்ட' கண்டத்தில் பிரிட்டனின் காலனி ஆதிக்கத்துக்கே சமாதி கட்டப்பட்டு விடும் என்பதில ஐயமில்லை.

[illegible] ஒதுக்கலையும் அடக்கு முறையையும் எதிர்த்து ரொடிசியாவில் ஆபிரிக்க மக்கள் நடத்தும் [illegible]க்கு இலங்கை உட்பட உலக நாடுகளின் பூரண ஆதரவு உண்டு. எனவே இறுதி வெற்றி அவர்களுக்கே!

# இருட்டில் உலவும் எத்தர் ஒளியில் வெளியே வரட்டும்

## தீமையைத் தூண்டும் தீயவர் ஒழியட்டும்

அத்தியாவசியமான பொருட்களின் விலைகளைக் குறைத்து பொது மக்களுக்கு அடபொருட்கள் சீகராக வினியோகிககப்படுவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் பெரு முயற்சியுடன் செய்து வருகிறது. வானளவு உயர்ந்துவிட்ட விலை வாசி ஏற்றதைதக் குறைக்க முடியாதிருக்கிறது. இதற்குக் காரணம் நாடறிந்த தொன்றாகும். பேராசை வெறி பிடித்த வர்த்தகர்களினதும் இருட்டுச் சந்தை இலாப வேட்டைக்காரர்களினதும் கைங்கரியங்களே தான் காரணமாகும். பதுக்கி வைத்து சந்தர்ப்பம் பார்த்து பல மடங்கு லாபம் சம்பாதிக்கும் பகற்கொள்ளைக் காரர்களின் பித்தலாட்டமே இன்று நாட்டில் ஏற்பட்டிருக்கும் தட்டுப் பாடுகளுக்கு மூலமாகும்.

ஆகவே, பதுக்கல்காரர்களும், இருட்டுச் சந்தை வியாபாரிகளும் நிச்சயமாகக் கண்டுபிடிக்கப் பட்டு தக்க தண்டனை கொடுக்கப் பட வேண்டியவர்களே. இவர்களைக் கண்டு பிடிக்க அரசாங்கம் மட்டும் நடவடிக்கை எடுத்துக் கொண்டால் போதாது. பொது மக்களும் போதிய சிரத்தை காட்ட வேண்டியவர்களே.

நாட்டில் இன்று எற்பட்டுள்ள தட்டுப்பாட்டுக்கு ஒரு சிலரே காரணமானவர்கள். எனினும் இந்த ஒரு சிலரின் நடவடிக்கைகளினல், நாட்டு மக்கள் அனைவருமே திண்டாடித் தவிக்க வேண்டிய நிலையிலுள்ளனர். திண்டாடித் தவிப்போர் அனைவரும் திரண்டெழுந்து தீமை விளைவிப்போரின் திரைமறைவு நாடகத்தை அம்பலப்படுத்தியாக வேண்டும்.

### பழகிய பழக்கம்

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் தனியார் துறைத் தொழில்களும் வர்த்தகமும் விருத்தியடையும் என்ற பொதுவான கருத்து, பொதுத் தேர்தலுக்கு முன்னர் நாடெங்கனும் இருந்து வந்தது. ஆனல் ஐக்கிய தேசியக் கட்சி ஏனைய பல கட்சிகளுடன் இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்துக் கொண்டதும் நாட்டில் பல பிரச்சினைகளை தலைதூக்கியுள்ளன.

இப் பிரச்சினைகளை ஆராயபபுகின், பலதரப்பட்ட உண்மைகள் வெளிப்படுவதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது.

1956-ம் ஆண்டுக்கு முன்னர், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி செலுத்திக்கொண்டிருந்த காலத்தில், நாட்டில் இருட்டுச் சந்தை வியாபாரிகளும் கொள்ளை லாபக்காரர்களும் அதிகரித்துக்கொண்டனர் என்பது உண்மை. இத்தகைய கெடுமதியாளர்களைத் தண்டிக்கும் விடயத்தில் அப்போதய அரசு சற்றுக் கருணையுடன் நடந்து வந்

சுதந்திரன் அரசியல் நிருபர்

திருக்கிறது என்ற குற்றச் சாட்டு எப்போதும் இருந்து வந்தது. அப்பொழுது கிடைத்த சலுகையை இப்பொழுத, ஆட்சி மாற்றத்தின் பின்னர் அனுபவிக்கலாம் என்று சிலர் கருதியுள்ளனர் போலும். இக் காரணத்தினலேதான் இன்று இத் தீயவர்களின் எண்ணிக்கை கூடிவிட்டது போலும்.

எவ்வித சலுகையோ தயவு தாட்சணியமோ தாமதமோ ஏற்படுத்தாமல் இத் தியவர்களை ஒழித்துக் கட்டும் பணியில் அரசாங்கம் முழு மூச்சுடன் ஈடுபடவேண்டும். பொதுமக்களும் இத்துறையில் அரசாங்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும். ஆனல், தற்போதைய சட்டங்கள் இப்பணியைச் சரிவர நிறைவேற்றப் போதுமானவையல்ல கள்ளச்சந்தைப் பேர்வழிகள், பதுக்கல் ஆசாமிகள போன்ற சமூகவிரோதிகளுக்கு நீண்டகால சிறைத் தண்டனை விதிக்கக் கூடியதாகச் சட்டங்கள் உடனடியாக இயற்றப்பட வேண்டும். இல்லையேல் இந்த முயற்சியின் முழுப்பலனையும் பெற முடியாது போய்விடும்.

### தன்மூக்குப் போனலும்......

வாழ்க்கைச் செலவைக் குறைத்து பொது மக்களின் வாழ்வை வழமாக்க ஒரு புறம் பெரு முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. அதே வேளையில் வேறோர் புறம் பொது மக்களின் சுபீட்ச வழிப்பயணத்துக்கு குழிதோண்டும் கைங்கரியமும் வலுதீவிரமாக நடைபெற ஆரம்பித்திருக்கிறது.

இதற்கு முன் ஆட்சி புரிந்தவர்கள் ஏற்படுத்திவிட்டுச் சென்ற பலதரப்பட்ட பணிகளுக்கான பலாபலன்களை இந்நாடு இன்று அனுபவிக்க ஆரம்பித்துள்ளது. விலைவாசி ஏற்றத்தைக் குறைக்க வெகு தீவிரப் போராட்டம் நடைபெறும் போது வேலை நிறுத்தம் போன்ற விபரீத விளையாட்டுக்களைக் காட்டுவதில் சிலர் ஈடுபட்டுள்ளமை வருந்தத் தக்கதே.

'தன் மூக்குப் போனலும் எதிரிக்குச் சகுனப்பிழையாக விருக்க வேண்டும்' என்ற ஒரே நோக்குடன விஷமத்தனம் புரிபவர்களே இன்று இத்தகைய நடவடிக்கைகளில் நட்டம் கொண்டுள்ளனர்.

எண்ணெய் கூட்டுத்தாபனத்தில் ஏற்பட்ட சிறு வேலைநிறுத்தம் மிகவும வேடிக்கையான ஒரு காரணத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இதனைத் தொடர்ந்து துறைமுகத்துளும் சில விளையாட்டங்கள் நடை பெற்றிருக்கின்றன. மொத்தத்தில் இவ்வேலை நிறுத்தம் அற்பாயுசில் முடிவடைந்து விட்டது.

### விஷமக் காரர்

ஒரு கூட்டுத்தாபன உறுப்பினருக்கும் சில தொழிலாளர்களுக்கும் ஏற்பட்டதாகக் கூறப்படும் சின்னஞ் சிறு பிணக்குக்கு வேலை நிறுத்தத்தை மேற்கொள்ளத் தூண்டியவர்கள் வேண்டுமென்று விஷமத்தனத்தை வரவழைத்தவர்களே யாவர்.

தொழிலாளர்களின் நலத்தைப் பாதுகாக்கவே பலதரப்பட்ட தொழிற் சங்கங்கள் இயங்குகின்றன. தொழிற் சங்கம் என்றுலே வேலை நிறுத்தம்தான் என்ற அபிப்பிராயம் ஏற்படத் தக்கவகையில் இன்று கருத்து பொதுமக்களிடம் ஊன்றப் பட்டுவிட்டது. இதனல் வேலை நிறுத்தம் என்ற இறுதி ஆயுதம் இடம் பெயர்ந்து முன்னேடி வந்துநிற்கின்றது. எடுத்ததற்கெல்லாம் வேலை நிறுத்தங்கள் மேற்கொள்ளப்படுவதனல் விளைவுகள் வேதனைதரக் கூடியனவாகவுள்ளன. விலை [illegible]திக்க முடியாத வேலை நிறுத்த ஆயுதத்தை துஷ்பிரயோகம் செய்யத்தூண்டுபவர்களை அரசாங்கம் இனனும் சும்மா விட்டுக் கொண்டிருப்பது அழகல்ல.


---

# தமிழிற் பரிசோதனை அதிபரின் அறிக்கை

அரசாங்கக் கணக்குகளின் மேலான கணக்குப் பரிசோதனை தலைமை அதிபரின் 1963-64-ம் ஆண்டுக்கான அறிக்கையின் முதலாம் பகுதி தமிழில் முதல் முறையாக வெளியிடப் பட்டிருக்கிறது. இம்மொழி பெயர்ப்பைத் தயாரிக்கும் பொருட்டில் திருவாளர்கள் ஏ. குணநாயகம், கே. சதாசிவம், எம் ஜீ. ஜெயரத்தினம், எஸ். சிவபாலன், கே. செல்லநாதன் ஆகியோர் ஈடுபட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலீசாரின் அட்டூழியம் எல்லை மீறுகிறது



பத்திரிகைப் படப்பிடிப்பாளரான திரு. கே ராஜப்பன் கொழும்பு புதிய செட்டித்தெருவில் ஒரு பணிமனையை அமைத்திருக்கிறார். கடந்த 14-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இப் பணிமனை திறந்துவைக்கப்பட்டது. பணிமனை திறப்புவிழாவுக்கு வந்த நீதியரசர் பி. ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதிகள், டாக்டர் ஆர். எச் எஸ். மென்டிஸ் ஆகியோருடன் திரு. ராஜப்பன் காணப்படுகிறார்.

## 'கள்ளத்தோணி'யென கைது செய்யப்பட்டவரின் அனுபவம்

## தலைநகரில் கையேந்தினர்

சட்டவிரோத குடிவரவினர் என்ற குற்றச் சாட்டின் மீது பொலீசாரால் கைது செய்யப்படுபவர்களுக்கு கொடுக்கப்படும் உணவு கொலைக் குற்றச் சாட்டின் மீது மறியல் அனுபவித்து வரும் ஒரு குற்றவாளிக்குக் கொடுக்கப்படும் உணவிலும் பார்க்க தரத்திலும் அளவிலும் குறைந்ததாகும். சட்டவிரோத குடிவரவினர் என்ற சந்தேகத்தின் மீது ஒருவர் கைது செய்யப்பட்டதும் அவரை 1950-ம் ஆண்டுக்குப் பின்னர் இந் நாட்டில் குடியேறியவர் என்று கூறும் வண்ணம் இம்சிப்பதே பொலீசாரின் முதற் கடமையென்று தெரிகிறது. இந்த ஆண்டு யூலை மாதம் சட்ட விரோதமாக குடியேறியவர் என்ற சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்டு இத் திங்கள் முதல் வாரத்தில் விடுதலை செய்யப்பட்ட ஒருவர் நமது நிருபரிடம் தமது அனுபவத்தைக் குறிப்பிடுகையில் மேற்கண்ட தகவல்கள் தெரியவந்துள்ளன.

கையில் ஒரு சதக் காசும் இல்லாத நிலையில் கொம்பனித்தெரு முகாமிலிருந்து விடுதலை செய்யப்பட்டஇவர் கொழும்பு நகரில் பணத்திற்காக இரந்து கொண்டு நிற்கையில் எதிர்பாராத விதமாக நமது நிருபரைச்சந்தித்தார். நமது நிருபரிடம் இவர் கூறிய விபரம் வருமாறு:

'ஒரு நாட் காலை (கடந்த யூலை மாதத்தில்) எதுவித விசாரணையுமின்றி இரு இரகசியப் பொலீசார் என்னைக் கைது செய்தார்கள். அப்பொழுது அழுது கொண்டு ஓடிவந்த எனது மகனை மிருகத்தனமாக நிலத்தில் தூக்கி வீசிவிட்டு என்னை அழைத்துச் சென்றார்கள்.

'மாவட்ட பொலீஸ் நிலையத்தில்வைத்த எனது அறிவு கெடும்வரை—இந்த நாட்டுக்கு 1950-ம் ஆண்டுக்குப் பின்னர் வந்தவன் என்று கூறும் வண்ணம்- கையாலும் காலாலும் ஒருவர் பின் ஒருவராக அடித்தார்கள். அன்றைய தினம் எனக்கு உணவும் தரப்படவில்லை.

'மாவட்ட பொலீஸ் நிலையத்திலிருந்து மன்னார் முகாமிற்கு அழைத்துச் சென்றார்கள். எதுவித விசாரணையுமின்றி இருபத்தைந்து நாட்கள் அங்கு காவல் வைக்கப்பட்டேன்.

இருபத்தைந்து நாட்களுக்குப்பின்னர் கொழும்பு முகாமிற்கு கொண்டுவரப்பட்டேன். ஒரு கிழமைக்குப் பின்னர் குடியகல்வு குடிவரவுத் திணைக்களத்திற்கு அழைத்துச்சென்றுவிசாரணை நடாத்தினார்கள். விசாரணையின்பின் மீண்டும் முகாமிற்கு அழைத்து வரப்பட்டேன்.

'கொழும்பு முகாமில் உள்ள உணவு வசதிகள் மன்னார் முகாமிலும் பார்க்க மோசமானதாகவே உள்ளன. இரண்டு மாதகாலம் கொழும்பு முகாமில் வைத்திருந்தவர்கள் எத்தகைய முன்னறிவித்தலும் இன்றி விடுதலை செய்துள்ளார்கள். திரும்பி ஊர் செல்வதற்கு பணமில்லை மாற்றி உடுப்பதற்கு உடையில்லை. தேனீர் குடிப்பதற்குத் தானும் கையில் காசில்லை' என்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கூறினார்.

இவர் 1953ம் ஆண்டிலும் 'கள்ளத்தோணி' என்ற குற்றச்சாட்டின் மீது கைது செய்யப்பட்டு விடுதலையானவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(பொலீசார் மீண்டும் அவருக்கு துன்பம் விளைவிக்கலாம் என்ற காரணத்தினாலேயே சம்பந்தப்பட்டவரின் பெயரும், இடமும், கைது செய்யப்பட்ட திகதியும் இங்கு கொடுக்கப்படவில்லை.)

# குறுகிய காலத்தில்....

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகும். பன்விலையில் புதிய பணிமனை திறக்கப்பட்டு இயங்கி வருகிறது. தலவாக்கொல்லை பகுதியில் கழகத்தின் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்காக பசுமலையில் உப பணிமனை ஒன்று திறக்கப்பட்டுள்ளது. அட்டன், மஸ்கெலியா, தலவாக்கொல்லை, இராகலை ஆகிய மாவட்டங்களில் மாவட்டக் குழுக்கள் இயங்கி வருகின்றன.

'கடந்த வருடம் கழகம் பல பிரச்சாரக் கூட்டங்களை நடத்தியது. இக் கூட்டங்களில் தலவாக்கொல்லை, மஸ்கெலியா ஆகிய பகுதிகளில் நடைபெற்ற கூட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. தலவாக்கொல்லை கூட்டம், அங்கு எமது அலுவலகம் விஷமிகளாற் தீயிடப்பட்டதைக் கண்டித்து நடாத்தப்பட்டது. சிறிமா—சாஸ்திரி ஒப்பந்த உடன்பாட்டை கண்டிப்பதற்காக மஸ்கெலியாக் கூட்டம் நடாத்தப்பட்டது. இக் கூட்டங்கள் எம் மக்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தின என்றால் மிகையாகது.

### தொழிற் தகராறுகளும் பிரச்சினைகளும்

'அடிப்படைப் பிரச்சினைகளை அன்றாடப் பிரச்சினைகளுக்கே தொழிலாளர்கள் பெரும்பாலும் முக்கியத்துவம் அளிக்கின்றனர். இத்தகைய பிரச்சினைகளில் வெற்றிபெறுவது நிர்வாகத்தினர் தயவிலேயே தங்கியிருக்கின்றது. இத்தகைய நிலையை மாற்றி அமைக்க வேண்டும். போராடுவதற்கேற்ற வழியில் தோட்டங்கள் தோறும் தோட்டக் குழுக்களை அமைக்க வேண்டும். நிர்வாகத்தினருடன் தகராறுகளை சுமுகமாகவே தீர்த்துக் கொள்வதிலேயே நாம் கவனம் செலுத்தி வந்துள்ளோம். நிர்வாகப் பிடிவாதமாயிருந்த சந்தர்ப்பங்களில் மட்டுமே வேலை நிறுத்தப்போராட்டங்களை நடத்தியுள்ளோம். வேலை நீக்கப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் ஒரு சிலவற்றை மட்டுமே சமரசமாகத் தீர்த்துக்கொள்ள முடிந்தது. தொழிலாளர் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்வதில் அவசியமேற்பட்ட சமயங்களில் எமது சொந்த நன்மையைப் பாராது பிற சங்கங்களுடன் மனப்பூர்வமாக ஒத்துழைத்து வந்திருக்கின்றோம்.

1964-ம் ஆண்டு மேதினத்தை அட்டன் நகரில் கழகம் கொண்டாடியது. மலையகமெங்குமிருந்து வந்த எமது உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் பெருமளவில்—கலந்து கொண்ட இம்மேதினக் கூட்டம், 1963-ம் ஆண்டு நடத்திய மேதினக் கூட்டத்தைவிட—சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றதென்பதை ஈண்டு குறிப்பிடல்வேண்டும்"

கழகத்தின் — முதலாவது வருடாந்த மாநாடு 1964ம் ஆண்டு மார்கழி மாதம் 12, 13-ம் திகதிகளில் அட்டன் நகரில் நடைபெற்றது. இம் மாநாட்டில் ஜனநாயக விரோத சிறிமா—சாஸ்திரி உடன்படிக்கையை எதிர்த்து கண்டனக்குரல் எழுப்பப்பட்டமையை இங்கு விசேடமாகக் குறிப்பிட வேண்டும்.

கடந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 10 அம்சக் கோரிக்கைகள் மலையகத் தொழிலாளர்கள் மத்தியில் ஒரு புரட்சியை ஏற்படுத்தக் கூடியவை. இக்கோரிக்கைகளை அடைவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. தொழிலாளப் பெருமக்களை ஓரணி திரட்டி, போராட்டத்தின் மூலமே இக்கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் என்ற உண்மையை தொழிலாளவர்க்கத்திற்கு உணர்த்த வேண்டியது எது முதற் கடமையாகும்.

## 'காப்பிய சொற்பொழிவுகள்'

கிழக்குப்புத்தக சபையின் முதலாவது வெளியீடான 'காப்பியச் சொற்பொழிவுகள்' என்னும் நூலின் அரங்கேற்று விழா சனிக்கிழமை மாலை 4 மணிக்கு மட்டக்களப்பு வந்தாறுமூலை மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறுகிறது.

சென்ற ஆண்டு கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்க அனுசரணையுடன் வந்தாறுமூலைமத்தியமாவித்தியாலய உயர்வகுப்பு மன்றம் நடாத்திய காப்பியப் பெரு விழாவில் இடம் பெற்ற சொற்பொழிவுகளையே கிழக்குப் புத்தக சபையினர் 'காப்பியச் சொற்பொழிவுகள்' என்னும் நூலாக வெளியிடுகின்றனர். விழாவிற்கான ஒழுங்குகளை வித்தியாலய அதிபர் திரு. சி. ராசதுரை அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

இலங்கைப்பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் கலாநிதி அ. சதாசிவம் அவர்கள் தலைமையில் இவ்விழா நடைபெறும்.

## வாசிகசாலையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிட்ட புத்தகங்கள் வெளியே கொடுக்கப்பட்டிருப்பதாக -வே கூறப்பட்டு வருகிறதாம்.

தமிழகத்திலிருந்து வரும் தினசரித்தாள்களும், வார, மாத ஏடுகளும் வெகுகாலம் நீந்த பழைய பனவாகவே உள்ளதாகத் தெரிய வருகிறது. புதியவற்றைக் கேட்டால், அவை இன்னும் வாசிகசாலைக்கு வந்து சேரவில்லை என்று கூறப்படுகிறதாம். இச்சஞ்சிகை விநியோகஸ்தர்களை நமது நிருபர் பேட்டிகண்டபோது, அவை உடனுக்குடன் விநியோகிக்கப்பட்டு விடுவதாகவும், வாசிகசாலைக்கே முதன் முதலில் கொடுக்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

வாசிகசாலைக்கென வந்து சேரும்இச்சஞ்சிகைகள் மாயமாக மறைவதற்கு அந்தரங்கமான பலப்பல காரணங்கள் கூறப்படுகின்றன அவற்றுள் 'இந்தியச் சஞ்சிகைகளை வேண்டுமென்றே மறைத்து விடவும், மாறாக பொதுவுடமை சீனா போன்ற நாடுகளிலிருந்து வெளியாகும் பத்திரிகைகளை பரப்பவும் ஒரு தனியான குழு வாசிகசாலையுடன் தொடர்புகொண்டிருக்கிறது என்பதும் ஒன்றாகும்.


## உங்களுக்குத் தெரியுமா?

எழுச்சி
இந்து இளைஞன்
ஈழச் சுடர்
சிரித்திரன்
தேனருவி
தாமரை
நோக்கு
அல்மதீனா
கலைக்குரல்
போர்முரசு



ஆகிய தமிழ் வெளியீடுகள் இலங்கையிலே வெளியாகின்றன.

இத்தனை தொகையான சஞ்சிகைகளை சிறந்த முறையில் அச்சிட்ட பெருமை ஈழத்திலே ஒரே ஒரு அச்சகத்திற்கே உரியது.

அந்த அச்சகம்

**சுதந்திரன் அச்சகம்,**

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.

தந்தி : சுதந்திரன் தொலைபேசி : 3411


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவுக்கு அப்பால்...

வெயிலின் வெப்பத்தால் புழுங்கித் தவிக்கின்றது உலகம். வேதனையின் வெப்பத்தால் புழுங்கித் துடிக்கின்றது அவனது உள்ளம். அவனுடைய கரிய விழிகளின் வரம்பில் கண்ணீர்ச் சரம் தொடுத்து நிற்கின்றது. அவனுடைய மனம் கசிந்துருகி தனக்குள்ளே வெதும்பி மாய்கிறது. நோயுற்ற உடலின் வேதனையைவிட வலுவற்ற உள்ளத்தின் வேதனை அவனை வதைத்தெடுக்கின்றது. இனம் தெரியாத ஏக்கம் அவனது இதயத்தை அரித்துக்கொண்டிருக்கின்றது. வேதனைக் கடலில் அவன் சுழன்றான். நினைவு வெள்ளத்தில் அவனது நெஞ்சம் மிதந்து, சுழன்று செல்கின்றது.

சுந்தரத்திற்குசிறு வயது முதலே நிறைய கடவுள் பக்தியுண்டு. பள்ளிக்குச் செல்லும் போது கூட விபூதி பூசாமல் செல்ல மாட்டான். தேவாரங்கள் எல்லாம் அவனுக்குத் தண்ணீர் பட்டபாடு. உள்ளமுருக, உணர்ச்சி பொங்கி வழிய பாடுவான். அவனது இளநெஞ்சிலே நீறு பூத்த நெருப்பாக ஓர் ஆவல் புதைந்து, புகைந்து கிடந்தது. முருகனின் அருள் தங்கும் மனித ஆலயமான கதிர்காமத்திற்கு ஒரு முறையேனும் சென்று வரவேண்டுமென்ற ஆவல் தான் அது. ஆனால் இது வரை அந்தப் பேறு அவனுக்குக் கிடைக்கவேயில்லை.

ஈழத்தின் ஒப்பற்ற புனித தலமான கதிர்காமம் திருவிழாக்கோலம் பூண்டிருந்த இனிமையான நாட்கள் அவை. அதன் பெருமையைபுதினப் பத்திரிகைகள் பக்கம் பக்கமாகபறை சாற்றிக் கொண்டிருந்த வேளை அது. இலங்கையின் பல பாகங்களிலிருந்து பெரும் சனசமுத்திரம் அங்கு பிரவாக மெடுத்துக் கொண்டிருந்தது. அருள் ததும்பும் முருகனைக் கண்டுகளிக்க அடியார்கள் கூட்டம் கூட்டமாக, குடும்பம் குடும்பமாக குவிந்து கொண்டிருந்தனர். அப்போதுதான் சுந்தரத்தின் நண்பர்களும் கதிர்காமம் செல்ல திட்டமிட்டனர். சுந்தரமும் அவர்களோடு சேர்ந்து கொண்டான் நீண்ட நாளைய ஆவல் நிறைவேறப் போகின்றதென்ற பூரிப்பு அவனுள்ளே பொங்கிக் கொண்டிருந்தது. தனது உள்ளத்தில் நிறைந்துஉணர்வில் ஒன்றிவிட்ட முருகப் பெருமானின் திருவடிகளில்விழுந்து தொழுது அவனது அருளைப் பெறவேண்டுமென்ற தணியாத ஆவல் அவனது இதயத்தில்துடித்துக் கொண்டிருந்தது.

சூரியனைச்சுழட்டிச்சுழன்றோடின நாட்கள். இனிய நினைவுகளில் சுந்தரம் சுழன்று கொண்டிருந்தான்.

'...பொங்கிப் பெருகி ஓடும் புனித கங்கையில் நீராடி பரிசுத்தம் பெற்று அருள்மயமான கதிர்காமத்தில் ஒளிச்சுடராய் ஒளிரும் முருகன் முன் நிற்கின்றேன். எனது இதயம் பக்தியால் உருகுகின்றது. 'முருகா முருகா' என அடியார்கள் எழுப்பும் ஒலி வானைத் தொடுகின்றது. பக்தி பிரவாகத்தால் ஆனந்தக் கண்ணீர் பெருக, உணர்ச்சிப் பெருக்கத்தால் உருகும் உள்ளத்தோடு நான் இறைவனைத் தொழுகின்றேன். முருகன் தனது அருட்கரத்தை நீட்டி என்னை ஆசிர்வதித்து அருளுகின்றான்.'

கங்கைவெள்ளம் போல் நினைவு பெருக்கெடுத்தோடுகின்றது. உண்ணும் போதும் உறங்கும் போதும் அவனுக்கு அதேநினைவு தான். ஆவலே உருவாய், ஆர்வமே உடலாய் அவனிருந்து கொண்டிருந்தான். இன்பஊற்று அவனிதயத்தில் சுரந்து கொண்டிருக்கின்றது. எல்லையில்லாத இன்பத்தில் அவன் மூழ்கி முக்குளித்துத் திளைத்துக் கொண்டிருந்த போது தான் முற்றிலும் எதிர்பாராத அந்த நிகழ்ச்சி நடந்துவிட்டது. அது சுந்தரத்திற்குத் திடீரென காய்ச்சல் கண்டது!

நன்றாக இருந்தவனுக்கு ஏற்பட்ட இந்த திடீர் சுகவீனம் அவனது பெற்றோர்களுக்கு திகைப்பையும் வியப்பையுமளித்தது. பிரயாணத்திற்கு ஏற்பாடு செய்த நாளும் வந்துவிட்டது. ஆனால் சுந்தரத்தின் உடல் நிலையில் மாற்றமெதுவுமில்லை. சுந்தரத்தை அழைத்துச் செல்ல வந்திருந்த நண்பர்கள் வியப்பின் விளிம்பில் நின்றார்கள். இரு நாட்களுக்கு முன் தங்களுடனிருந்து கதிர்காம யாத்திரைக்கான திட்டத்தை வகுத்தவன் இன்று கிழிந்த நார் போல கட்டிலில் கிடக்கின்றான்.

அவனது நண்பர்களுக்கு அந்த புனித யாத்திரை பக்தியால் விளைந்ததல்ல. அங்கு நடைபெறும் விந்தைகளைக் கண்டு மகிழத் துடிக்கும் ஆர்வத் துடிப்பால் ஏற்பட்டதே. ஒளிவு மறைவின்றி சொல்வதென்றால் அது அவர்களுக்கோர் உல்லாசப் பிரயாணமே தான்! ஆனால் சுந்தரத்தைப் பொறுத்த வரையில் அப்படியல்ல. அப்பழுக்கில்லாத அளவில்லாத பக்தியால் ஏற்பட்டதே தான்!

'...ஒரு பக்தனின் இருதயம் உலர்ந்த நெருப்புக்

## எமது சிறுகதை

குச்சியைப் போன்றது. இறைவனின் நாமத்தைக் கேட்ட மாத்திரத்தில் அவனது இருதயத்தில் 'அன்பு' அனலானது கொழுந்து விட்டெரிய ஆரம்பித்து விடுகின்றது. பக்தியற்றவனின் இருதயமோ ஈரமுள்ள நெருப்புக் குச்சியைப்போன்றது. எண்ணற்ற முறைகள் இறைவனைப் பற்றிய உண்மைகள் உபதேசிக்கப்பட்டாலும் அவனது மனம் உலகவிசயங்களை விட்டு இறைவனிடம் பக்தியைச் செலுத்துவதில் ஊக்கங்காட்டுவதில்லை. ...... என ராமகிருஷ்ணர் சொல்வது போல் சுந்தரம் உலர்ந்த நெருப்புக்குச்சியைப் போன்றும், அவனது நண்பர்கள் ஈரமுள்ள

**சி. சுவாமிநாதன்**

நெருப்புக் குச்சியைப் போன்றும் இயல்புடையவர்கள்.

'நான் வருவதை இறைவன் விரும்பவில்லை போலிருக்கின்றது. எல்லாம் அவன்செயல். நண்பர்களே நீங்கள் கவனமாகப் போய் வாருங்கள்' என்று தனது உள்ளத் தவிப்பை மறைத்துக் கொண்டு அவர்களுக்கு விடை தந்தான் சுந்தரம். நண்பர்களும் போய்விட்டார்கள்.

திருவிழாக்கோலம் பூண்டு அதிகோலாகலமாக காட்சி அளிக்கும் கதிர்காமமும்; கருணையே உருவான கதிர்காமக் கந்தனின் திவ்விய உருவமும்; அவனது அருளை வேண்டித் தொழும் பக்தகோடிகளும் அவனது மனக் கண்ணில் தோன்றி மறைந்து கொண்டிருந்தன. நேரில் காண இயலாததை நினைவிலும் கனவிலும் கண்டு கொண்டிருந்தான் சுந்தரம்.

நாட்கள் ஊர்ந்து நகர்ந்தன.

நண்பர்கள் சென்ற இரண்டு நாளில் ஆச்சரியமளிக்கும் விதத்தில் அவனது உடல் நிலையில் மாற்றம் கண்டது. ஆம். அவனைப் பிடித்த சுரத்தின் சீற்றம் தணிந்து அவன் எழுந்துமெல்ல நடமாடத் தொடங்கினான். அன்று மாலை அடுத்த வீட்டுப் பக்கம் போயிருந்தான். அங்குள்ள ஒரு பெரியவர் கதிர்காமம் போய் அன்றுதான் திரும்பியிருந்தார். கதிர்காமத்தின் சிறப்பையும், முருகனின் அருளையும் பற்றி அவர் உற்சாகமாகக் கூறிக்கொண்டிருந்தார். ஆவல் சுந்தரத்தை உந்தித் தள்ள அவனும் ஆர்வத்தோடு அதை செவிமடுத்தான்.

'...ஆகா! எவ்வளவு கண்கொள்ளா காட்சிகள்! கதிர்காமக் கடவுளின் அருட் பிரவாகத்தை என்னென்று கூறுவது. அடியார்களின் பக்தியால் எவ்வளவு அற்புதமான நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. நானும் எத்தனையோ புனித ஸ்தலங்களைப் பார்த்திருக்கின்றேன். ஆனால் கதிர்காமத்தைப் போல் எனது உள்ளத்தைத் தொட்ட ஆலயம் ஒன்றுமில்லை. ஒரு முறையேனும் நேரில் போய்ப் பார்த்தவர்களுக்குத் தான் இத்த உண்மை அதள்ளனப் புரியும்...''

விழிகளில் நீர் வழிந்தோட, மெய்ம மறந்துக் கேட்டுக் கொண்டிருந்தான் சுந்தரம். அவனது நெஞ்சை ஏனோ, ஏதோ அடைத்தது. உள்ள முருக அந்தப் பெரியவர் சொன்ன மொழிகள் அவனது இளம் உணர்ச்சிகளுக்குத் தூபமிட்டன-தூண்டிவிட்டன. ஆசை நெருப்பில் எண்ணெய்ப் போல் அந்த வார்த்தைகள் சொரிந்தன. அவன் அடி பெயர்ந்தான்.

இறைவன்பால் அவன் கொண்டிருந்த கரை காணா பக்திக்கிடையே சிறு ஆத்திர உணர்ச்சி தலை தூக்கியது. 'சோமுவும் சங்கரும் சிறிதுமே கடவுள் பகதியில்லாதவர்கள் தானே? பள்ளிக்கு நான் விபூதி அணிந்து செல்லும் போதெல்லாம் என்னை இகழ்ந்தவர்கள் தானே? ஆனால் அவர்களுக்குக் கதிர்காமத்தைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கும் போது அனவரதமும் ஆண்டவனையே மறவாதே எனக்கு அந்தப் பேறு கிடைக்கவில்லையே... இறைவனுக்கு சிறிதுமே இரக்கமில்லையோ...! கடவுளை நம்பினோர் கைவிடப்'படார்' என்று சிறு வயதில் ஆசிரியர் சொல்லிக் கொடுத்த தெல்லாம் பொய் தானோ? கடவுளுக்கு கொஞ்சமும் கருணையென்பதில்லையோ...!'

ஏமாற்றத்தால் நொந்து, நைந்த நெஞ்சைக் கீறிக் கிழித்துக்கொண்டுஉணர்ச்சிகள் பீறிட்டு எழுந்து ஓங்காரமிட்டன. ஏக்கமும் எல்லையில்லாத வேதனையும் இதயத்தில் கொந்தளித்துக் கொண்டிருந்தன. மனக் கொதிப்பில் நெஞ்சம் நெக்கி மாய உடல் உறக்கத்திலாழ்ந்தது.

இருளின் திரை விலகுகின்றது. வையக விளிம்புக்குக் கீழே ஆழ்ந்திருந்த உதயத்தின் விழிப்பு.

இயற்கையாகவே அதிகாலையில் எழுந்துவிடும் சுந்தரம் அன்று அலுத்துக் களைத்துப் போய் படுத்திருந்தான். உடலின் சோர்வுப் பளுவும் உள்ளத்தின் வேதனைப் பளுவும் அவனை அமுக்கி அழுத்தின. பரிதியின் இளம ஒளிக் கிரணங்கள் சன்னல் வழியே பாய்ந்து அவனது முகத்தில் ஒளி வீசின. அவன் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தான். பல் விளக்கி முகம் கழுவிய பின்னர் புதினப் பத்திரிகையை எடுத்துப் பிரித்தான்.

அலட்சியமாக எழுத்துக்களை மேய்ந்து கொண்டிருந்த அவனது இதயம் ஏன் அவ்வளவு பரபரப்பு? அவனது இதயம் ஏன் அவ்வளவு வேகமாக அடித்துக்கொண்டு துடிக்க வேண்டும்? அவனது உடல் ஏன் அப்படி நடுங்க வேண்டும்?

'ஐயோ'!—நெஞ்சை வெடித்துப் பிளந்து கொண்டு வெளி வந்தது அந்த வேதனை ஒலி. எதிர்பாராத அதிர்ச்சி அவனை அயர வைத்துவிட்டது. அந்தப் பத்திரிகையிலிருந்த செய்தி இதுதான்.

''...கதிர்காமத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்த தெய்யோவிற்றையைச் சேர்ந்த காரொன்று இங்கு கோரவிபத்துக்குள்ளாகியது. பிரயாணிகள் அனைவரும் பலத்த சேதத்திற்குள்ளாயினர். சோம, சங்கர் என்ற இளைஞர்கள் ஸ்தலத்திலேயே...'

கந்தரத்தின் நெஞ்சிலே ஒரு நினைவு பளிச்சிட்டது! 'அவர்களுடன் நானும் போயிருந்தால்'...? நினைவின் பயங்கரத்தில் உள்ளமும் உடலும் ஒருங்கே நடுங்கின. உணர்வுகள் ஒடுங்கின.

'முருகா! என்னை மன்னித்து விடு! உனது கருணை தெரியாது தூசித்த பாவியை மன்னித்து விடு முருகா...' நீர்வழிய நெஞ்சம் விம்ம அவன் அழுதவாறே தொழுதுகொண்டிருந்தான். அவனது இதழ்கள் முணுமுணுத்தன.

'...கருணையே உருவான இறைவனின் செயல்கள் மனிதனால் உணர முடியாதவை. அவைமனிதனின் அறிவுக்கு அப்பாற்பட்டவை...'

(யாவும் கற்பனை)

**கடவுளைத் தரிசிக்கப்புறப்பட்ட பக்தனின் பயணம் தடைப்படுகின்றது!**

**"உன்னைக் காணப்புறப்பட்ட எனக்குக் கடைசி நேரத்தில் இப்படி ஒரு தடையா?" கருணையே உருவான இறைவனின் செயல்கள் மனிதனால் உணரமுடியாதவை. அவை மனிதனின் அறிவுக்கு அப்பாற்பட்டவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பந்தம் இதுதானாம்!

## சிங்களத் தினசரியின் கூற்று

**“வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாகம் தமிழில் நடத்தப்படும். தமிழன் இலங்கையில் எந்தப் பகுதியில் வசித்தாலும் அரசாங்கத்துடன் தமிழில் கடிதத் தொடர்பு கொள்ளும் உரிமையை வழங்க கொள்கை ரீதியாகத் திரு. டட்லி சேனநாயக்கா இணங்கினார்” என்று டட்லி சேனநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருப்பதாக ‘ஜனதின’ (16-10-65) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.**

இச்செய்தி முழுவதும் கீழே தரப்படுகிறது:—

‘ஏழு கட்சிகளின் கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வந்த நாள் முதல் இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டு வரும் டட்லி சேனநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தத்தை ‘ஜனதின’ இன்று அம்பலப்படுத்துகிறது.

கடந்த மார்ச் மாதத்தில் திருவாளர்கள் டட்லி சேனநாயக்கா—செல்வநாயகம் ஆகியோரின் ஏழு கட்சிக் கூட்டரசாங்கம் பதவி ஏற்றது முதல் இலங்கை அரசியல் நிலைமை ஐயப்பாடுள்ள ஒரு மர்மத்தால் மூடப்பட்டிருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழரசுக் கட்சியும் சேர்ந்து செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தந்தான் இதற்குக் காரணம்.

இந்த முக்கியமான ஒப்பந்தத்தை வெளியிட்ட பிரதமர் டட்லி சேனநாயக்கா பிடிவாதமாக மறுத்து வந்துள்ளார்.

எழுத்து மூலம் ஓர் ஒப்பந்தம் உண்டென்பதைக் கூறுவதற்குக் கூட அவர் மறுத்துவந்தார். ஆயினும் பாராளுமன்றத்தில் கட்டாயப்படுத்தப்பட்டதால் அத்தகைய ஓர் ஒப்பந்தம் உண்டென்பதை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் திரு. டட்லி சேனநாயக்காவுக்கு ஏற்பட்டது.

ஐ. தே. கட்சி—தமிழரசுக் கட்சி ஒப்பந்தம் எழுத்து மூலம் உண்டென்று திரு. டட்லி சேனநாயக்கா ஏற்றுக்கொண்ட நாடியிலிருந்து, அந்த ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள விஷயங்களைக் கண்டு பிடிப்பதற்காக ‘ஜனதின’ எல்லாவித முயற்சிகளையும் செய்து வந்தது.

இந்த இரகசிய ஒப்பந்தத்தைக் கண்டு பிடிப்பதற்காக ‘ஜனதின’ பெரு முயற்சி செய்த காரணம், அது ஒரு முக்கியமான செய்தியாக இருக்குமென்பதற்காக மட்டுமல்ல—ஆனால் ஒரு தேசியப் பிரச்சினை அதில் அடங்கியிருக்கிறதென்பதற்காகவே. உண்மையில், இந்த ஒப்பந்தந்தான் இன்று நாட்டை ஆட்சி செலுத்துகிறது. எனவே அதன் உள்ளடக்கத்தைத் தெரிந்து கொள்ள நாட்டு மக்களுக்கு உரிமை உண்டு.

தனது பெரு முயற்சியில் வெற்றி பெற்றுவிட்டதென்பதை ‘ஜனதின’ இன்று தேசமக்களுக்குப் பெருமிதத்துடன் அறிவிப்பதுடன், யு. என். பி—தமிழரசு இரகசிய ஒப்பந்தத்தில் அடங்கியுள்ள விஷயங்களையும் ‘ஜனதின’ இன்று பிரசுரிக்கிறது.

1965 மார்ச் 24-ந் திகதி இரவு இந்த இரகசிய ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. திருவாளர்கள் டட்லி சேனநாயக்காவும், எஸ். ஜே. வி. செல்வநாயகமும் அதில் கையெழுத்திட்டுள்ளனர்.

ஒப்பந்தம் கீழ்க்காணும் விஷயங்களைச் செயற்படுத்தும்:—

### 1. நிர்வாக மொழி

(ஏ) வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிர்வாகம் தமிழ் மொழியில் நடத்தப்படும்.

(பி) தமிழர் இலங்கையில் எந்தப் பிரதேசத்தில் வசித்தாலும் அரசாங்கத்துடன் தமிழில் கடிதப் போக்குவரத்து செய்யும் உரிமையை வழங்குவதற்கு திரு. டட்லி சேனநாயக்கா கொள்கை ரீதியாக இணங்குகிறார்.

### 2 நீதிமன்ற மொழி.

(ஏ) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதி மன்ற நிர்வாகம் தமிழில் நடத்தக்கூடியதாகவும்;

(பி) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றக் குறிப்புகள் தமிழில் வைத்திருக்கக் கூடியதாகவும் நீதி மன்ற மொழிச் சட்டம் திருத்தி அமைக்கப்படும்.

### 3. மாவட்ட சபை

மாவட்ட சபைகள் அமைப்பதற்காக கூடிய விரைவில் சட்டம் இயற்றப்படும்.

### 4. காணி விநியோகம்

கீழ்க்காணும் விடயங்கள் அடங்கக் கூடியதாக காணி விநியோகச் சட்டம் திருத்தி அமைக்கப்படும்.

(ஏ) வடக்கு, மாகாணங்களில் அரசாங்கக் காணிகளை விநியோகம் செய்வதில், அந்தந்த இடங்களில் வசிக்கும் விவசாயிகளுக்கு முதலிடம் அளித்தல்.

(பி) அடுத்தபடியாக வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு விநியோகம் செய்தல்.

(சி) அதற்குப் பிறகு வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள அரசாங்கக் காணிகளை வேறு பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வழங்குதல்.

டட்லி சேனநாயக்கா

எஸ். ஜே. வி. செல்வநாயகம்”

## கலைப்பதா? வேண்டாமா?

‘அரசாங்கத்தைக் கலைத்துவிடுவதா, வேண்டாமா என்ற பிரச்சினையின் மீது திரு. ஜே. ஆர். ஜயவர்தனாவின் கோஷ்டியும் பிரதமமந்திரியின் சகோதரர் திரு. ருடட் சேனநாயக்காவின் கோஷ்டியும் நேற்று ‘வூட்லண்ட்ஸ்’ இல்லத்தில் பிரதமர் முன்னிலையில் வாய்ச்சண்டையில் ஈடுபட்டனர்.

## சிங்கள இதழ்களில்...

‘அரசாங்கத்தைக் கலைத்துவிடும் பிரச்சினையில் திரு. ஜயவர்தனாவும் திரு. ருபர்ட் சேனநாயக்காவும் மோதிக்கொண்டது இது இரண்டாவது முறையாகும்.

தமிழரசாரினதும், தோட்டத் தமிழர்களினதும் அநியாயக் கோரிக்கைகள் பல இப்பொழுதே நிறைவேற்றப்பட்டிருப்பதாலும், சிங்கள பௌத்தர்கள் வெறுப்படையக்கூடியதாக அரசாங்கம் நடந்துகொள்வதாலும் யு. என். பி. மீண்டும் மக்கள் முன்னிலையில் செல்லமுடியாத நிலைமை உருவாகிக்கொண்டிருப்பதால் உடனே அரசாங்கத்தைக் கலைத்து விடவேண்டுமென திரு. ருபர்ட் சேனநாயக்கா கூறியிருக்கிறார்.

எவ்வளவு கஷ்டங்கள் ஏற்பட்டாலும் இறுதிவரை அரசாங்கத்தை நடத்திச்செல்ல வேண்டுமென ஜயவர்தனா கோஷ்டியினர் கூறியுள்ளனர்.’

—எத்த (12-11-65)

### தமிழரும் சிங்களமும்

‘அரசாங்க லிகிதர் சேவா சங்கத்தின் உறுப்பினரும், அனுராதபுரத்தில் தேசிய வீடமைப்பு அலுவலகத்தில் கடமையாற்றுபவருமான கந்தையா என்பவர் சிங்களத்தில் பணிபுரிந்ததற்காக, வீடமைப்புப் பகுதி உதவிக் கமிஷனர் திரு. எர்ல் பர்னாந்து என்னும் சிங்களக் கத்தோலிக்கர் ஒரு வாரச் சம்பளம் அபராதம் விதித்துள்ளார் என அறியப்படுகிறது. இது பற்றி அ. லி. சே. சங்கம் அரசாங்கத்துக்குப் புகார் செய்துள்ளது.

—சிங்கலே (14-11-65)

## ‘நாம் தமிழர் அபாயம்’ பிரதமரிடம் தூது

‘மலைநாட்டில் தோட்டப் பகுதியில் ‘நாம் தமிழர்’ இயக்கம் எங்களை நாசமாக்கிறது. இந்த அபாயத்திலிருந்து எங்களைப் பாதுகாப்பது உங்கள் பொறுப்பு’— என்று மலை நாட்டைச் சேர்ந்த யு. என். பி. ஆதரவாளர்கள் கோஷ்டி ஒன்று பிரதம மந்திரியிடம் வந்து முறையிட்டதாக ‘ஜனசத்திய’ (14-11-65) ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

அச்செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:—

வர்த்தகம், கடைசாப்பு, தோட்டம், வீடு வாசல் ஆகியவற்றிலிருந்து சிங்களவர்களை வெளியே தள்ளிவிட்டு, ‘நாம் தமிழர்’ அவற்றைக் கைப்பற்றிக் கொள்கின்றனர். மலைநாட்டுச் சிங்களவர்கள் போக இடமின்றி அனாதைகளாகின்றனர் என்று அக்கோஷ்டியினர் பிரதமரிடம் கூறினர்.

யு. என். பி—தமிழரசு அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் மலைநாட்டில் நாம் தமிழர்களின் பொருளாதார ஆக்கிரமிப்பு அதிகரித்துள்ளது. இதற்கு உடனே பரிகாரம் செய்யாவிட்டால், இந்நாட்டில் பிறந்த சிங்கள மக்கள் இந்த நாட்டிலேயே அடிமைகளாகும் பயங்கர நிலைமையைக் குறித்து மலைநாட்டு ஸ்தாபனங்கள் பெரிதும் கலக்கமடைந்துள்ளன.

அவர்கள் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக் கூறிய விஷயங்களைப் பிரதமர் ஏற்றுக் கொண்டாரெனினும், தனது அரசாங்கத்தின் முக்கிய ஆதரவாளர்களான தமிழரசுக் கட்சி, தமிழ்க் காங்கிரஸ், தொண்டமான்-அண்ணாமலை கோஷ்டி ஆகியோரால் நடத்தப்படும் ‘நாம் தமிழர்’ இயக்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் அவர்களின் ஆதரவு இல்லாது போய் அரசாங்கம் வீழ்ச்சியடையும் என்றும் அவர்களுக்கெதிராக இப்பொழுது தீவிர நடவடிக்கை எடுக்க முடியாதென்றும் சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

கொட்டகலை நகரில் சிங்களவர்களுக்குச் சொந்தமாயிருந்த 30 கடைகளில் இன்று அவர்களின் கையில் எஞ்சியிருப்பது 4 கடைகள் மட்டுமே என்றும் கம்பளையில் 4 கடைகள் மட்டுமே சிங்களவர்களுக்குச் சொந்தமாயிருக்கிறதென்றும் ‘உடரட்ட மண்டலய’ என்னும் ஸ்தாபனத்தின் தூதுகோஷ்டியினர் பிரதமருக்குச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

மாவட்டசபைகள் அமைப்பதால் பயங்கர நிலைமை ஏற்படுமென்று அவர்கள் பிரதமரிடம் கூறியுள்ளனர்.

திருவாளர்கள் வோல்ட்டர் தல்கொட்பிட்டிய, மாநகரசபை உறுப்பினர் திலக் ரத்னாயக்கா, லங்காதிலக்க விகாரயின் பஸ்நாயக்க நிலமே, வழக்கறிஞர் எல். என். பி. ரத்னாயக்கா, மெத்தவெல, டாக்டர் பெத்தியாகொட, முன்னாள் ஸ்தல ஸ்தாபன மந்திரி எம். பி. மெதிவக்க ஆகியோர் இத்தூது கோஷ்டியில் அங்கம் வகித்தனர் என்று அறியப்படுகிறது.’

### ‘கட்சிமாற இனி ஆளில்லை’

‘சுதந்திரக் கட்சி எம். பிகள் சிலரை அரசாங்கத்தில் சேர்த்துக் கொண்டு, தமிழரசு வாதிகளை வெளியேற்றப் போவதாக அடிபடும் வதந்தியைப்பற்றி ‘ஜனதின’ எதிர்க்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் வினவிய போது, ‘யு. என். பி. கட்சியினரின் திறமையின்மையையும், அவர்களின்பால் மக்கள் மத்தியில் வளர்ந்து வரும் அதிருப்தியையும் மறைப்பதற்காக அரசாங்க அனுதாபிகள் சிலர் இந்தப் பித்தலாட்டப் பிரசாரத்தில் இறங்கியுள்ளனரென்றும், தான் சந்தேகித்து வந்த திஸ்ஸமகாராமப் பிரதிநிதி திரு. எதிரிசூரிய அரசாங்கத் தரப்புக்குச் சென்றுவிட்டதால், கட்சி மாறுவதற்கு எதிர்க் கட்சிகளில் இனி யாரும் கிடையாதென்றும் அவர் கூறினார்.’

—ஜனதின (16-11-65)

### தமிழில் அரசாங்க அலுவல்கள்?

‘உள்ளூர் ஆட்சி மன்ற அமைச்சர் திரு. திருச்செல்வத்தின் வேண்டுகோளின்படி அவரது அமைச்சுக்கு ஒரு தமிழ்மொழி பெயர்ப்பாளரை நியமிக்க திறைசேரி அனுமதித்துள்ளது.

ஏழு கட்சிக் கூட்டரசாங்கத்தின் உத்தரவின் மீது ஏனைய அரசாங்க இலாகாக்களிலும் தமிழில் அலுவல்களை நடத்துவதற்காக தமிழ் மொழி பெயர்ப்பாளர்களை நியமிக்க அவசரமாக நடவடிக்கை எடுக்கப் படுவதாக அறியப்படுகிறது.

—எத்த (12-11-65)


**ஜீ. சீ. ஈ. (சா. த.)**

பரீட்சையில் தேற
உதவி புரியும்.
பட்டதாரி ஆசிரியர்களால்
தயாரிக்கப்பட்ட வினாவிடை
பயிற்சிக் கோவைகள்.

- தமிழ் பாஷை 5-00
- எண் கணிதம் 5-00
- குடியியல் 5-00
- உடலலவியல் 5-00
- சரித்திரம் 5-00
- இஸ்லாம் 5-00
- பொது அறிவும் விவேகமும் 5-00

101 கட்டுரைகள் ரூ. 7-50

சர்வகலா சாலை
போதனை கழகம்
(U T I)
540, மருதானை வீதி,
த. பெ. 1079,
கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமணி க. இராமச்சந்திரனர்

## சமரச நன்னெறி வளர்க்கும் சர்வதேசப் புகழ் கொண்டார்

இலங்கையின் பல பகுதிகளிலிருந்து அடியார்கள், அன்பர்கள், பல பெரியோர்கள் வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவில் சந்நிதானத்திற்கூடி, சென்ற செவ்வாய்க்கிழமை 9-11-65ல் திருவருட் சூழலில் 'ஆத்மஜோதி' 'சமயமஞ்சரி' என்னும் ஆத்மீகப் பத்திரிகாசிரியர் ஸ்ரீ க. இராமச்சந்திரனர், அவர்களுடைய எழுபதாவது ஆண்டு ஜயந்தியாம் அமிருத மஹோற்சவ வைபவத்தில் பிரார்த்தனை மூலமாகவே அமைதியாகவாழ்த்தினர்கள். அன்று குழுமியிருந்த பலசமயத்தவர்களுடைய அருட்பண்பு நிறைந்த முகங்களைக் கண்டதும் ஆனந்தமே பொங்கியது; இப்பேரருட்திருவாளருடைய சமரசநெறியின் சிறப்பையும், விஸ்வபக்தியையும் அப்புனித வைபவத்தில் உணரலாயிற்று.

திரு. வி. எப். குணரத்ன (இளைப்பாறிய அரசாங்க தர்மகர்த்தா) அமிருத மஹோற்சவ ஞாபகார்த்த வெளியீடாகிய 'மெய்யடியார் அருளுறவில்' (In the Company of Saints) என்னும் ஆங்கில நூலை திரு. இராமச்சந்திரனருக்கு வழங்கி அவருடைய சமரஸ சமய உலக சமாதான சேவையைப் பாராட்டி வாழ்த்தினர்கள். பிரபல பௌத்த சமரஸ அன்பரும் இராமக்கிருஷ்ண மடத்து நிர்வாகக் குழுவின் பலவருட அங்கத்தவருமாகிய முகாந்திரம் பி. வத்வெல்ல அவர்களும் பேசினர்கள்.

### உதாரண புருடர்

தமிழருடைய கலாச்சாரப்பண்புக்கும், சைவங்கண்ட சமரஸ நன்னெறிக்கும் யாம் பெருமைப்படும் உதாரண புருஷராய் திரு. இராமச்சந்திரனர் எமது மத்தியில் இருக்கக் காணும் பொழுது தமிழ்இனத்துக்கே பெருமை தருபவராகக் காண்கின்ேறம்.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று புறநானூறு வரையறுத்த தமிழனுடைய உன்னத அன்பு, அருள் முதலியவற்றைப் பிரதிபலிக்கும் இந்த இலட்சிய வாசகம் எமது பெரியாருக்குச் சாலப்பொருந்தும். அவர் உலகிற் சென்ற இடமெல்லாம் தனது சொந்த ஊராகப் பழகி, அங்குள்ள பல அறிஞர், மேதைகளையும், பண்புடைப் பெரியோர்களையும் தனது அன்புகனிந்த ஆத்மநேய அன்பர்களாகக் கொண்டுள்ளார்கள். இத்தகைய அன்பு அபிமானத்தினல் இவருக்கு ஞாபகார்த்தமாக வழங்கப்பட்ட நூலை அங்கே ஜேர்மன், சுவீடிஷ் பாஷைகளிலும் மொழிபெயர்ப்பதற்கு ஏற்பாடு செய்துள்ளார்கள்; அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இந்நூல் அன்பர்கள் முயற்சியில் அச்சிட்டு வழங்கப்படும். இத்தகைய இனியநூல் தமிழில் மொழிபெயர்க்கப்படுவது பேச்சளவிலிருக்கின்றது.

### தத்துவ கலாநிதி

'சமய மஞ்சரி' என்னும் ஆங்கில சஞ்சிகை மூலம் சர்வ சமயங்களின் ஒற்றுமையை விளக்கி அதனடிப்படையில் கருணை ஆன்மநேயத்தை வளர்த்துப் பேதங்களையும் பூசல்களையும்ஒழித்து உலகசமாதானம் நிலவ நிலைபெறுன உலகத்தொண்டை ஆற்றியுள்ளார் என்று உலகெங்கணும் பூசனைக்குரிய மெய்ஞ்ஞானிகள், தத்துவ ஞானிகள், சர்வகலாசாலைப் பேராசிரியர்கள், அறிஞர்கள், ஆத்மீக அன்பர்கள், இராஜ குடும்பத்தினர் பலர் ஆரா அன்புடன் இன்றும் போற்றுகிறார்கள். இதன் விளைவாக, திருவருட்சித்தம் போலும், மேலைத்தேச அன்பர்கள் முயற்சியால் கனடாவில் உள்ள ஒரு சர்வதேச பிரபல கலாச்சார தாபனம் ('International Academy of British Columbia-founded in 1880) எமது தமிழ் மேதைக்கு 'தத்துவ கலாநிதி'ப் பட்டத்தை 1956ம் ஆண்டு வழங்கிற்று.

இந்தியாவில் எப்படி யாத்திரை செய்தார்களோ, அதே ரீதியில் உலக நாடுகளுக்குச் சென்ற பொழுதும், ஒரு யாத்திரியாகவே சென்று அருட்பதிகளையும் அருளாளர்களையும் தரிசித்தனர். இவருடைய பணிவும், பண்பும், பக்தியும் உலகெங்கணும் பல பெரியோர்களுடைய உள்ளங்களைக் கவர்ந்தது. அடக்கமாக இருந்து பணியாற்றிய பெரியார், அவருக்கே தெரியாது, திருவருளால் அம்பலத்துக்கே கொணரப்பட்டு உலகெங்கணும் அறிமுகமானர். இவருடைய பெருமையும் உலகத்திலே பல பகுதிகளுக்குச் செல்லும் 'சமயமஞ்சரி'யின் மூலமாற்றும் சேவையின் பெருமையும் பிரகாசிக்கத் தொடங்கியது.

இன்று ஸ்ரீ. க. இராமச்சந்திரன் உலக சமாதானத்துக்குப் பெரும் பணியாற்றும் உலக மேதையாகக் கணிக்கப்படுகின்றனர்.

### அயல் நாடுகளில்...

மேலைத் தேசத்தவர்கள், ஒருபோதும் ஒருவரை உணர்ச்சி வசப்பட்டோ, இன்றேல் மேலெழுந்தவாரியாகவோ கணிப்பதில்லை; ஒருவருடைய சொல்லும் செயலும், சிந்தனையும் எத்துணை உலகிற்பரந்துசெறிந்து பயனளிக்கின்றது என்பதை உணர்ந்தே ஒருவரை நுணிகிக் கணிப்பார்கள். இவ்வண்ணமே, பல உலகப் பிரசித்திபெற்ற மேலைத்தேசப் பெரியார்கள் ஸ்ரீ இராமச்சந்திரனரைக் கணித்துப் போற்றுகின்றனர்.

1955ம் ஆண்டு ஜப்பானில் நடந்த உலக சம்மேளனத்தில் (International Congress for the History of Religious)'தமிழருடைய சமயங்கள்—பண்டைக் காலமும் தற்காலமும்' என்ற விஷயம் பற்றிப் பேருரை நிகழ்த்தினர்கள். இந்த காங்கிரஸ் ஜெர்மனியில் 1960ம்ஆண்டு கூடிய பொழுது அங்கு'தாயுமானவரை'ப் பற்றிப் பேசினர்கள். இவ்வுரை ஜெர்மன் பாஷையிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 1963ம் ஆண்டு உலக அரசியல் அமைப்பு பற்றி பரிசீலனை செய்யும் உலக சமாதானத் தொண்டர்களுடைய மகாநாட்டிற்கு அமெரிக்காவுக்கு இவர் அழைக்கப்பட்டது ஒருமாபெரும் கௌரவமாகும். இங்கே 'ஆன்மநேய ஒருமைப்பாடு' என்னும் பொருள்பற்றிப் பேருரை வழங்கினர்கள்.

தமிழையும் உலக ... களில் அறியவைத்த ... சைவத்தையும் பெருமக்கள் சிலரின் வரிசையில் வைத்து ஸ்ரீ இராமச்சந்திரனரும் போற்றப்பட வேண்டியவாராய்த் திகழுகின்றார்கள். சமய சமரஸம் பேசும் பொழுது, சைவசமயத்தின் அடிப்படைகளைத் திருத்தவோ, அல்லது மறுக்கவோ துணியும் அருவருக்கத்தக்க அசட்டுப் போக்கு அறவும் இல்லாதவர். சிவசின்னங்களையும், சிவனடியார்களையும், ஆகமநெறியையும் சிரமேற்தாங்கிப் போற்றிச் சிவமெனப் பேணும் திருநெறிச் செல்வர். அடியார்கள் திருவடியே இவருடைய உயிர்நாடி.



எழுதியவர்:

**ஸ்ரீ கிருஷ்ணனந்த முனிவர்**

**கதிர்காமம்**

### பெரியோரின் ஆசிமொழிகள்

திரு. இராமச்சந்திரனருடைய 'சஷ்டியப்தபூர்த்தி விழா' 1955ம் ஆண்டுநடைபெற்றது. அவ்வமயம் மெய்ஞ்ஞானிகள் பலர்வழங்கிய ஆசிமொழிகளை இங்கு கூறினுற்தான் இப்பெரியார் அருட்கடாட்சம் பெற்ற ஒரு பெரும் தொண்டர்—உலக மேதையென்பதன் காரணம் புலனகும்:-

சிருங்கேரி ஸ்ரீ சங்கராச்சாரியார் பீடத்துத் தனிப்பெருமை வாய்ந்த மெய்ஞ்ஞானி ஸ்ரீ சந்திரசேகர பாரதிகள் திருவாய் மலர்ந்த ஆசி:-

'ஸ்ரீ இராமச்சந்திரருடைய சஷ்டிபூர்த்தியைக் கொண்டாடுவதால் மக்கள் தம்மைத்தாமே கௌரவப்படுத்தியவர்களாவர். அவர் மனித குலத்துக்குப் பெரும் பணி ஆற்றுவதற்குச் சுகபலத்துடன் வாழவேண்டுமென இறைவனை எல்லோரும் வேண்டுதல் செய்வது கடமையாகும்'—(இவருடைய பிற்கால உலக சேவையை அன்றே தீர்க்க தரிசனமாய் இம்மகான் அறிவுறுத்திய அற்புதத்தைக் காண்கின்ேறம்.)

உலகப் பிரசித்தி பெற்ற மகான்—தென்னிந்தியா ஆனந்தாஸ்ரமத் திருந்தவர்—ஸ்ரீ சுவாமி இராமதாஸ் அருளியது:

இலங்கையிலுள்ள ஆத்மீக அன்பர்களுக்கு நீங்கள் ஒரு கலங்கரை விளக்கம் போற் துலங்குகின்றீர்கள். ... காலம் நிலைத்து நிறைவுறுவதற்கு இறைவன் இன்னும் சுகபலத்தை அருள வேண்டும்.

உலகம்புகழும் ஸ்ரீ சிவானந்த சரஸ்வதி, ரிஷிகேசம், ஹிமாலயம்:—

இவர் மாகான்க்ள், மெய்ஞ்ஞானிகள வாக்குகளை ஒவ்வொரு வீட்டுக்கும் பரப்பியுள்ளார். அவருடைய வாழ்க்கையே கோடிக்கணக்கான மக்களுக்கு உதாரணமாகும், அவருடைய இனிய எளிய சுபாவம் போற்றுதற்குரியது.

பாரதத்தின் தனிப்பெரும் யோகியென அகிலமறிந்த யோகி ஸ்ரீ சுந்தானந்த பாரதியார்:—

'எம்மத உண்மையையும்
... சம்மதமாக,
நம்மதம் பரப்ப நாவலர்
போன்று,
தொண்டு செய்புலவன்;
தோழமைக் கினியான்;பண்டும்,
புதுமையும் பழுதறத் தேர்ந்
தோன்;
இலங்கைமணி யெனும்
இராமச்சந்திரன்
கலங்கரை விளக்கெனத்
துலங்குக மாதோ'

வட இந்தியப் பிரபல மெய்ஞ்ஞானி, சாது டி. எல் வஸ்வானி அவர்கள் அண்மையில் அருளியதாவது:—

'பேரன்புக்கினிய எனது இராமச்சந்திரரை இன்று கண்டேன், சந்தோஷமே. இறைவனுடைய அருட்கடாட்சம் இத்தெய்வதூதர் மீது என்றும் இருக்க வேண்டும்'

உலகின் பல பகுதிகளுக்கு விஜயம் செய்த வித்யாலங்கார சர்வகலாசாலைப் பேராசிரியர் வண. மிரிஸ்ஸ குணசிறி மகாதேரோ இவருடைய ஞாபகார்த்த நூலின் முன்னுரையில் அருளியது:—

'திரு. இராமச்சந்திரன் அவர்கள் சமய உண்மையை உய்த்துணர்ந்து மனிதகுல சேவைக்கே தனது வாழ்வை அர்ப்பணித்துள்ளார்கள். அவருடைய பேச்சும், எழுத்தும் உலகெங்கணும் புகழ் பெற்று விட்டன. உலகில் சென்ற விடமெல்லாம் ஒரு மேதையென்று மக்கள் மதிக்க வைத்துவிட்டார். இவர் ஒரு மகான், அறிஞர், எழுத்தாளர், சமூகப்பணியாளருமாவர்.'

---

## ஆங்கிலப் பெயருடன் தமிழ்ப் படங்கள்

ஆங்கிலப் பெயர்களைக் கொண்ட இருபடங்கள் தமிழில் தயாராகின்றன. 'லவ் இன் பெங்களூர்' (பெங்களூரில் காதல்) என்ற படத்தை தாரணி பிக்சர்சார் கோல்டனில் தயாரித்து வருகின்றனர். இதில் கல்யாண்குமார், பாரதி, ரேவதி, சூர்யகுமார் முதலியோர் நடிக்கின்றனர். இதன் கதை, வசனத்தை ரேவதி கல்யாண்குமார் எழுதியிருக்கிறர்.

பகலவன் பிச்சர்சார் 'மட்ருஸ்மைமனர்' என்ற படத்தை அருணசலம் ஸ்டுடியோவில் தயாரித்து வருகின்றனர். இப்படத்தில் புதுமுகங்கள் பல நடிக்கின்றன. டி. ஆர். ரகுநாத் டைரக்ஷனில் இப்படம் தயாராகிறது. புதிய கவிஞரான புதுவைநாரா பாடல்கள் எழுத எம். எஸ். ஞானமணி இசை அமைத்துள்ளார் ஜானகி பாடும் 'இல்லற வாழ்வு ஒன்றே நல்லறமாகும் இன்றே' என்ற பாடல் ஒலிப்பதிவானது.

---

## எமது விமர்சனம்

### படித்த மனைவி

ஒரு தொழிற்சாலையின் நிர்வாகியாக இருபத்தைந்து வருடங்களுக்கு மேலாக உழைத்து நல்ல மனப் படைத்தவரான முதலாளியின் நண்பராக வாழ்கிறர். ஒருவர் முதலாளியின் மகள் நளினிக்கு நிர்வாகியின் மகன் சங்கரைக் கலியாணம் செய்து வைக்க இருகுடும்பத்தாரும் எண்ணியிருக்கும் போது, பட்டம் பெறுவதற்காகச் சென்னை சென்ற சங்கர், அனதையாகிவிட்ட கௌரியை மணம் முடித்து, அவளுடன் திரும்புகிறன். ஏமாற்றமும் அதனல் ஏற்பட்ட கோபமும் சங்கரின் தந்தையின் சுபாவத்தையே மாற்றிவிடுகிறது.

மகனையும் மருமகளையும் வீட்டை விட்டோட்டுகிறர். முதலாளி மனம் வருந்தாமலிருந்தும் தந்தையின் மனம் மாறிவிட்டதை உணர்ந்த சங்கர் பெரிதும் துயரடைகிறன். தந்தையின் கருத்தை மாற்றி அமைக்க அவனும் அவன் மனைவி கௌரியும் எடுத்துக் கொள்ளும் முயற்சிகள் அத்தனையும் எதிர்மாறன பலனைக் கொடுக்கின்றன இதற்கிடையில் கணக்கன் புண்ணியகோடியின் பேராசை விபரீதமான சங்கடங்களை ஏற்படுத்துகின்றன.

படித்துப்பட்டம் பெற்றவளான கௌரி தன்வரவால் ஏற்பட்ட பிணக்கை தானே தீர்த்துவைக்க பெருமுயற்சி எடுத்து இறுதியில் வெற்றி காண்கிறள்.

சங்கரின் தந்தையாக ரங்கராவ் மிகவும் சிறப்பாக நடித்திருக்கிறர். சங்கராக ராஜேந்திரனும், கௌரியாக விஜயகுமாரியும் நடிக்கின்றனர். சங்கரின் தயாராக ஜி. வரலட்சுமி வருகிறர். நகைச்சுவைப் பொறுப்பினை புண்ணிய கோடியாக வரும் ராதாவும் அவர் மகன் வாசுவும் ராமராவும் ஏற்றுள்ளனர். நல்ல கருத்துள்ள நகைச்சுவை வசனங்கள் இடம் பெற்றுள்ளன.

ஒலிப்பதிவு, ஒளிப்பதிவு முதலிய அம்சங்கள் திருப்திகரமாக அமையவில்லை. நல்ல கதையை டைரக்ஷனின் திறமைக் குறைவுசற்று பின்னப்படுத்தியிருக்கிறது.

சிறு குழந்தைகள் சேர்ந்து நடிக்கும் மனுநீதி கண்ட சோழன் அபிநய நாடகம் மிகவும் சிறப்பாக விருக்கிறது. சொற்பநேரமே காண்பிக்கப்பட்டாலும், குழந்தைகளின் நடிப்பு உள்ளத்தைத் தொடுகிறது.

—நாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்க மூடி - 'பிளாட்டினம்' பேனுக்கள் - பரிசு

## எம். ஜி. ஆருக்கு நேரவிருந்த விபத்து



கடந்த 28ம் திகதிவியாழக்கிழமை நண்பகல் எம். ஜி. ராமச்சந்திரன் சரோஜாதேவி முதலானோர் பிரயாணம் செய்த மோட்டார் வண்டி பயங்கர விபத்துக்குள்ளாக விருந்தது. அதிர்ஷ்ட வசமாக எதுவித அசம்பாவிதமும் ஏற்படவில்லை.

எந்தலையிலுள்ள விஜயாஸ்டூடியோவில் சில சிங்களத்திரைப் படங்களைப் பார்த்துவிட்டு சிலோன் தியேட்டர்ஸ் அதிபர் திரு. செல்லமுத்து அவர்களுடைய மோட்டாரில் குழுவினர் திரும்பிக்கொண்டிருந்த வேலையில், பேஸ்லைன் சாலையிலுள்ள ரயில்வேக் கடவையின் ஒரு பகுதி 'கேட்' மட்டும் மூடிக்கொண்டது. வலது புறமிருந்த 'கேட்' சிறிதும் மூடப்படாமலிருந்தது. அப்புறமாக வண்டிகள் போக்கு வரத்து நடந்துகொண்டிருந்தது. மூடிய 'கேட்'டின் முன் எம். ஜி. ஆர். சரோஜாதேவி சென்ற வண்டி நின்றுவிட்டமையினால் அயலிலுள்ள மக்கள் வண்டியை வளைத்துக்கொண்டனர்.

நிலமையைச் சமாளிக்க ஏனைய வண்டிகள் சென்றதுபோல் இவ்வண்டியையும் வலப்புறத்தில் எடுத்து தண்டவாளத்தைக் கடக்கும்போது வலது பக்கத்து 'கேட்'டும் மூடிக்கொண்டது. மருதானையை நோக்கி ரயில் வண்டிகள் செல்லும் தண்டவாளத்தின் மீது மோட்டார் நின்றுவிட்டது.

மின்சாரத்தினால் மேற்படி 'கேட்'டுகள் இயக்கப்படுவதனால், எதுவுமே செய்ய முடியவில்லை. சில வினாடிகளில் புகைவண்டி வேகமாக வந்துகொண்டிருந்தது. ஆபத்தை உணராமல் மக்களனைவரும் மக்கள் திலகத்தையும் சரோஜாதேவியையும் சூழ்ந்துகொண்டிருந்தனர். புகைவண்டி மிகவேகமாகச்சென்றது. ஆனால் விபத்து எதுவும் நேரவேயில்லை.

விபத்து நேராததற்கான காரணம் என்ன தெரியுமா?

அடுத்த வாரம் இதே பக்கத்தைப் பாருங்கள்.

## கல்வியே கருந்தனம்

மக்கள் திலகம் எம். ஜி. ராமச்சந்திரன், சரோஜாதேவி ஆகியோர் இலங்கை வந்து சென்றதன் ஞாபகார்த்தமாக இப்போட்டி நடைபெறுகிறது. சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனம் திரையிட்டுள்ள 'எங்க வீட்டுப் பிள்ளை' படத்தை அடிப்படையாகக் கொண்டே இப்போட்டிக்கான வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இப்போட்டிக்கு எதுவிதமான கட்டணமும் கிடையாது. இது வெறும் விநோதப் போட்டியே.

சுதந்திரன் நிறுவனத்திலும், சினிமாஸ் லிமிட்டெட் நிறுவனத்திலும் கடமை புரியும் ஊழியர்களும் அவர்களுடைய நேரடியான உறவினர்களும் இப்போட்டியில் கண்டிப்பாகக் கலந்து கொள்ள முடியாது.

சுதந்திரன் வாசகர்களுக்கான இப் பிரத்தியேகப் போட்டியில் பங்கு பற்றி வெற்றிபெறும் அதிர்ஷ்டசாலிகளுக்கு 'சினிமாஸ் லிமிட்டெட்' நிறுவனத்தினரே பரிசுகளை அளிகக ஒப்புக்கொண்டுள்ளனர்.

### விதிகள்:

1. சுதந்திரனில் விசேடமாகக் கொடுக்கப்பட்டிருக்கும் 'கூப்பன்' களிலேதான் விடைகள் நிரப்பி அனுப்பப்பட வேண்டும்.
2. ஒருவர் ஒரே உறையில் எத்தனை விடைகளையும் அனுப்பலாம். உறையின் மேல் போதுமான தபால் முத்திரைகள் ஒட்டப்பட்டிருத்தல் அவசியம்.
3. முழுக்கட்டங்களும் நிரப்பப்படாத விடைத்தாள்கள் நிராகரிக்கப்படும்.
4. போட்டி விடயமாக சுதந்திரனுடனே சினிமாஸ் நிறுவனத்தாரிடமோ எதுவித கடிதத் தொடர்பும் வைத்துக்கொள்ளக் கூடாது.
5. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

### பரிசுகள்:

**1 வது பரிசு—**

**6 மேல் வகுப்பு டிக்கட்டுகள்**

**2 வது பரிசு—**

**4 மேல் வகுப்பு டிக்கட்டுகள்**

**3 வது பரிசு—**

**3 மேல் வகுப்பு டிக்கட்டுகள்**

மற்றும்

**3 ஆறுதல் பரிசுகள் — ஒவ்வொன்றும் 2 மேல் வகுப்பு டிக்கட்டுகள் விதம் வழங்கப்படும்.**

பரிசு பெறும் ஒவ்வொருவருக்கும் 'எங்க வீட்டுப் பிள்ளை' என்ற தங்க எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட தங்க மூடியுடன் கூடிய புதிய பிளாட்டினம் பேனு ஒவ்வொன்றும் விசேடப் பரிசாகக் கொடுக்கப்படும்.

## முடிவுத் தேதி 3-12-65

பரிசு பெற்றோர் விபரமும், சரியான விடைகளும் 12—12—65 சுதந்திரனில் வெளிவரும்.

விடைகள் அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை,
சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு.

உறையின் இடது பக்க மேல் மூலையில் 'எங்க வீட்டுப் பிள்ளை' இலவசப் போட்டி என்று எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

ஆசிரியர்,
கலைப்பூஞ்சோலை.

## சார்லி சப்ளினின் புதிய படம்

ஹோலிவூட்டின் பிரபல்யம் வாய்ந்த நகைச் சுவை நடிகரான சார்லி சப்ளின் தமது 79-வது வயதில் தாமே தயாரிக்கும் படத்தில் நடிக்கப் போகிறார். இப் படத்தின் பெயர் 'த கவுண்டஸ்' (The Countess) என்பதாகும். அவருடன் சொபியா லொறென் நடிக்கிறார்.

சார்லி சப்ளினின் 19 வயது மகனை மைக்கேல், அவரைவிட வயது கூடிய ஒரு ஆங்கில மாதை மணம் முடித்துவிட்டமையினால் சப்ளின் அவரை தமது குடும்பத்திலிருந்து விலக்கி விட்டார். தந்தையையும் தனை [illegible] லொறென் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

...........................இவ்விடத்தில் கத்தரிக்கவும்...........................

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 தி | 2 ல | க | ம் | ■ | 3 | | ■ |
| 4 ரை | | ■ | ■ | 5 | ள | ங் | 6 |
| ப் | ■ | ■ | 7 | து | ரி | | மா |
| 8 ப | | | ரி | ■ | ■ | ■ | |
| ட | ■ | 9 | | 10 ஜா | 11 | 12 | ■ |
| ம் | 13 | ■ | 14 க | | | | 15 ச |
| ■ | 16 | | ■ | ■ | ர் | க | |
| 17 ர | | | ரா | | ■ | | |

முழுப் பெயர்...........................................................

முகவரி...........................................................

...........................................................

நீங்கள் படம் பார்க்க விரும்பும் 'சினிமாஸ்' படங்களைத் திரையிடும்...........

.................................. ..................................
தியேட்டரின் பெயர் ஊர்

..................................
கையொப்பம்

...........................இவ்விடத்தில் கத்தரிக்கவும்...........................

## இடமிருந்து வலம்

1. எம். ஜி. ராமச்சந்திரன் மக்களிடத்தில் பெற்றுள்ள செல்வாக்கினால் "மக்கள்......" என்ற பெயரைப் பெற்றார்.

3. 'எங்க வீட்டுப் பிள்ளை'யில் பாடல் எழுதியிருக்கும் கவிஞர்.

4. குதிரையின் கால் குளம்பு மாறிக் கிடக்கிறது.

5. 'எங்க வீட்டுப் பிள்ளை'யில் எம். ஜி. ஆருக்குக் கிடைத்துள்ள பாகம்.

7. முன்பு திரை வானில் மின்னும் நட்சத்திரமாகத் திகழ்ந்து இன்று ஒளியிழந்து விட்ட நடிகை உருமாறிக் கிடக்கின்றார்.

8. 'எங்க வீட்டுப் பிள்ளையில்' எம். ஜி. ஆரின் சகோதரியாக வருபவர்.

9. எங்க வீட்டுப் பிள்ளை' கதாநாயகி.

14. மாறிக் கிடக்கும் இதன் துணை கொண்டு எம். ஜி. ஆர். நன்மை புரியப் பார்க்கிறார்.

16. இறந்து போய்விடு.........

17. தலை சிறந்த குணசித்திர நடிகர்.

## மேலிருந்து கீழ்

1. வெகு பலருக்கு இதை விட்டால் பொழுது போக்கும் வேறு எதுவுமே கிடையாது.

2. இது ஒரு வகை சங்கீதம்;

3. சிங்கம்.

5. இதோ இருப்பது.

6. நாகேஷ் ஒரு.........

10. ஒரு வகைப் பாத்திரம்.

11. இப் போட்டியில் கலந்து கொள்பவர்களுக்குள்ள சினிமா அறிவைப் பரீட்சிக்க இப்போட்டி மாறிப்போயிருக்கும் இதுவாகிறது.

12. 'எங்க வீட்டுப் பிள்ளை'யில் எம். ஜி. ஆர். உணவினை உண்ணும் விதத்தினால் அவருக்கு இது ஏற்படாமல் போனது ஆச்சரியம்தான்.

13. சினிமா வானில் பலருடைய புகழ் அடிக்கடி மாறிக் கிடக்கும் இப்படியாகி விடுகின்றது.

15. வருங்காலத்தில் இவள் பெரும் புகழீட்டுவாள் என்பதில் ஐயமில்லை.

---

**ஈழத்தரசன்**
எழுதும்
**நட்சத்திர மண்டலத்தில் 4X8 மாதங்கள்**
தொடர் கட்டுரை
இடமின்மையால் இவ்வாரம் இடம்பெறவில்லை
அடுத்த வாரம் தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமையைக் குலைக்காதீர்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

றேன். அவர் அதே நேரத்தில் ஒன்றை மறந்து விட்டார். சிங்கள மக்களுடைய கலையும், கலாசாரமும் வேறு, தமிழ் மக்களுடைய கலையும், கலாசாரமும் வேறு என்று அந்த உண்மையை அவர் மறந்து விட்டார்.

'நாங்கள் இந்த நாட்டிலே அன்று தொடக்கம் இன்று வரையும் சகோதரர்களாக வாழ்ந்து வந்திருக்கின்றோம். அந்நியர்கள் இந்தநாட்டுக்கு வரும்வரை தமிழ் அரசு, சிங்கள அரசு என்று இரண்டு தனித்தனி அரசுகள் இருந்தன. அந்தக் காலத்தில் அரசர்கள் கலை, கலாசாரத்தை வளர்த்து வந்தார்கள் என்ற உண்மையை மறக்க முடியாது. இன்று தேசிய அரசாங்கம், அமைக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் சிங்கள கலை, கலாசாரத்தை வளர்ப்பதற்குஎப்படி முனைந்திருக்கின்றதோ, அதே மாதிரி தமிழ்க் கலை, கலாசாரத்தையும் வளர்க்க வேண்டும் என்பதற்காகவே இத்திருத்த மசோதாவில் பாகுபாடின்றி ஒரு திட்டத்தை வகுத்திருக்கின்றதுஎன்பதை எவருமே மறுக்க முடியாது.

### பாகுபாடு வேண்டாம்

'காலஞ்சென்ற மதிப்புக்குரிய பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள் இயற்றிய சட்டம் தனியாக சிங்கள மக்களுக்குரிய சட்டமே என்ற கருத்துத் தொனிக்கச் சிலர் பேசியருக்கின்றார்கள். அது அழகுமல்ல; முறையுமல்ல. இந்த நாட்டிலிருந்து அந்நிய ஆட்சி அகன்ற பின், இந்த நாட்டு மக்கள் சகோதரர்களாக வாழ வேண்டுமென்று நாம் கருதினுல், இந்த நாட்டில் வதிகின்ற மூன்று இன மக்களும், அதாவது சிங்கள மக்கள், தமிழ் மக்கள், இஸ்லாமிய மக்கள் ஆகிய இந்த மூன்று குழுவினரும், தங்கள் தங்களுடைய கலை, கலாசாரத்தை வளர்க்கக் கட்டாயமாக இந்த சாகித்திய மண்டலத்தில் இடம் கொடுக்கப்பட வேண்டும் என்பதை ஒருவரும் மறுக்க முடியாது.

'இந்த மண்டலத்துக்கு ஐம்பதினுயிரம் ரூபா பணம் பற்றுமல் இருக்குமாகுல் அதற்காகக் கூடிய பணத் தொகையை நாம் கேட்கலாம். அதற்காக வேண்டிய திருத்தங்களை நாம் கோரலாம். அதைவிட்டு விட்டு இந்த நேரத்தில், இந்த நாட்டில் ஒற்றுமை நிலவக்கூடிய தன்மை உண்டாகிவரக் கூடிய நேரத்தில், சிங்களவர், தமிழர் என்ற பாகுபாடு, தமிழ்மொழி, சிங்கள மொழி என்ற பாகுபாடு இந்தச் சபையில் தொனிப்பது வருந்தத்தக்க விடயம்.

### தமிழ்க் கலாசாரம் பூர்வீகமானது

'சிங்கள மக்கள் அவர்கள் மொழியை எவ்வளவு விரும்புகின்றார்களோ அதே போன்று தமிழ் மக்கள் தங்கள் மொழியை விரும்புகின்றார்கள். சிங்கள மக்களின் மொழி எவ்வளவு வளர வேண்டுமோ அதே போன்று தமிழ் மக்களின் மொழியும் வளர வேண்டும். தமிழ்க் கலையும் கலாசாரமும் வளர வேண்டும். இந் நாட்டை அந்நியர் ஆண்ட காலத்தில் தமிழ்க் கலையும் வளரா துவன செய்யப்படாதிருந்ததை நாமறிவோம். அந்நியர் ஆண்ட காலத்தில் இந்நாட்டில் ஆங்கிலத்துக்குத் தான் உண்மையாகவே மதிப்பு இருந்தது. இந்த நாடு சுதந்திரமடைந்த பின் நாம் இந்த நாட்டிலே எங்களுடைய தாய் மொழிக்கும் சுதேசிய உடைக்கும் மதிப்புக் கொடுத்து வந்திருக்கின்றோம். நிலைமை அவ்விதம் இருக்கையில், சிங்கள மக்களுக்கு மட்டும் இந்தச் சாகித்திய மண்டலத்தில் இடங் கொடுக்க வேண்டும்; தமிழ் மக்களின் கலை, கலாசாரம் பெருக இதில் இடம் கொடுக்கக் கூடாது என்ற தொனியில் பேசுவது மிகவும் வருந்தத்தக்க விடயம்.

'இந்த நாட்டில் வாழும் மக்களாகிய சிங்கள மக்களின் மொழி 2500 வருடங்கள் பூர்வீகமானதனுல் தமிழ் மொழி அதைவிடப் பூர்வீகமானது. அவ்வித விசயங்களில் நாம் கருத்துக் கொண்டு, பிரித்துக்கணித்து, எங்கள் மொழியை மட்டும் வளர்ப்போம். மற்ற மொழியைக் கவனிக்காமல் இருப்போம் என்று சொல்லக் கூடாது. எவ்விதம் சிங்கள மொழியை வளர்க்க வேண்டுமோ அதே மாதிரி தமிழ் மொழியையும் வளர்க்க வேண்டியது தேசிய அரசாங்கத்தின் கடமை என்று கவனித்துத்தான் இந்த அரசாங்கம் இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கின்றது.

### தேசிய அரசு கடமையைச் செய்யும்

'நாம் இந்த நாட்டில் சகோதரர்களாக வாழவேண்டுமென்றுல், நாம் இந்த நாட்டில் ஒற்றுமையுடன் வாழவேண்டுமென்றுல், சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒருமித்து வாழ வேண்டுமென்றுல், இலங்கையில் தமிழ் மக்களும் சம உரிமை பெற்று வாழவேண்டுமென்றுல், இந்த நாட்டில் சிங்கள மக்களுக்கும் சிங்கள மொழிக்கும் சிங்கள கலாசாரத்துக்கும் அரசாங்கம் எந்த மாதிரியான உதவி கொடுக்கப்போகின்றதோ அதே மாதிரியான உதவியைத் தமிழ் மொழிக்கும் தமிழ்க் கலாசாரத்துக்கும் கொடுப்பது அரசாங்கத்தின் கடமை. இந்த உண்மையிலிருந்து நாம் விலகக் கூடாது.

'இன்று இந்த அரசாங்கம் இருக்கலாம். நாளை வேறு அரசாங்கம் பதவிக்கு வரலாம். நாம்—இந்தச் சபையில் அங்கத்தினர்களாய் உள்ளவர்கள்—அரசாங்கத்தை நடத்துவதில் பங்கு பற்றியிருக்கிறோம். காலத்துக்குக் காலம் சட்டத்தை மாற்றுவது உகந்ததல்ல. இன்றிருக்கின்ற சூழ்நிலையில் மக்கள் மனதிலிருந்து ஒற்றுமை மனப்பான்மை பிரியாமல் இருக்க,ஒற்றுமையை என்றும் வளாக்க, ஒற்றுமை எந்தச் சமயத்திலும் இருக்க இந்தத் தேசிய அரசாங்கம் தனது கடமையைச் செய்ய வேண்டும். அந்தக் கடமையிலிருந்து இந்த அரசாங்கம் என்றும் விலகாது என்பது எங்கள் நம்பிக்கையும்கூட.

### நமது கோரிக்கை என்ன?

'ஆகையால்இந்தத்திருத்த மசோதாவை ஆதரிக்கும் அதே நேரத்தில், தமிழ் மக்களுக்கும் சமஉரிமைகொடுக்க வேண்டும். சிங்கள மக்களின் கலை, கலாசாரம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு இந்த அரசாங்கம் என்னென்ன நடைமுறைகளை வகுக்கின்றதோ அதே நடைமுறைகளை தமிழ் மக்களின் கலையையும் கலாசாரத்தையும் வளர்க்கக் கைக்கொள்ள வேண்டும் என்பதுதான் இந்தச் சபையின் எண்ணம் என்பதைப் பட்டவர்த்தனமாக நாம் வெளி உலகுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

'ஒரு விடயத்தில் கடைசியாகப்பேசிய கௌரவ உறுப்பினர் பிழை செய்கிறார். தமிழ் மொழி வேறு நாடுகளிலும் உண்டு. தமிழ் மக்கள் அதிகப்படியானோர் இந்தியாவில் இருக்கின்றார்கள். அங்கு அவர்களின் கலையும் கலாசாரமும் வளர்க்கப்படுகின்றது. ஆதலால் அவற்றை இங்கு செய்யத் தேவையில்லை என்ற கருத்துப்பட அவர் பேசினுர். அது வருந்தத்தக்கது. உண்மையாக சிங்கள மக்களுடைய கலை, கலாசாரம் வளர்வதற்கு நாங்கள் ஒருபோதும் தடையாக இருக்கவில்லை. ஆனுல் அவர்களுடைய கலை, கலாசாரம் வளரும் நேரத்தில் தமிழ் மக்களுடைய கலை, கலாசாரம் வளர வேண்டாமா? நாங்கள் சகோதர மனப்பான்மையுடன் இந்த உண்மையை மனதில் ஊன்றிக் கவனிக்க வேண்டும்.

### சமத்துவம் வேண்டும்

'சபைத் தலைவரவர்களே, இந்த விடயத்தில் நீண்ட நேரம் பேசலாம். பேசுவதற்கு எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன. நான் தர்க்கரீதியாகப் பேச விரும்பவில்லை. என்னுடைய மனம் புண்பட்ட காரணத்தினுல், கடைசியாகப் பேசிய கௌரவ அங்கத்தவர்களில் சிலர் இவ்விடயத்தில் வகுப்புவாத எண்ணத்தை ஏற்படுத்தக்கூடிய முறையிலே பேசிய காரணத்தினுல் தான் நானும் இவ் விவாதத்தில் பங்கு கொள்ள நேரிட்டது.

'இந்த நாட்டிலே சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒருமித்து ஒருங்கே வாழ வேண்டுமானுல் சிங்கள மக்களுக்கு எந்தெந்தச் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ, அவ்வச் சலுகைகள் தமிழ் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டியது அவசியம்.'

---

## சங்கர் பலகை

### அல்லி

ஆசிரியர்: தமிழ்ச்செல்வன்
முகவரி:
180, லோவர் வீதி,
பதுளை.
விலை: 30 சதம்

மலையகத்து எழில் மிகுந்த காட்சிகளையெல்லாம் சேர்த்துக் குழைந்து உருக் கொடுத்தாற் போன்ற கவர்ச்சிகரமான — உள்ளத்துக்கும் உணர்ச்சிக்கும் உணவளிக்கும்-அட்டைப் படத்துடன் மலர்ந்துள்ளது மாத இதழான "அல்லி". புறத் தோற்றத்திலேயே மலர் மணமுடையதுதான் என்ற உணாவு பிறக்கிறது.

உள்ளே நுழைந்தால் நாரதர் என்ற கலகக்காரர்' அல்லி'க்கும், 'கதம்ப'மாலைக்குமிடையில் நிரந்தரபகைமையை ஏற்படுத்தும் முயற்சியில் வெற்றி பெற்றிருக்கிறுர் என்பது தெளிவாகிறது. 'கதம்பம்' என்ற பகுதி கலகலப்பாக இருக்கிறது.

மேலும் உள்ளே சென்றுல், உதயணனின் நல்ல கதையொன்று இடம் பெற்றிருக்கிறது. 'ரோஜா பூக்கள்' மலர்ந்திருக்கின்றன, ஆனுல் மணத்தைக் காணவில்லை. சினிமாப்பகுதி சிறப்பாக அமைந்துள்ளது.

அடுத்த இதழ் மேலும் சிறப்பாக இருக்கும் என்று எண்ணக் கூடிய முறையில் அறிவித்தல்கள் இடம் பெற்றுள்ளன. 'போட்டி', 'திட்டம்' என்று சில விளம்பரங்களைப் பார்க்கையில் அல்லி தொடர்ந்து மலருமா என்று கேட்கத் தோன்றுகிறது. சிறியதாக இருந்தாலும் சிறப்பாக அமைந்திருக்கிறது அல்லி.

—பூ

---

## மக்கள் குரல்

### 'கொம்புத்தேன்'

கடந்த 19-9-65 வெளியான சுதந்திரனில் ரசுரிக்கப்பட்டிருந்த 'கொம்புத்தேன்' என்னும் கதையின் உட்கருத்தைக் கதையின் அடியில் இரத்தினச் சுருக்கமாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. 'தங்கம் சாதாரண'—என்று தொடங்கி 'தேவாரத்தைப் பாடிக்கொண்டு சிவன் கோவிலை இடிக்கும் ஆறுமுகம்' என முற்றுப் பெற்றிருக்கின்றது. 'தேவாரத்தைப் பாடிக் கொண்டு சிவன் கோவிலை இடிக்கும் ஆறுமுகம்' என்பதில் கதைக்கும் இதற்கும் என்ன தொடர்பு இருக்கின்றது? எதற்காக இந்த உவமானம் அங்கு குறிப்பிடப்பட்டிருக்கின்றது?

சி. தா. பத்மநாதன்,
149 ஜம்பட்டா வீதி,
கொழும்பு-13.

[பாரதி பாடலைப் படித்துக் கொண்டிருக்கும் ஆறுமுகம், அப்பாடல்களில் வலியுறுத்தப்பட்டிருக்கும் கருத்துக்களுக்கு மாறுபட்ட நிலையில் நடந்து கொள்கிறுர் என்ற கருப்பொருளைப் பகைப்புலனுகக் கொண்டு பிறந்ததே 'கொம்புத்தேன்' இதன் உள்ளமை நிலைக்கு தமிழ் வளங்கும் இடங்களில் உள்ள 'படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோவில்' என்ற நாடோடி வழக்கு ஏற்புடைத்து இவ்வழக்கு சரிய [illegible] பட்டுள்ளது. இலக்கண வழியில் இதை 'சுற்குறிப் பேற்ற வணி'யென்பர் இலக்கணம் கற்றோர். கதையின் கருத்தை எளிதுபடுத்த இதைவிட வேறு எடுத்துக் காட்டுக் கிடையா. இதற்கு வேறு பொருள் கற்பிக்க முயலுவது அறிவுடைத்தன்று; அது நமது நோக்கமுமன்று. ஆ—ர்]

---

### தரமான சிறுகதைகள்

சுதந்திரன் சிறுகதைகள் தரமாக இருக்கின்றன. 'ஒரு துண்டு,' 'எழுச்சியின் குரல்' இரண்டும் குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றன.

ஆயினும் வேதாளத்தைத் தான் நான் முதலிற்படிப்பது.

வ. அ. இராசரத்தினம்,
மூதூர்.

---

### வாழ்க்காடி....

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

யமே. சிறந்த மனைவைராக்கியமும், விடா முயற்சியுமிருந்தால் உங்கள் எண்ணம் எங்கிருந்தாலும் ஈடேற வழியுண்டு.

---

**சில கேள்விகள்**
செல்வி அக்கா,
சுதந்திரன்
த. பெ. எண் 1183
கொழும்பு.

---

## புதிய....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடு நடக்கிறது. இங்கு சிங்களத்திலும் நல்ல முறையில் வெளியிடப் பட்டிருப்பது குறித்து பெருமகிழ்ச்சி, தமிழ் மொழி பல நாடுகளில பேசப் படுகிறது. அதனுல் பிரிட்டிஷ் நல்லுறவு நாடுகள் இலக்கிய மாநாட்டிலும் தமிழ் இலக்கியம் இடம் பெற்றுள்ளது.

வாழ்விலே பண்பாட்டுக்கு முதலிடம் கொடுத்தவர்கள தமிழர்கள். ஆதனுலேதான் 'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அஃதின்றேல் மண்புக்கு மாய்வது மன்' என்ற கொள்கையைத் தழுவி நின்றனர். மனிதனைப் பண்புடையவனுக மட்டும் காண விரும்பவில்லைத் தமிழர்கள். முழுமை பெற்ற மனிதனுக—சான்றோனுக-காணவிரும்பினர்கள் தமிழர்கள். இத்தகைய மனிதர்களும் வாழ்ந்தார்களா என்று இன்றைய சூழ்நிலையில் எண்ணத் தோன்றுகிறது. அப்படிப் பட்ட பண்பாட்டை நாம் மட்டும் வைத்திருந்தால் போதாது. உணர்ந்து பெருமைப்பட்டால் மட்டும் போதாது: அது உலகுக்கு அளிக்கப்படவேண்டும். அப்போது தான் உலகப் பண்பாடு செழிப்படையும். இப்படியான ஒரு பண்பாட்டை உலகம் இழப்பதைப் போன்ற ஒரு பேரிழப்பு வேறு இருக்க முடியாது. இவற்றைச் செய்ய இங்கிலாந்துக்கு பிரிட்டிஷ் கவுன்சிலும், பிரெஞ்சு நாட்டுக்கு அலையன்ஸ் பிரான்கைசும், செருமானிய நாட்டுக்கு ஜேமன் இன்ஸ்டிடியூட் ஒப் கல்ச்சர் போன்ற நிறுவனங்கள் உலகின் பல பாகங்களிலும் அரசாங்க உதவியோடு உண்டு. அப்படியே வேறு நாடுகளுக்கும் ஆனுல் நமக்கு ஒரு அரசில்லாத குறையால் இந்தப் பணியை நாமே மேற்கொள்ள வேண்டும். இதைச் செய்யத் தவறினுல் பெரிய தவற்றைச் செய்தவர்களாவோம். நாமே நமக்குத் துணையாக வேண்டும். இந்த அடிப்படையில் தான் மலாயா உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெறும்.

தொகுத்தவர்—
ஆ. தேவராசன்

---

### நாவலருக்கு விழா

### அரச ஊழியர் எடுக்கின்றார்

நல்லை நகர் ஆறுமுக நாவலருக்கு விழாவெடுக்கத் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் முடிவுசெய்திக்கிறுர்கள. இதற்கான ஆலோசனைக் கூட்டம் கடந்த 16-ம் திகதி கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவை டிசம்பர் நடுப்பகுதியில் நடாத்துவதென்று முடிவுசெய்யப் பட்டது. பின்வருவோர் விழாக் குழுவினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். சிற்றம்பலம் (ஆணையாளர் உள்ளூர் அரசிறைத் திணைக்களம்).

துணைத்தலைவர்: சி. செல்வத்துரை (கணக்காளர் பொது வேலைத்திணைக்களம்)

இணைச்செயளாளர்: நா. சோமகாந்தன், மா. க. கனகேந்திரன்.

பொருளாளர்: சே. வோ. காசிநாதன்.

செயறகுழு உறுப்பினர்கள்: ஆ. தேவராசன் த. சோமசுந்தரம், மு. நேமிநாதன், சி கந்தசாமி, எஸ். விக்நேஸ்வரராசா, சதாசிவம்.

முப்பது உறுப்பினர்களைக் கொண்ட நிதிக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நாவலர்கோன்

ந. சந்திரமோகன்

'மகாத்மா' என்றால் இந்தியாவுக்கு சுதந்திரம் வேண்டிக் கொடுத்த மோகனதாஸ் காந்தி அவர்களையே குறிக்கும். அதே போல் 'நாவலர்' என்றால் யாழ்ப்பாணம் ஆறுமுகநாவலர் அவர்களையே குறிக்கும்.

இற்றைக்கு சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர், நமது யாழ்ப்பாணத்திலே சைவசமயம் பெரிய ஆபத்திலே சிக்கித்தவித்தது. சைவ சமயத்தவர்களும் தங்கள் மதத்தின் மேல கொண்ட திட நம்பிக்கையைச் சற்று நெகிழவிட்டார்கள். தடுதிடென்று நூற்றுக் கணக்கானவர்கள் கிறிஸ்தவ மதத்தில் சேர ஆரம்பித்தார்கள்.

எங்கும் அமைதி. ஆனால்' அந்த அமைதியின் மத்தியிலே திடீரென ஒரு நம்பிக்கை சுடர் விட்டது. அந்த ஒளிப்பிளம்பமே நாவலர்கோன்!

ஆறுமுகநாவலர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் நல்லூரில் சாரகாத்த வேளாளர் குலத்தில் பாண்டிய மழவர் குடியில் கந்தர், சிவகாமி எனப வர்களுக்கு கடைசிப்பிள்ளையாக அவதரித்தார்.

இவர் இளமையில் நல்லூரில் உள்ள சுப்பிரமணியம் என்பவரிடம் கல்வி பயிலத் தொடங்கினர். பின்னர் இருபாலைச் சேனாதிராய முதலியாரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றார் அதன்பின் சேனாதிராயரின் மாணவரான சரவணமுத்துப் புலவரிடம் தமிழ் கற்றார். நாவலர் 'பீற்றர். பாரசிவல்' என்னும் பாதிரியாருடைய பள்ளியிற் சேர்ந்து ஆங்கிலமும் கற்றுத் தேர்ந்தார். இவருடைய தமிழ், ஆங்கிலம் என்னும் இரு மொழிப் புலமையுங் கண்ட பாதிரியார் அந்த வித்தியாசாலையில் இரு மொழிகளையுங் கற்பிக்கும் ஆசிரியராக அவரை அமர்த்திக் கொண்டார்.

இவர் 'பார்சிவல்' துரையின் வேண்டுகோளுக்கிணங்க பைபிளை அழகுற மொழிபெயர்த்தார். அதே நேரத்தில் சென்னையிலும் பைபிளை மொழி பெயர்த்துக் கொண்டிருந்தார்கள். பார்சிவல் பாதிரியாருக்குப் பெரிய சந்தேகமாக இருந்தது; ஏனெனில் தம்முடைய சபையார் சென்னை மொழி பெயர்ப்பை ஏற்கிறார்களோ அல்லது தங்கள் மொழி பெயர்ப்பை ஏற்கிறார்களோ என்பதே. இறுதியில் யாழ்ப்பாண மொழி பெயர்ப்பே சிறந்தது என்று நடுநிலைமை வகித்து ஆராய்ந்த மகாலிங்கையர் கூறி 'யாழ்ப்பாணத்தில் இவ்வளவு சிறந்த தமிழ் உண்டோ?' என்று போற்றினார். நாவலரின் திறமை தான் என்னே!

சொற்பொழிவுகள் செய்வதன் மூலமும் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுவதன் மூலமும் மற்றும் சில வழிகள் மூலமாகவும் இந்துக்களுக்கு, இந்து சமயத்தின் முக்கியத்துவத்தையும், அதற்கு ஏற்பட்டிருந்த ஆபத்துக்களைப் பற்றியும், அதைப் போக்குவதற்குரிய வழிவகைகளையும் சிறப்பாக எடுத்துரைத்து—இடித்துரைத்து வந்தார் நாவலர். இவரது சொற்பொழிவுகள் எல்லோராலும் போற்றப் பட்டு வந்தன. தமிழில் சொற்பொழிவாற்றலை முதன் முதலில் ஆரம்பித்தவர் இவர் என்றே கூறலாம்.

இவரது நாவன்மையைப் போற்றிப் புகழ்ந்த திருவாவடுதுறை ஆதினத்து பண்டாரசந்நிதிகள் நாவலர் என்ற பட்டத்தைச் சூட்டிக் கௌரவித்தார்கள்.

இவரது வசன நடை எல்லோராலும் போற்றிப் புகழப்பட்டது. பெரிய புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் இவர் மேற்கொண்டுசெய்தவையே. இந்துக் குழந்தைகளும், பெரியவர்களும் பயனடையக்கூடிய விதத்தில்—பாமரர்களும் புரியக்கூடிய வகையில் பல இந்துசமய நூல்களை அளித்துள்ளார்

நாவலர் பொது மக்களுக்கும், ஆலயங்களுக்கும், சைவ சமயத்திற்கும், தமிழ் மொழிக்கும் ஒப்பற்ற அரும் பெருந் தொண்டாற்றியுள்ளார். அதனால் தமிழும், தமிழ் மக்களும் ஆலயங்களும், சைவசமயமும் உள்ள நாள் வரையிலும் ஆறுமுக நாவலர் பெருமை அழியாது விளங்கிக் கொண்டிருக்குமன்றோ!

## மயிலே வா

—எம். ஐ. எம். தாஹிர்—

மயிலே மயிலே ஓடிவா
மகிழ்ந் தாட ஓடிவா
வெயிலில் காடெல் லாம்
விணே அலையா தோடிவா (மயிலே)

பாலில் தேன் கூட்டிப்
பருக நான் தருவேன்
தோகையில் வண்ணங் காட்டி
சோலையிலே ஆடலாம் ஓடிவா (மயிலே)

கிழக்கு வானில் அங்கே
அழகு மாலை வந்து
கலப்பு மேகம் கூட்டும்
கல கலத்தே ஆடவா (மயிலே)

முத்தாய்ச் சிரித் திருக்கும்
கொத்து மலர்ச் சோலையிலே
வித்தை பல புரிந்து
மெத்த மகிழ்ந்திடவே ஓடிவா (மயிலே)

## சில கேள்விகள்

எஸ். ஏ. ஜெயக்குமார்

1 வான் வெளி மூலம் அதாவது 'டெலிஸ்டார்' மூலம் உலகம் முழுவதும் வானொலித் தொடர்பை ஏற்படுத்தலாமென பல அறிவர்கள் கூறினர். அவர்களில் ஒருவரின் பெயரைக் கூறமுடியுமா?

2 சோடியம் பைகாபனேற்றின் நிறம் என்ன?

3 மின்கலங்களை முதன் முதலில் செய்தவர் யார்? எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

4 எந்த இடத்தில் மண்ணெண்ணைச் சுரங்கங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன?

5 ஒரு மணித்துளிக்கு ஒலி எத்தனை அடி வேகத்தில் செல்லும்?

6 இடியும், மின்னலும் ஏற்படும்போது, எது முதலில் கேட்கும் அல்லது தோன்றும்?

1 பிரிட்டிஷ் அறிவியலறிஞர் திரு. ஆர்தர் கிளாக்.

2 இது ஒரு வெள்ளைத் தூள். இதைத்தான் [illegible] சோடா என்று கூறுகின்றோம்.

3 உவோற்றா என்பவர். இவர் இத்தாலிய நாட்டவர்.

4 மத்திய கிழக்குப் பகுதிகளில்.

5 அமைதியான காற்றில் ஒரு செக்கனுக்கு 1,100 அடி வரை.

6 மின்னல்தான் முதலில் [illegible] ஒலியின் வேகத்திலும் பார்க்க ஒளியின் வேகம் அதிகம்.

'மண்ணிற்கு பேலே'

புதிய வளர் கதை

அரியாலையூர்
த. இந்திரலிங்கம்
எழுதுகிறார்

?. ?. ? ?

## ஏக்கம் பறந்ததம்மா...!

கல்முனை-நோ. மணிவாசகன்

நெஞ்சத்தி லிருந்த ஏக்கமெலாம்
பஞ்சாய்ப் பறந்த தம்மா-இன்று
'நிம்மதி' என்ற் ருந மா மரத்தை-நெஞ்சில்
'நம்பிக்கை' நீர்பாய்ந்து வளர்க்குதம்மா!

காலம் பல சென்றும் பூக்காத ஓர்
பூமரம் பூத்துக் குலுங்குதம்மா!-அந்த,
பொலிவில் என்னுளங் குளிருதம்மா-ஒரு
பொற் காலம் தோன்றிடப் போகுதம்மா!

தேசம் செழித்திட சாத்தியக்கூறுகள்
தோன்றுதம்மா; இன்றுதோன்றுதம்மா-தமிழ்
தாயவள் நெற்றியில் புதுமிர்-ரேகைகள்;
தவழுதம்மா; மனம் மகிழுதம்மா!

பாடிப்பல லாண்டுகள் ஆயினவோ? ஒரு
பூங்குயில் பாடிக் களிக்குதம்மா;-அந்த
வண்ணமயில் கூடஎன்ன நினைத்ததோ? தன்
தோகைவிரித் துவந்தாடுதம்மா!

நால்வகை மதமும் நல்லுறவாடிடும்
நாளின்று விடிந்த தம்மா!-ஈழ
நாடினி உலகப் பேரவையில்—புகழ்ட்டி,
நிலை நிற்கப் போகுதம்மா!

## நம்பினால் நம்புங்கள்

முதன் முதலில் கலைக் களஞ்சியம் தயாரித்து வெளியிட்ட நாடு எது?

முதன் முதலில் கலைச்சளஞ்சியம் தயாரிக்கப்பட்டது பிரேஞ்சு நாட்டில்.

ஆறு வயதிலே ஐரோப்பாவின் பெரும் பகுதியை சுற்றுப்பிரயாணம் செய்த தமிழக முன்னணி நட்சத்திரம் யார்?

செல்வி வைஜயந்திமாலா. தன் தாயார் வசுந்தராதேவியோடு சுற்றுப் பிரயாணம் செய்துள்ளார்.

கலைமானின் கொம்புக்கும் மாட்டின் கொம்புக்கும் என்ன முக்கியமான வேற்றுமை?

கலைமானின் கொம்பு ஆண்டுதோறும் வளர்ந்து உதிர்ந்து—விடும். பின்னர் மீண்டும் வளரும். ஆனால் மாட்டின் கொம்புக்கு வளர்கின்ற சத்தியுண்டு. ஆனால் விழமாட்டாது.

'கேரளம்' என்றபெயர் எப்படி வரலாயிற்று. எங்ஙனம் பொருந்தும்?

'சேரளம்' என்ற சொல்லிருந்து வரப்பட்டதாக கருதப்படுகின்றது. சேர்-அளம் என்றால் கடலை அடுத்த பூமி என்று பொருள்படும். இதனால் இப் பெயர் உண்டாயிற்று.

அத்தி பூத்தாற்போல் என்கிறோமே, அத்தி பூப்பது உண்டா?

பூப்பது உண்டு ஆனால் வெளியே தெரியாது.

'பொய்க்கும் உண்மைக்கும் நாலுவிரல் தூரம்' என்ற (உருகி) பழமொழியின் பொருள் தெரியுமா?

காதுக்கும் கண்ணுக்கும் இடையே உள்ள தூரம் தான். காதால் எத்தனையோ பொய்களைக்கேட்டாலும், கண்ணால் உண்மையை காண்கின்றோம்.

அன்னிய நாட்டுத் தூதுவர்களை கைகமிசனர் என்றும் ஸ்தானிகர் என்றும் அழைக்கின்றோம். இருவருக்கும் என்ன வேறுபாடு உண்டு?

காமன் வெல்த் நாடுகளில் உள்ள நம் தூதுவர்களை ஹைகமிசனர் என்றும் அழைப்பதுண்டு.

'சிகரெட்' என்று ஏன் அதற்குப் பெயர் வந்தது?

'சிகார்' (Cigar) என்றால் சுருட்டு. சுருட்டையே சிறு அளவில் (Cigarette) அதாவது சிறு சுருட்டு என்றுபெயர்இட்டார்கள்.

தமிழை இடமிருந்து வலமும், அரபியை வடமிருந்து இடமும் எழுதவேண்டும். சீனமொழியை எவ்வாறு எழுதவேண்டும்.?

இரண்டு மொழிக்கும் வேறுபட்டபடி. அதாவது 'மேலிருந்து கீழ்' நோக்கி எழுத வேண்டும்.

கட்டப்பொம்மனை தூக்கிலிடப் பட்ட இடம் எது?. தெரியாவிட்டால் இதோ?

'கயத்தாறு' என்ற இடம் இது தமிழகத்தில் இருக்கின்றது.



கைதடி இந்து வாலிபர் சங்கம் நடாத்திய சமயப் பரீட்சையில் மறவன்புலோசகல கலாவல்லி வித்தியாசாலை மாணவி செல்வி வி. கமலேசுவரி தங்கப் பதக்கத்தைப் பெற்றார்.

- உங்கள் பகுதியான வளர்மதியில் பிரசுரிப்பதற்கு சிறு கட்டுரைகள், நகைச்சுவைக் கதைகள், வினு விடைகள், சுவையான செய்திகள் தேவைப்படுகின்றன.
- ஒவ்வொரு விடயமும் முழு அளவு தாளில் இரண்டு பக்கங்களுக்கு மேற்படாது இருக்கவேண்டும்.
- தாளின் ஒரு பக்கத்தில் தெளிவாகவும், நிறைய இடைவெளிகள் விட்டும் எழுத வேண்டும். இவற்றையனுப்பும் கடித உறையின் வலது மூலையில் அனுப்பும் விடயம் கட்டுரையா, கதையா, வினு விடையா, செய்தியா என்பதைக் குறிப்பிட மறக்க வேண்டாம்.

எங்கே உங்கள் திறமையைக் காட்டுங்கள் பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லமகால்

மற்றும் சில திரைகளில்!

## 7வது மகத்தான வாரம்



சிவாஜி கணேசன், சரோஜாதேவி, எம். ஆர். ராதா, நாகேஷ்
மனோரமா, வி. கே. ராமசாமி, சௌகார் ஜானகி
மற்றும் பலர் நடித்த

## புதிய பறவை

இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

## கெயிட்டி (கொட்டாஞ்சேனை)

ஓடியன் (மவுண்ட் லவீனியா)
இம்பீரியல் (மட்டக்களப்பு)
வின்சர் (யாழ்ப்பாணம்)
ருத்ரா (திருமலை)

ஆகிய திரைகளில்

எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, எம். ஆர். ராதா, தங்கவேலு நடித்த



## உல்லாசப் பயணம்

# இப்பொழுது மக்களைக் கவர்ந்து வருகிருள்!

நீங்கள் இவ்விடங்களில் இவளைச் சந்தித்து விட்டீர்களா?

செண்ட்ரல் (மருதானை) ஈரோஸ் (பாமன்கடை)
ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருமலை)

★★★ தந்தையின் விருப்பத்துக்கு மாருகத் திருமணம் செய்கிறன் மகன்! ஆனல், அதன் விளைவாகக் கஷ்டப்படுவதோ வீட்டுக்கு மருமகளாக வருபவள்தான்! அவள் படித்தவள்; பண்புள்ளவள்; அடக்கமும், அன்பும், பொறுமையும் அவளுடைய அணிகலன்கள்! ஆகவேதான், இறுதியில் அவளை, இரும்புள்ளம் படைத்த மாமனரையும் இளக வைத்து விடுகிறள்

* நீங்கள் அவசியம் சந்திக்க வேண்டியவள் *



பாலா மூவிசாரின்

## படித்த மனைவி

எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, எம். ஆர். ராதா, ரங்கராவ், நாகேந்திரராவ், ஜி. வரலக்ஷ்மி, எம். ஆர். ஆர். வாசு, மனோரமா, மாஸ்டர் சுரேஷ் நடித்தது.

பாடல்கள் : கண்ணதாசன் — கதை-டைரக்ஷன் : என். கிருஷ்ணசாமி — இசை : கே. வி. மகாதேவன்

இன்றே குடும்பத்துடன் சென்று பார்த்து மகிழுங்கள்!

# புதுமை நெறியும் புரட்சிக் கருததும் பொங்கித் ததும்பும் ஒரே படம்!

அனைவரும் புகழும் 5வது வாரம்

கிங்ஸ்லி-பிளாஸா
நவா
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு)
வெம்பிளி (கண்டி)
தீவொளி (நுவரெலியா)
ராஜ் (நீர்கொழும்பு)

புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்,
சரோஜாதேவி,
நம்பியார், ரங்கராவ், பண்டரிபாய்,
ரத்னா, தங்கவேல், நாகேஷ்,
பேபி சகிலா,
நடித்த



## எங்க வீட்டுப் பிள்ளை


இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194, ஏ. இலக்கத்தில் 1965-ம் வருடம் நவம்பர் மாதம் 21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org